# சைவ விழுமியங்கள்

## விரதங்களும் விழாக்களும்



குமாரசாமி சோமசுந்தரம்

கு சோமசுந்தரம்

K. SOMASUNDARAM
JUSTICE OF PEACE
(ALL ISLAND) SRI LANKA.
REG. No: 2000/07/WP/WI/B/305.

# சைவ விழுமியங்கள்

# விரதங்களும் விழாக்களும்

K. SOMASUNDARAM
JUSTICE OF PEACE
(ALL ISLAND) SRI LANKA.
REG. No: 2000/07/WP/WIIB/305.

குமாரசாமி சோமசுந்தரம்

*ராஜி வெளியீடு*
29, முதல் ஒழுங்கை
தெஹிவலை,
கொழும்பு,
இலங்கை.

விலை : ரூபா. 100/=

Name of the Book : **SAIVA VIZHUMIYANGAL -VIRATHANGAL, VIZHAKKAL**

Subject : Saiva Religious Values

Author : **KUMARASAMY SOMASUNDARAM**

No. of Pages : 144

Paper : 16 Kg Creamwove

Binding : Duplex Board

Publication : **RAJI PUBLICATIONS**
29, FIRST LANE,
DEHIWALA, COLOMBO
SRI LANKA

Edition : First Edition

Year of Publication : 1998

Price : **SL. Rs. 100/=**

Available in India : **KUMARAN PUBLISHERS**
79, FIRST STREET,
KUMARAN COLONY,
VADAPALANI, CHENNAI - 600 026.

Laser Type : **NIRA DESIGNS**
217, Arcot Road, Vadapalani,
Madras - 600 026.

# முகவுரை

''தென்னாடுடைய சிவனே போற்றி; எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''

தமிழ் தந்த முருகன்,

இனியது எது?
கொடியது எது?
அரியது எது?
பெரியது எது?

-எனத் தமிழ் மூதாட்டி ஔவையாரிடம் கேட்டார்.

ஔவையாரும் தகுந்த விடையளிக்கவே, முருகன் மகிழ்ந்து, அவருக்கு அருள்புரிந்தார். உலகத்தவர் பொருட்டே இவ்வினாக்கள் கேட்கப்பட்டன.

அவற்றுடன் எளியது எது? என்னும் வினா தொடுக்கப் படவில்லை. காரணம், முருகனுக்குத்தான் வெளிச்சம்.

எவ்வாறாயினும், திருவள்ளுவர் வாயிலாக அதற்குரிய விடை வருவிக்கப்பட்டுள்ளது.

''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

சொல்லுதல் எளிது; சொல்லிய வண்ணம் செயல் அரிது.

வெட்டொன்று துண்டு இரண்டு. ஒரே குறளில் எளிது எது? அரிது எது? என்னும் வினாக்களுக்கு நறுக்கான பதில் தந்த வள்ளுவப் பெருந்தகை பெருந் தீர்க்க தரிசியாவார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்டவை, இன்று அதிகரித்த பெறுமானம் உள்ளவையாகத் திகழ்கின்றன.

இன்று எல்லாமே சொல்வதில்தான்- செயலில் இல்லை. சமயம் அதற்கு விதிவிலக்கு அன்று.

ஒரு புதிர்:

தத்துவத்தில் உண்டு, செயற்பாட்டில் அரிது
அறிவில் உண்டு, அனுட்டானத்தில் அரிது
போதனையில் உண்டு, சாதனையில் அரிது

அது இன்று பெரும்பாலும், போர்வையாகிவிட்டது, பாதையாக இல்லை அது எது? விடை: சமயம்.

சமயம் இன்று வாழ்கிறது. எங்கு?

சாத்திரங்களில்
பாடநூல்களில்
போதனைகளில்
பரீட்சை வினாத்தாள்களில்
அரசியலமைப்புச் சட்டங்களில்
சமயவாதிகளின் பேச்சுக்களில்

இ ற்றால் என்ன பயன்?

சமயம் எங்கு வாழ வேண்டுமோ, அங்கு வாழவில்லையே. மனித வாழ்க்கையில் சமயம் உயிர்ப்புடன் வாழ வேண்டும். சமயமே வாழ்க்கை; வாழ்க்கையே சமயம்.

இந்நிலை எய்தப்படும்போதே, சமயம் வாழ்கிறது; மக்களை வாழ்விக்கிறது எனலாம். சமயம், சமூகத்தோடு இணைய வேண்டும்.

சைவம் ஒரு தத்துவம்; ஒரு சமயம்; ஒரு வாழ்வியல்நெறி. மூன்றினதும் ஒருங்கிணைந்த, சமநிலையிலான வளர்ச்சியிலேயே சைவசமயம் முழுமைத்துவம் அடைகின்றது. தத்துவம் செயலாக வேண்டும்.

சமயம் மனித ஒழுக்கமாக வேண்டும்

வாழ்வியல் நெறியில் வாழ்வு மலர வேண்டும். சமயம்-ஆன்மிகம் வாழ்க்கையோடு செறியும் போது, வன்மிகம் மறைந்து விடும்; உண்மை, நீதி, அன்பு, அறம், சாந்தி, சமாதானம், அமைதி முதலிய நல்லனவெல்லாம் உலகில் மலர்ந்து விடும். கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் முயற்சியும் சித்திக்கும்.

விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள் என்பன சைவ சமய வாழ்வின் இன்றியமையாத அங்கங்கள்.

அவை மூடநம்பிக்கைகளோ, வெறும் சம்பிரதாயங்களோ அல்ல. அவ்வாறு கருதுவது விவேகம் ஆகாது.

வாழ்வின் நன்னம்பிக்கை முனைகள் அவை. சமயமும் சமூகமும் இணைய வழியமைப்பன.

நாளைக்குப் பொழுது விடியும், துயில் எழுவோம் என்னும் நம்பிக்கையில்தான், இரவு படுக்கைக்குப் போகிறோம்; அமைதியாகத் துயில் கொள்கிறோம். இதில் யாரும் அவநம்பிக்கை கொள்வததைக் காண முடிவதில்லை. ஆனால் சமயம் என்பதில் ஏன் அவநம்பிக்கைகள் முளைகொள்ள வேண்டும்?

வாழ்வின் ஆதாரமே நம்பிக்கைதான். நம்பிக்கைகள் தான் வாழ்வின் வளமாக்கிகள், ஊக்கிகள், தூண்டிகள், உந்துவிசைகள் ஆகும். சமயத்தின் ஆதாரமும், அடிப்படையும் நம்பிக்கையே.

நம்பிக்கையை மறுப்பவர்கள், சமயத்தை மறுக்கிறார்கள், அதன் வழி வாழ மறுக்கிறார்கள். நன்னெறியில் நின்று வாழ மறுப்பவர் களால்தான் உலகம் சீர்கெடுகின்றது; அமைதி குன்றுகின்றது. உலகம் வாழத்தகாத இடமாக மாறிவிடுகின்றது.

மனிதர்கள், ''புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம் நன்னெறியதனிற் செல்ல'', அவர்களை நெறிப்படுத்துவது, வழிபடுத்துவது சமயம். உலகினைச் சீர் செய்வது சமயம்.

சமய விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள் என்பன வாழ்க்கை யில் சைவ நெறியை அனுசரிக்கவும்; சமய அனுட்டானம், ஒழுக்கம், ஆசாரம் என்பவற்றைப் பேணிவரவும் உறுதுணையாகின்றன. வாழ்வில் சைவ மணம் கமழச் செய்கின்றன. மனிதர்க்கு மனத்திருப்தி யையும்,மகிழ்ச்சியையும் வழங்கி, வாழ்வை வளம் படுத்துகின்றன. மண்ணில் நல்லவண்ணம் வாழவும், வாழ்வாங்கு வாழவும், சமயச் சூழல் இன்றியமையாதது. அத்தகைய சமயச் சூழலை, விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள் உருவாக்கித் தருகின்றன. அந்த வகையில் சமய வாழ்வின் ஜீவநாடியாக அமைகின்றன.

விரத நாட்களிலும்; சமய விழாக்கள், பண்டிகைக்

காலங்களிலும்; கோயில் திருவிழாக்கள் நடைபெறுங்காலத்தும், ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கும், ஆசார சீலங்களுக்கும் உட்படுத்தப்படுகிறோமல்லவா? அகப் புறத்தூய்மை பேணுகிறோம். கொலை, களவு, காமம், பொய்பேசுதல், புலாலுண்ணல், மது அருந்துதல் முதலிய பாதகங்களை விலக்கிக் கொள்கிறோம். குறைந்த பட்சம் ஒவ்வாதனவற்றைத் தவிர்க்க வேண்டும் என்ற நினைவலைகள் ஆயினும் வந்து போகின்றன. அதனால் பாவங்கள் புரிவதற்கு அஞ்சுகின்றோம்; அன்றேல் கூச்சமாவது படுகின்றோம்.

அந்தப் புனித நாட்களில் சில நல்லனவற்றையும், தான தர்மங்களையும் செய்கிறோம். குறைந்தது, நன்மையானவற்றைச் செய்ய வேண்டுமென்ற விருப்பமாவது நம்மில் உண்டாகின்றது. ''அறஞ் செய விரும்பு'' என்றுதான் ஔவையார் கூறினார். விருப்பம் வந்துவிட்டால், செயல் தாமாக வந்துவிடும் என ஔவையார் நம்பினார்.

பெரும்பான்மையும் இத்தகைய நற்சிந்தனைகள், நற்செயல்கள், பாவங்களை விலக்க வேண்டும் என்ற எண்ணங்கள், நன்னடத்தைகள் என்பன ஏனைய நாட்களிலும் மனிதர்களில் இடம் பெறுதல் அரிதாகவே உள்ளது. எல்லா நாட்களிலும் அவை இடம் பெற்று விட்டால் எத்துணை நன்மை பயக்கும். அறிவுள்ள மனிதரின் சிந்தனைக்கு இதனை விட்டு விடுவோம்.

எனவே, வாழ்க்கையில் சைவநெறியை ஓம்புதற்கும், நடைமுறைப் படுத்துவதற்கும், அதன்வழி மனிதர்கள் மனிதத் தன்மைகளைப் பெற்று மனிதவாழ்வு வாழ்வதற்கும் களம் அமைக்கும் விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள் என்பன எமக்கு வேண்டியனவே.

அதே வேளை, அவை வெறும் கேளிக்கைகளாகவோ, களியாட்டங்களாகவோ மாறிவிடும் நிலைமை ஏற்படாமல், அவற்றில் கண்ணுங்கருத்துமாக இருத்தல் அவசியம்.

அதற்கு, விழாக்கள், விரதங்கள், பண்டிகைகளுடன், இறைசிந்தனை, இறைவழிபாடு, இறைபணி நிற்றல் என்பன இணைய வேண்டும்.

அவற்றின் முக்கியத்துவம், உட்பொருள், வரலாற்றுப்பின்புலம்,

அவற்றை அனுட்டிக்கும் முறைகள் பற்றிய அறிவு மக்களுக்கு ஐயந்திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்.

அவை சமய நோக்குடன் சமூக நோக்கும் கொண்டு இருத்தல் வேண்டும்.

இந்நூல் சைவசமய விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள் என்பன பற்றிச் சமய, சமூக ரீதியாக விளக்கம் தருகின்றது. அவற்றை அனுட்டிக்கும் முறைகள், அவற்றின் உட்பொருள், தாற்பரியம் பற்றியும் தெளிவுபடுத்துகின்றது. வாழ்க்கையில் சைவநெறியைப் பின்பற்றுதற்கும், சைவநீதியைப் பேணிவருவதற்கும், விளக்கம் பெறுவதற்கும் இந்நூல் வழிகாட்டியாக அமையும் என்பது எனது திடமான நம்பிக்கை.

இலங்கை வானொலியார், இந்நூலில் இடம்பெறும் சைவ நற்சிந்தனைகளையும், சமயக் கருத்துரைகளையும் ஒலிபரப்பி உதவினர். எனது நன்றிகள் உரித்தாகுக.

இந்நூலினை அழகாக அச்சிட்டு வெளிவர உதவிய குமரன் பதிப்பகத்தினருக்கு எனது நன்றிகள். குறிப்பாக, குமரன் அவர்கட்கு நான் பெரிதும் நன்றியுடையேன். என்னை, இத்தகைய சைவசமயநூல் ஒன்றினை வெளியிட ஊக்குவித்த அன்பர்கள் அனைவருக்கும் நன்றிகள் பல.

எல்லாவற்றிற்கும் மேலாக எம்மை வழிப்படுத்தும் இறைவனுக்கு நன்றி.

சைவநெறியாம் அன்புநெறி நின்று வாழ்வோர் அனைவர்க்கும் இந்நூல் சமர்ப்பணம்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''

**குமாரசாமி சோமசுந்தரம்**

29, முதலாம் ஒழுங்கை,
தெஹிவலை,
கொழும்பு.
இலங்கை.

24.10.1998

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நாம் இந்தச் சரீரத்தை எடுத்தது ஏன்? | 9 |
| 2. | கடவுள் உண்டு என்பது சைவத்தின் கொள்கை | 12 |
| 3. | சைவவாழ்வு என்பது ஒழுக்க வாழ்வு | 15 |
| 4. | நன்னம்பிக்கைகள் | 18 |
| 5. | பக்தி என்றால் என்ன? | 21 |
| 6. | சைவர்கள் சிவசம்பந்திகள் | 25 |
| 7. | அஞ்சுவது அஞ்சாமை பேதமை | 29 |
| 8. | சிவம் உண்டு பயம் இல்லை | 32 |
| 9. | சிவகுடும்பம் | 35 |
| 10. | நாவுக்கரசர் நன்னெறி | 38 |
| 11. | சித்தர் சிவநெறி | 41 |
| 12. | கோயில் என்றால் சிதம்பரம் | 44 |
| 13. | நடராஜ தரிசனம் | 47 |
| 14. | ஐம் பெரும் கடமைகள் | 50 |
| 15. | சைவம் வேண்டாதது நடிப்பு வாழ்வு | 53 |
| 16. | வெள்ளிக்கிழமை விரதம் | 56 |
| 17. | தைப்பொங்கல் | 59 |
| 18. | தை அமாவாசைத் தினம் | 62 |
| 19. | தைப்பூசத் திருநாள் | 65 |
| 20. | மகாசிவராத்திரி | 71 |
| 21. | மாசிமகம் | 77 |
| 22. | பங்குனி உத்தரம் | 84 |
| 23. | சித்திரைப் புத்தாண்டு | 89 |
| 24. | வைகாசி விசாகம் | 92 |
| 25. | ஆடி அமாவாசை | 98 |
| 26. | ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி | 104 |
| 27. | ஆவணிச் சதுர்த்தி | 110 |
| 28. | நவராத்திரி விழா | 113 |
| 29. | தீபாவளிப் பண்டிகை | 120 |
| 30. | கேதார கௌரி விரதம் | 125 |
| 31. | கார்த்திகைத் தீபத்திருநாள் | 128 |
| 32. | மார்கழி நோன்பும் திருவெம்பாவையும் | 131 |
| 33. | கிராமியத் தெய்வ வழிபாடு | 138 |

# 1. நாம் இந்தச் சரீரத்தை எடுத்தது ஏன்?

சைவமக்கள் இறைவனின் திருவருளைப் பெறுவதற்குச், சிறந்த சாதனமாக வழிபாட்டினை ஏற்றுக் கொண்டுள்ளனர். இறைவனின் திருவருள் நமக்குக் கிட்ட வேண்டுமானால், இறைவனை வழிபாடு செய்ய வேண்டும். நாம் இந்தச் சரீரத்தை எடுத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம், என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கூறியுள்ளார். எம்முடைய உடல், கடவுளை வழிபாடு செய்வதற்கு வாய்ப்பாக எமக்குத் தரப்பட்டுள்ளது.

உடல் என்பது தோலும், எலும்பும், தசையும், இரத்தமும், நாடி நரம்புகளும் ஆகத் தோற்றமளிக்கின்ற இந்த தூல உடம்பினை மாத்திரம் குறிப்பதன்று. இந்த உடம்பிலுள் சூக்குமமாய் அமைந்துள்ள மனம் முதலிய உட்கருவிகளையும் உடம்பு என்று அழைக்கப் படுவதற்குள் சேர்த்துக் கொள்ள வேண்டும். மனம் முதலிய நுட்பக் கருவிகளை உள்ளடக்கிய நூதன இயந்திரத் தொகுதியாகிய இந்த உடம்பினை இறைவன் படைத்து நமக்கு வழங்கியிருக்கிறான். இந்த உடம்பினுள் செறிந்திருக்கின்ற உயிர், தன் அறிவு, இச்சை, செயல் ஆகிய மூன்றையும் செயல்படுத்துகிறது. உயிரும் உடம்பும் இணைக் கப்பட்டிருப்பதன் பிரதான நோக்கம், இறைவனை வழிபாடு செய்தற் கேயாகும். இந்த நோக்கத்தை உள்ளபடி உணர்ந்தவர்கள் இறைவனை வழிபாடு செய்கின்றனர். உய்வு பெறுகின்றனர். வந்த நோக்கத்தை மறந்து, நெறியில்லா நெறியில் செல்பவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிவிட்டு, மீளாத் துன்பங்களில் வீழ்ந்து அழுந்துகின்றனர்.

இன்பமும், துன்பமும் நமது தேட்டங்களே. இந்த உண்மையை உணர்ந்து விட்டால் துன்பங்கள் நம்மை வந்து அடையாமல் தடுத்துக் கொள்ள முடியும்.

இந்த அருமையான மனித உடம்பினைத் தந்து இறைவன் எமக்கு உதவியது, மலமாகிய அழுக்குகளையும், அறியாமையாகிய கொடிய இருளையும் நீக்கி ஒளியையும் இன்பத்தையும் பெறும் பொருட்டே என்பது உணரற்பாலது. ஆனால் நம்மில் பெரும்பாலோர் இதனை அறிந்து கொள்வதில்லை. இந்த உடம்பின் உதவியுடன், மேலும் மேலும் அழுக்குகள்தான் சேர்க்கப்படுகின்றன. கொடுமைகள்

பல புரிந்து பாவமூட்டைகளின் தொகை பெருக்கப்படுகின்றன. அதன் பயன் துன்பங்கள், துயர்களிலிருந்து மீள முடியாமல் அல்லல் படுவதுதான். நன்றாகக் கற்றவர்கள்கூட, இக்காலத்தில் அருவருக்கத் தக்க அநியாயங்களில் ஈடுபாடு கொள்வதைப் பார்க்கும்போது, இறைவனின் நோக்கத்தை அறிந்தும் அறியாதவர்கள் போல் ஏனோ நடந்து கொண்டு தீவினைகளைச் சேகரிக்கிறார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

''வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்'' சிவன் என்று சைவப் பெருமக்கள் கூறுவர். மனம், மொழி, மெய்யினால் இறைவனை வழிபடுவதற் காகவே இந்த மானிட சரீரத்தை, எம்மீது அளப்பெருங்கருணை கொண்டு, நமக்கு இறைவன் ஈந்துள்ளான் என்ற நினைப்பினை, ஒரு கணநேரமாயினும் நம்மிடமிருந்து நீங்காதவாறு நாம் பார்த்துக் கொள்ளல் வேண்டும். அதற்காக நாம் இறைவனைப் பிரார்த்தனை செய்ய வேண்டும். இருள் நீங்கிய இன்பம் பெறுதலே நமது வாழ்வின் குறிக்கோள் என்றால், நாம் வந்த வேலையைப் பார்க்க வேண்டும்; தேவையற்ற வேலைகளையெல்லாம் அணைத்து எம்மைப் பாரம் ஆக்கிக் கொள்ளக் கூடாது.

பொதுவாழ்விலும் சரி, தனி வாழ்விலும் சரி, தனக்கென ஒதுக்கப் பட்டுள்ள கடமைகளைச் செய்யாது அவற்றை அலட்சியம் பண்ணிக் கொண்டு, சம்பந்தா சம்பந்தமற்ற வேறு வேலைகளில் ஈடுபாடு கொள்வது மனித இயல்பாகி வருகின்ற ஆபத்தான சூழ்நிலையை தற்காலத்தில் காண்கின்றோம். இதற்குக் காரணம் நம்மிடையே இறையுணர்வு, ஆன்மஞானம் என்பன அருகிவருவதுதான்.

இறையுணர்வு, ஆன்மஞானம் எம்மிடம் ஏற்பட்டு விட்டால், எம்மைப் போன்றே ஏனைய மனிதர்களும் இருள்நீங்கி இன்பம் பெறுவதன் பொருட்டே இவ்வுலகில் தோன்றியுள்ளனர் என்பதை உணர்ந்து கொள்வோம். அப்பொழுது எல்லோர் மீதும் அன்பும் அருளும்; இரக்கமும், கரிசனையும் உண்டாக வாய்ப்பு ஏற்பட்டு விடும். எமது வழிபாடு, பிரார்த்தனை யாவும், நாம் வாழ்ந்து இன்பம் பெற்றால் போதும் என்ற சுயநல உணர்வு நீங்கப் பெற்று, எல்லோரும் இன்ப வாழ்வு எய்த வேண்டும் என்ற ஆன்மஞானம் நிறைந்த வழிபாடாக அமைந்து விடும்.

''எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே''
-என்கிறார் தாயுமானவர்.

சைவமக்கள் ஒவ்வொருவரும், பிறர் இன்பம் பெற வழிபாடு செய்ய வேண்டும். எனக்கு அதைத்தா, இதைத்தா என்று வழிபாடு செய்வதையே காண்கின்றோம். இந்தச் சுயநலம் மிக்க வழிபாட்டிலும்; எல்லோரும் வாழ வேண்டும், இன்புற்றிருக்க வேண்டும் என நினைந்து இறைவனை வழிபாடு செய்தலே மேலானது என்று எமது சைவசமய குரவர்கள் வழிகாட்டியுள்ளனர்.

''அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலைதானே வந்து எய்தும் பராபரமே'' சைவம் கூறும் சமூக சேவையை மனதில் கொண்டு, சேவை செய்து, சைவர்களாக வாழ்வோமாக.

# 2. கடவுள் உண்டு என்பது சைவத்தின் கொள்கை

சமய உணர்வு, கடவுள் நம்பிக்கை என்பவற்றை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டியது மிக அவசியம். சுவாசிப்பதற்குக் காற்று; குடிப்ப தற்கு நீர்; உண்பதற்கு ஆகாரம்; உடுப்பதற்குத் துணி; வசிப்பதற்கு வீடு என்பன மனிதவாழ்க்கைக்கு இன்றியமையாதன என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. அவ்வாறாயின், சமய உணர்வும், கடவுள் நம்பிக் கையும் அவற்றைவிட உயிர்வாழ்க்கைக்கு முக்கியமானவை என்பதை யும் நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

கடவுளில் பற்றும், பக்தியும், நம்பிக்கையும் உள்ளவர்கள், என்றுமே இன்பமாகத்தான் இருக்கிறார்கள்; எவ்வித நட்டமும் அடைவதில்லை.

அம்மாவோ, அப்பாவோ பக்கத்தில் படுத்திருக்கும் போது பயமில்லாமல், குழந்தை நிம்மதியாகத் தூங்குகிறது. அவர்கள் எழுந்து சென்று விட்டாலும் கூட, பக்கத்தில் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை யில் குழந்தை தொடர்ந்து துயில் கொள்கின்றது. ஏதோ விதத்தில், குழந்தைக்கு நம்பிக்கை உணர்வு அற்றுவிடும்போது, குழந்தையின் தூக்கம் கலைந்து விடுகிறது; கூடவே பயம், பாதுகாப்பு இன்மை என்ற உணர்வு எல்லாம் வந்து விடுகின்றன.

அதுபோல, ஒன்று உள்ளது என்ற நம்பிக்கை இருப்பதாலேயே, கருமங்களை ஆற்றுகின்றோம். வெற்றி நிச்சயம் என்ற உறுதியான நம்பிக்கை வேரூன்றி நிற்கும் போதுதான், செயல்களில் ஊக்கத்துடன் ஈடுபடுகிறோம்.

''தெய்வம் உண்டு'' என்று உறுதியோடு இருப்பவனுக்கு, அந்தத் தெய்வம் தமக்குத் துணைக்கு வரும் என்பதிலும் முழு நம்பிக்கை யோடு இருக்கிறான். ஒரு காரியத்தில் நமக்குப் பற்று இருந்தால்தான் அதில் முழு ஆர்வத்துடன் ஈடுபாடு கொள்கின்றோம். சரியாக நோக்கி னால் மனித வாழ்க்கையே நம்பிக்கையில்தான் நடைபெறுகிறது எனலாம். நம்பிக்கையில்லா விட்டால் வாழ்க்கையே சலித்துப் போய் விடும். பெற்றோர்கள் பிள்ளைகளைப் பெற்று, வளர்த்து, கல்வியூட்டி, ஆளாக்கி விடுகிறார்கள் என்றால் பிள்ளைகள் வளமாக வாழ

வேண்டும் என்ற நம்பிக்கையிலும்; தம்மைப் பிற்காலத்தில் பேணிப் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையிலும்தான் என்பது தெரிந்த விஷயமே. நம்பிக்கைக்கு இரண்டகம் செய்வது பாவமான காரியம்.

பானைக்குள் சோறு இருந்தால், சோறு இருக்கிறது என்ற நம்பிக்கையில் பசி எடுக்காது. பல இலட்சக்கணக்கில் முதலீடு செய்து, தொழில் ஒன்றை ஆரம்பிப்பது, இலாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான். நம்பிக்கைதான் விடா முயற்சிக்குக் காரணம். நம்பிக்கையீனம் சோம்பலுக்கு ஏதுவாகின்றது.

இவ்வாறு சின்னச் சின்ன விஷயங்களில் எல்லாம் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கும் நாம், பென்னம்பெரிய விஷயமான கடவுளில் ஏனோ நம்பிக்கை கொள்ளத் தயங்குகிறோம் என்பதுதான் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருக்கின்றது.

வேதம், சைவ சமயத்தின் பொது நூல்; பிரமாணநூல். ''வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம், நமச்சிவாயவே''- என்கிறது தேவாரம். அந்த நான்கு மறைகளின் தீர்ப்புத்தான், நமச்சிவாயத்தை நம்பினார் கெடுவதில்லை என்பது.

வேதம் என்ற சொல்லுக்குப் பொருள், நாம் அறியாதவற்றை அறிவிப்பது என்பதாகும். இந்தப் பரந்த உலகில் நாம் அறிந்து கொள்ள முடியாத விஷயங்கள் அனந்தம். ''கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு'' என்பர். ''கண்களால் காண்பதே மெய்; காணாதவை பொய்'' என்கின்றனர். எம்முடைய முதுகுப்புறம், எம் கண்களுக்குத் தெரிவதில்லை. அதனால் முதுகு இல்லை என்று கூறிவிடமுடியுமா? பகலிலே, நட்சத்திரங்கள் எம் கண்களுக்குத் தெரிவதில்லை. அதனால் ஆகாயத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று கூறுவது எத்துணை அறியாமை. வயிற்று வலியால் அவஸ்தைப்படுபவர் துடிப்பதைப் பார்க்க முடிகிறதே தவிர, அந்த வலியைக் கண்களால் காண முடிவதில்லை. இவ்வாறு நம் கண்களுக்குப் பல விஷயங்கள் தெரிவதில்லை. அவை ஊனக்கண்கள். அவற்றின் ஆற்றலுக்கும் எல்லை உண்டு. அப்படியிருக்க, எமது ஊனக் கண்களுக் கெல்லாம் அப்பாற்பட்ட; எமது மனம், வாக்கு, காயத்திற் கெல்லாம் எட்டாத, ஆனால் உய்த்து உணரும்படியான அற்புத விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றை இல்லை என்பதால் எமது அறிவீனமும் மடமையும்தான் வெளிப்பாடாகும்.

மூடநம்பிக்கை கூடாதுதான். ஆனால் நன்னம்பிக்கை வேண்டுவதே. அது நம்மை வாழ்விக்கின்றது. பொதுவாகப் பற்று நல்லதன்று என்று கூறப்படுகிறது. ஆனால் கடவுளில் பற்றுக் கொண்டால், மற்றைய பற்றுக்கள் நீங்கி விடும்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''
-என்பது வள்ளுவம்.

மனிதன் நன்னெறியில் வாழச் சைவநெறி வழிகாட்டுகின்றது. கடவுள் பற்றும், சமயப் பற்றும் மக்களிடையே ஏற்பட வேண்டும். இறைவனில் நம்பிக்கை கொள்ளவேண்டும். அந்த நன்னம்பிக்கையுடன், இறையருள் துணை கொண்டு நல்ல காரியங்களைப் புரிந்து நலமாக வாழ்வோமாக.

# 3. சைவ வாழ்வு என்பது ஒழுக்க வாழ்வு

சைவநெறி நமக்கு ஒழுக்கத்தைச் சொல்லித் தருகிறது.

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்''

-என்கிறார் வள்ளுவப் பெருமான்.

இந்த உலகத்தில் யார் உயர்ந்தவர்? என்றால் அதற்குச் சரியான விடை, ஒழுக்கமுடையவர்களாக வாழ்பவர்கள் என்பதே ஆகும்.

ஒழுக்கம், ஒழுக்கம் என்று எல்லோரும் கூறுகிறார்களே, அப்படியென்றால் என்ன, என்று சிலர் கேட்கலாம். இந்த இடத்தில் தான், நமது சமயம், ஒழுக்கம் என்றால் என்ன; எது ஒழுக்கம், எது ஒழுக்கயீனம்; நல்லொழுக்கம் உள்ளவர்கள் அடையும் நன்மைகள் யாவை, கூடாவொழுக்கத்தினால் ஏற்படும் தீமைகள் எவை என்பவற்றிற்கு விடைகாணவும், விளக்கம் பெறவும் நமக்கு உதவுகின்றது.

சைவம் நமது சமயம். சமயம் என்றால் நெறி, வழி, பாதை என்று பொருள் கொள்வர். நமது செம்மையான, ஒழுக்கமான, சீரான வாழ்க்கைக்கு வழி காட்டுவது சைவம்.

சைவம் சிவசம்பந்த முடையது. சிவம் என்பது அன்பு ஆகும்.

''அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே'' என்பது திருமூலர் திருவாக்கு.

சைவசமயம் என்பது அன்புச் சமயம். சைவ நெறி ஆனது அன்புநெறி. சைவ ஒழுக்கம் என்றால் அன்பு ஒழுக்கம் ஆகும்.

சர்வம் சிவமயமாகக் கண்டு போற்றுவது சைவர்களின் கடமை. அப்படியாயின் இவ்வுலகில் உள்ள எல்லாச் சீவராசிகளையும், உயிரற்றவைகளையும் அன்புமயமாக காணுந்திறன் படைத்தவர்கள் சைவர்கள்.

''எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே''.

தன்னுயிர் போல, மன்னுயிரையும் எண்ணி எவ்வித பேதமும் இன்றி, எல்லோர் மீதும் அன்பு, இரக்கம், கருணை, கரிசனை, நட்பு என்பவற்றைக் கொண்டு ஒழுகுதல், சைவ ஒழுக்கத்தின் உயிர்நாடி ஆகும்.

அன்பினை முதலாகக் கொண்டு எமது வாழ்க்கையை நடத்தும் போது, நாம் ஒழுக்கமுடையவர்கள் ஆகின்றோம். உயர்ந்தவர்கள் ஆகின்றோம் சைவம், அன்பு வாழ்க்கையைத்தான் வற்புறுத்துகிறது.

சைவர்கள், சிவம் பெருக்குபவர்கள் ஆவர். சிவம் பெருக்குதல் என்பது அன்பைப் பெருக்குதல், ஆகும். பணிவு, பொறுமை என்னும் பண்புகள் அன்பைப் பெருக்க உதவும். கருணை, இரக்கம், தயை, தாட்சண்யம் நிரம்பப் பெற்றவர்களே, மனிதருள் உயர்ந்தவர்கள். எம்மிலும் பலம் குறைந்தவர்கள் மீது நாம் கருணை உடையவர்களாக இருத்தல் வேண்டும். எம்மை எதிர்த்து பகைமை கொள்பவர்களுக்கும் கருணை காட்ட வேண்டும்.

பிறருக்கு இம்சை செய்யாது வாழ்தலே சைவவாழ்வு. கொலை, களவு, கள், காமம், பொய் என்பன தவிர்த்து வாழ்தலே, ஒழுக்க வாழ்வு. அவை பிறருக்குத் தீங்குகளை விளைவிப்பதால், ஒழுக்கமாக வாழ விரும்புபவர்கள், அப்பாதகங்களை வெறுத்து ஒதுக்குகிறார்கள். பழிபாவங்களை அறவே நீக்கி, சீலங்களை வாழ்வில் மேற்கொள் பவர்களே ஒழுக்கம் நிறைந்தவர்கள். அவர்களையே சைவம் உயர்ந்த வர்கள் எனப்போற்றுகின்றது.

ஒழுக்கமுள்ளவர்கள் நீதிக்குக் கட்டுப்பட்டவர்கள்; தர்மம் செய்பவர்கள். நீதிக்குப் புறம்பான காரியங்களைச் செய்ய மாட்டார் கள். தர்மம் என்பது அவரவர்களுக்குரிய கடமைகள். அக்கடமை களைச் சரிவரச் செய்தலே சிறந்த ஒழுக்கம்; அதுவே மேலான தவம். ''தவம் செய்வார் தங்கருமம் செய்வார்'' என்பது வள்ளுவம்.

எவருக்கும் இடையூறுகள் இன்றி, தத்தம் கடமைகளையும், கருமங்களையும் ஆற்றுபவர்கள் உண்மையில் தவம் செய்பவர்கள் ஆவர். ஒழுக்கமாக வாழ்தல் என்பது தவம்.

ஒழுக்க வாழ்வு சிறுபராயத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். வீட்டில்தான் அது ஆரம்பிக்கிறது ''இளமையில் கல்வி சிலையில் எழுத்து'', என்பார்கள். பெற்றோர்கள் அதனைக் கவனித்து,

பிள்ளைகள் ஒழுக்கமாக வாழப் பயிற்றுதல் மிக அவசியம். ''நேர அவகாசம் இல்லை'' என்று வழக்கம் போலப் பெற்றோர்கள் சொல்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். குழந்தைப் பருவத்திலிருந்தே ஒழுக்க விழுமியங்களையும், மானுடப் பண்புகளையும், உயர்ந்த குறிக்கோள்களையும், சீலங்களையும் குழந்தைகள் உணர்ந்து கொள்ளும்படி செய்தால், அவர்கள் நிச்சயம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு ஒழுகுவர். பெற்றோரும் தமது சிறந்த கடமையை நிறைவேற்றிய நிறைவினைப் பெறுவர்.

சைவ வாழ்வு என்பது ஒழுக்க வாழ்வாகும். ஒழுக்க வாழ்வு தான் சைவ வாழ்வு என்பதை நாம் உணர்தல் அவசியம் ஆகும்.

# 4. நன்னம்பிக்கைகள்

சைவசமயத்தவர்கள் பண்டுதொட்டுப் பல சம்பிரதாயங் களையும், ஆசாரங்களையும் அனுட்டித்து வருகின்றனர். அவ்வாறு மேற்கொள்வதால் நன்மைகளையே அடைந்தனர். இவை எழுத்தில் எழுதப்படாதவை. எனினும் பரம்பரை பரம்பரையாகக் கைக்கொள் ளப்பட்டு வருபவை. சம்பிரதாயங்கள் பலவற்றிற்கு விஞ்ஞான பூர்வமான விளக்கங்களையோ, காரணங்களையோ தந்துவிட முடியாது. அவ்வாறு தரமுடியாதமையினால், அவை பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை என்றும், மூடப்பழக்க வழக்கங்கள் என்றும் அவற்றை விலக்கி வைப்பாரும் உளர். சிலர் சம்பிரதாயங்களுக்கும் ஆசாரங் களுக்கும் விஞ்ஞான விளக்கங்கள் தருவதற்கு முயன்று பார்க்கின்றனர். இவ்வுலகில் உள்ள எல்லாவற்றிற்குமே விஞ்ஞான விளக்கம் வழங்க்க் கூடிய நிலைக்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட வில்லை. விஞ்ஞானம் வளர்ந்து வருகின்றது; ஆனால் முழுவளர்ச்சி பெற்றுவிடவில்லை.

இன்றைய உலகில், எம்மால் புரிந்து கொள்ள முடியாதவை, விளக்கம் சொல்ல இயலாதவை ஏராளம் இருக்கின்றன. அதனால் அவற்றையெல்லாம் பொய் என்றோ மூடநம்பிக்கைகள் என்றோ தள்ளிவிடமுடியுமா? சம்பிரதாயங்கள், ஆசாரங்கள், சமய ஒழுக்கங்கள், நம்பிக்கைகள், மரபுகள், பாரம்பரியங்கள் என்பன தொன்றுதொட்டு, பரம்பரையாகக் கைக்கொள்ளப்பட்டு, தற்காலச் சந்ததியினர் வரை கடைப்பிடிக்கப்பட்டு வருபவை. அவை மனித சமுதாயத்திற்கு ஒ ்வாதனவென்றால், எப்பவோ கழிந்து போயிருக் கும். அவை பயன் உள்ளனவாக இருந்து வந்தமையினாலும், மனித சமூகத்தை வாழ்வித்து வந்தமையினாலும் தான் இற்றைவரை நிலைத்து நிற்கின்றன. அவை அனுபவத்திரள். வாழ்க்கை அனுபவங் களாகத் தொடர்ந்து வருபவை. பண்பாடாக ஒட்டிக் கொண்டவை. காலத்தை வென்று நிற்பவை. எனவே, அவற்றை நாமும் அறிந்து, வாழ்க்கையில் கடைப்பிடிப்பதால் நன்மையே பெறுவோம். மூட நம்பிக்கைகள் எனத் தள்ளிவிடுவதால். முன்னோரின் அனுபவங் களை அலட்சியம் செய்தவர்கள் ஆவோம். அவர்களின் அனுபவங் களிலிருந்து பெறக்கூடிய வாழ்க்கை நலன்களை ஏன் நாம் இழக்க வேண்டும். நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வங்கள் பேணிப்

பாதுகாக்கப்பட வேண்டியன சைவசமய ஆசாரங்கள், ஒழுக்கங்கள் என்பவற்றை அறிந்து பின்பற்ற வேண்டியது நமது கடமை.

சைவ ஆசாரங்கள், நம்பிக்கைகள், என்பன சிலவற்றை இனி நோக்குவோம்.

பெரியோர் தரும் பொருளை ஒரு கையால் வாங்கக்கூடாது. சான்றோர்க்கு ஒரு கையால் ஒன்றைக் கொடுக்கக் கூடாது.

மாலைப்பொழுதில்- அதாவது பகலும் இரவும் அல்லாத இரண்டுங்கெட்ட நேரத்தில் படுத்து உறங்குதல்; வழிநடந்து செல்லுதல்; உணவு உண்ணுதல் என்பன தவிர்க்கப்படவேண்டும்.

படுக்கும்போது இறைவனைக் கைகுவித்து வணங்கி, வடக்குத் திக்கிலும், கோணத்திசையிலும் தலையை வைக்காமல் படுத்தல் முறையாகும்.

புல், விளைநிலம், பசுச்சாணம், இடுகாடு, வழிப்பாதை, தீர்த்தம் உள்ள இடம், ஆலயம், நிழல் உள்ள இடம், பசுக்கள் நிற்கும் இடம், வெண்மையான சாம்பல் ஆகிய பத்து இடங்களிலும் மலசலம் கழித்தல், எச்சில் உமிழ்ந்து துப்புதல் ஆகாது.

ஒருவர் ஓரிடத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் போது பின் நின்று கூப்பிடக்கூடாது; தும்மக்கூடாது; மறந்தும் ''எங்கே போகிறீர்?'' என்று கேட்டல் ஆகாது.

திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில் ஆடவர்களும்; செவ்வாய், வெள்ளி நாட்களிலும் பெணகளும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யலாம். அமாவாசை, பௌர்ணமி, சிரார்த்தம் முதலான கர்மங்கள் செய்யும் நாட்கள், ஜன்மநட்சத்திரம், விரததினங்கள், உபவாச காலங்கள் ஆகியவற்றில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கூடாது.

அட்டமி, நவமி, அமாவாசை, பௌர்ணமி, கிரகண காலம், ஜன்ம நட்சத்திரம், மஹாளய பட்ச காலம், மாதப்பிறப்பு, வெள்ளிக்கிழமை ஆகிய காலங்களில் முடிவெட்டுதல், சவரம் செய்தல் ஆகாது.

வீட்டில் ஒரு பொருள் இல்லையென்றால் அதை எவரிடமும் 'இல்லை' என்று சொல்லாமல், அப்பொருளை வாங்கி வாருங்கள்

என்று கூறவேண்டும்.

இரவில் வீட்டைக் கூட்டவோ, கூட்டியள்ளிய குப்பையை வீட்டுக்கு வெளியே கொண்டுபோய் கொட்டவோ கூடாது. இவ்வாறு செய்தால் வீட்டில் இலட்சுமீகரம் போய்விடும்.

தலையை விரித்துப் போட்டுக் கொண்டு வீட்டில் உட்காரவோ, நடக்கவோ, வெளியில் செல்லவோ கூடாது. மங்கள காரியங்களின் போது அவிழ்த்து விரித்த கூந்தலுடன் காட்சியளிக்கக் கூடாது.

எரிகின்ற விளக்கையோ, தீபத்தையோ வாயினால் ஊதி அணைக்கக் கூடாது.

இரவு நேரங்களில் மரங்களின் கீழ் தங்குதல் ஆகாது.

குடும்பத்தவர், நண்பர், உறவினர் ஆகியோரைத் தூர இடங்களுக்கு வழியனுப்பிய பின்பும் வீட்டில் சுப காரியங்களை நடத்திவிட்டும் உடனே, வீடு கழுவுதல், ஸ்நானம் செய்தல் ஆகாது.

வெள்ளிக் கிழமைகளிலும், மற்றும் நாட்களில் இரவு வேளைகளிலும் வீட்டில் இருந்து பணம்,பொருட்கள், நூல்கள் ஆகியவற்றை எடுத்துப் பிறருக்குக் கொடுக்கக் கூடாது. இரவில் வேஷ்டி, துணிவகைகளைத் துவைக்கக் கூடாது. பூமியை உழுதல், வெட்டுதல், இரகசியம் பேசுதல் என்பவையும் இரவில் செய்தல் தவிர்க்கப்படவேண்டும்.

இவ்வாறு ஒழுகினால் வாழ்வில் சுகமும் சுபீட்சமும் பெறலாம் என ஆசார நூல்கள் கூறுகின்றன.

# 5.பக்தி என்றால் என்ன

சமய பக்தி, இறைபக்தி, பக்திமார்க்கம் என்றெல்லாம் பேசுகின்றோம். பக்தி என்றால் என்ன? என்றும் பலர் வினா எழுப்புகின்றனர். அனுபவம் மூலம் தெளிய வேண்டியவற்றிற்கு அறிவுபூர்வமான வரைவிலக்கணம் தந்து கொள்ளமுடியாது. பக்தி, சமயம், என்பன அனுபவங்கள். இன்றைய நவீன உலகில் எதற்கெடுத்தாலும் அறிவு பூர்வமான விளக்கத்தை எதிர்பார்க்கிறார்கள். கடவுள், பக்தி, சமயம் என்பவற்றிற்கு அறிவுபூர்வமான விளக்கம் தருதல் அத்துணை எளிதன்று. சிலர் தான்தோன்றித்தனமாக அவற்றிற்கு விளக்கத்தைத் தர முயன்று சமயத்தைக் கெடுத்து விடுகின்றனர். மாம்பழம் இனிப்பாக இருக்கின்றது, பாகற்காய் கசப்பாக இருக்கின்றது. இவற்றிற்கெல்லாம் ஏன்? எப்படி? என்று விளக்கம் கேட்டு நேரத்தை வீணாக்குகிறார்களா? அனுபவத்தால் அறியப் படவேண்டியவற்றிற்கு அறிவுபூர்வமான விளக்கத்தைக் கேட்பது தேவையில்லாதது.

பக்தி என்பதை முழுமையாக அறிந்து கொள்ள அனுபவம் மூலம்தான் சாத்தியமாகும். கண்ணப்ப நாயனாரின் பக்தி, சாக்கிய நாயனாரின் பக்தி, பூசலார் நாயனாரின் பக்தி, சண்டேசுரநாயனாரின் பக்தி, சிறுத்தொண்ட நாயனாரின் பக்தி என்பவற்றை வெறுமனே அறிவுகொண்டு தெளிந்து கொள்ள முடியாது.

பக்தி என்பதை வரையறை செய்ய முடியாவிட்டாலும், சமய நூல்கள் பக்தி பற்றியும், அதன் உயர்வு பற்றியும், பக்தி வெளிப்பாட்டு வழிகள் பற்றியும் எடுத்துக் காட்டியுள்ளன.

''பக்தி என்பது இறைப் பொருளிடத்துக் கொள்ளப்படும் மிக உயர்ந்த அன்பு ஆகும். ''இறைபக்தி என்பது பக்தன், தான் உலகில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், தம்மால் ஆற்றப்படுகின்ற பணிகள், செயல்கள், தொழில்கள் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, யாவற்றையும் இறைவன் பணியெனப் புரிகின்ற பக்குவநிலையாகும். யாவுமே இறைவன் பணிகளாகக் கொள்ளும்போது, மனித செயற்பாடுகள் தூய்மைநிலையை எய்துகின்றன.

பக்தி ஒருவனுக்கு முழுமையாகச் சித்திக்க வேண்டுமானால் பற்றிலிருந்து விடுதலை பெறவேண்டும். அதற்குத் தன்னலத்தைத் துறக்க வேண்டும். அன்பின் மேலீட்டினால் தாம் செய்கின்ற

தொண்டினை விடாமல் செய்தல் அவசியம். பக்தன், உலக இன்ப துன்பங்கள் இரண்டிலிருந்தும் விடுபட்டவன். அவன் செய்கின்ற பணிகள் அனைத்தும் விடுபட்டவன். அவன் செய்கின்ற பணிகள் அனைத்தும் இறைப்பணிகள். அவற்றின் பலாபலன்களும் இறைவனுக்கே அர்ப்பணிக்கப்படுகின்றன.

''சித்தம் சிவமாக்கிச் செய்தனவே
தவமாக்கும் அத்தன்''

- என்ற திருவாசகம் இங்கு நோக்கற்பாலது. பக்தர்கள் தம் சித்தத்தைச் சிவமாக்கிப் பொழுதைத் தவம் ஆக்குகின்றனர். அவர்கள் எதையும் அவம் செய்வதில்லை. அவர்கள் யாவரையும், யாவற்றையும் தூய்மை செய்கின்றனர்.

பிறருடைய துன்பங்களையும் துயர்களையும் துடைப்பதற்காகத் தம்மையும் தம்மைச் சார்ந்த எல்லாவற்றையும் விருப்பத்துடன் தியாகம் செய்யத் தயாராக உள்ளவனே பக்தன் ஆவான். இதற்கு என்ன காரணம் என்று ஆராயின், பக்தன் ஆனவன் எந்தப் பரம் பொருளிடம் தமது ஆழ்ந்த பக்தியைச் செலுத்துகிறானோ, அந்தப் பரம்பொருளை எல்லா உயிர்களிடத்திலும் காண்கின்ற தன்மையே அதன் காரணம் என்பது தெரியவரும். மக்கள் தொண்டு மகேஸ்வரன் தொண்டு ஆகின்றது என்பது அவர்களின் நம்பிக்கை.

பத்தனிடம், உயர்வு தாழ்வு; பெரிது சிறிது என்னும் பாகுபாட்டினைக் காண முடியாது. எல்லா உயிர்களிலும் ஒரே இறைவன் தான் குடிகொண்டிருக்கிறான் என்னும் நம்பிக்கையுடன் வாழுகின்ற பக்தனால் எவ்வாறு மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வுகளைக் காண முடியும். சமயரீதியில் பார்க்கப்போனால், பக்தி ஒன்றுதான் எல்லா வித வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் கடந்த நிலையில் ஆன்மஞானத்தை எளிமையாக்கி யாவராலும் அடையப்படக்கூடிய வழியைக் காண்பிக்கிறது எனக் கொள்ளலாம்.

இறைவன் சந்நிதியில் சென்று, பலர் முன்னிலையில் கண்ணீர் விட்டு, அழுதுபுலம்பி, பரவசக் கூத்தாடுவது மட்டும்தான் பக்தி என்று எண்ணிவிடலாகாது. பக்தன் உண்மையில் ஒரு தொண்டன். பிறருக்கு இடைஞ்சல் தரும் செயல்களையோ ஆலயத்தின் அமைதியையும், புனிதத்தையும் கெடுக்கக் கூடியவற்றையோ பக்தன் ஒருபொழுதும் செய்யமாட்டான்.

உண்மைப்பக்தர்கள், பக்தியில் மாத்திரமல்ல, பண்புடைமையிலும் சிறந்து விளங்குவர். தம்மையார் என்று பிறருக்குக் காட்டிக் கொள்ள மாட்டார்கள். அடக்கம், அமைதி, எளிமை, இனிமை, அன்பு, இரக்கம், நேர்மை, தூய்மை, நடுவுநிலைமை போன்ற தெய்வீகப் பண்புகளைப் பேணி வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுபவர்களே பக்தர்கள். புறச்சின்னங்களையும், வேடங்களையும் தரித்துக் கொண்டால் மாத்திரம் ஒரு பக்தன் ஆகிவிடமுடியாது. அவன் பக்திக் குரிய ஒழுக்கத்தையும் பேணிவரவேண்டும். சுருக்கமாகக் கூற வேண்டுமாயின் பக்தன் என்பவன், ''தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்'' ஆவான். பக்தன், அடியவன், தொண்டன் என்று முத்திரை பதித்துக் கொண்டு, மனிதப் பண்புகளைப் புறக்கணித்து சுயநலமி களாக வாழ்பவர்கள் நமது சமயத்திற்கு இழுக்கைத் தேடித்தந்தவர்கள் ஆவர். பக்தனின் வாழ்வு தியாக வாழ்வு; தன்னலம் சிறிதும் இல்லாத வாழ்வு; பிறருக்கு இடையூறுகளைத் தராத வாழ்வு; பிறர்நலம் பேணும் வாழ்வு; நடிப்பு அற்ற வாழ்வு என்பதை உணர்வு கொள்வோமாக.

நாம் கடவுளைப் பக்தி செய்கின்றோம், என்றால் கடவுள் செறிந்துள்ள எல்லா உயிரினங்களையும், உயிர் அற்றவைகளையும் எந்த வேற்றுமையும் இன்றிப் பக்தி செய்வதாலேயே, அது எய்தப் படுகின்றது. கடவுளைப் பிரித்துப் பார்த்துக், கடவுளை மட்டுமே பக்தி செய்து, கடவுளின் படைப்புக்களை வெறுக்கின்ற தன்மை பக்தியாகாது. எல்லா உயிர்களிலும், எல்லாப் படைப்புக்களிலும் கடவுளைக் காணும் பேறுபெற்றவனே தலைசிறந்த பக்தன்.

மனம், வாக்கு, உடல் என்பவற்றால் எவரிடமும் பகைமை இல்லாது இருத்தல், பக்தி. யாருடைய உள்ளம், கருணை, அருள், அன்பு, இரக்கம் என்பவற்றால் கசிந்து உருகி, பாய்கிறதோ, அங்கு பக்தி குடிகொள்கிறது. அத்தகையவர்களே பக்தர்கள். இந்தக் கருணை உள்ளம் இல்லாமல், தம்மைப் பக்தர் எனப் புறத்தோற்றங்களால் காட்டிக் கொள்வது வெறும் வேஷமே தவிர விசுவாசம் அல்ல.

எவன் நற்குணங்களையே விரும்பி, நல்லொழுக்கத்தையே மேற்கொண்டு, பிறருக்கு நன்மை தரக்கூடிய காரியங்களையே செய்து, புனித வாழ்வினை நடத்துகிறானோ, அவனே பக்தன். அவனின் சித்தம் சாந்தமாக, அமைதியாக இருக்கும். ஆசை அலைகள் மோது வதில்லை. காரணம், அவன் தனது இந்திரியங்களுக்கு இடம்

கொடுக்கமாட்டான். பஞ்சப்புலன்கள் அவனை ஏமாற்றமுடிவதில்லை.

யார் ஒருவன் எல்லோருடனும் பணிவாகவும், பண்பாகவும், இனிமையாகவும், இதமாகவும் நடந்து கொள்கிறானோ, அவனே பக்தன். அவன் மேற்கொள்வதுதான் பக்திநெறி.

பிறர் சந்தோஷமாகவும், சகல பாக்கியங்களுடனும் வாழ்வதைக் கண்டு, எவன் பூரிப்பு அடைகின்றானோ, அவன் உண்மையான பக்தன். பிறர் சந்தோஷப்படுவதைக் கண்டு பொறாமை கொள்ளாது, பொறுத்துக் கொள்வது தற்காலத்தில் காணமுடியாத காட்சி. அந்த நிலையிலிருந்து விலகி, மற்றையோர் மகிழ்வதைக் கண்டு, தானும் ஆனந்தம் கொள்ளுதல் பக்தனின் இலட்சணம்.

எவன் திருட்டு, வன்செயல்கள், மது அருந்துதல், காமங்கொள்ளுதல், பொய்பேசுதல் ஆகிய பஞ்சமாபாதகங்களில் தன்னை மறைமுகமாக ஈடுபடுத்திக் கொண்டு, பக்தனாக நடிக்கின்றானோ, அவன் பிறரை ஏமாற்றுகின்றான். அவன் ஒருபோதும் கடவுளால் விரும்பப்படுகின்ற பக்தன் ஆகமாட்டான்.

பெற்றோருக்கு உதவிக் கொண்டிருப்பவன்; இல்லறத்தை இனிதே நடத்துபவன்; பிறர்மீது கரிசனை கொள்பவன்; தமது சமூகக் கடமைகளையும், தொழில் கடமைகளையும் முட்டின்றிச் செய்து முடிப்பவன்; ஏழை எளியோருக்கு இரங்குபவன்; பிறரின் அமைதியைக் கெடுக்காத இயல்புடையவன் எவனோ, அவன்தான் ஆன்மஞானி; சிறந்த பக்தன்; பக்திநெறியில் தம்மை இணைத்துக் கொண்டவன் எனலாம்.

திருக்கோயிலுக்குச் சென்று அசுத்தமாக நடந்துகொள்பவர்; பிறரின் அமைதியைக் கெடுப்பவர்; செய்யத் தகாதனவற்றைச் செய்பவர், திருக்கோயிலின் பக்தியான சூழலை அவமதிப்பவராகவும், மாசுபடுத்துவராகவும் வந்துவிடுகின்றனர். பக்தியை உணர்ந்து, பக்திநெறியில் நின்று, பக்தனாக வாழ எமக்கு அருள் புரியுமாறு இறைவனைப் பிரார்த்திப்போமாக.

# 6. சைவர்கள் சிவசம்பந்திகள்

சைவம் எமது சமயம். சைவசமயத்தின் முழுமுதற்கடவுள் சிவபெருமான். சைவம் சிவசம்பந்தம் உடையது. சிவம், அன்பு சம்பந்தமுடையது. ''அன்பே சிவம்'' என்பது திருமூலர் வாக்கு.

அன்பையே, சிவம் ஆகக் கொள்கின்ற சைவ சமயத்தவர், அன்பு நெறிநின்று வாழ்பவர்கள். சைவசமயம், அன்புச்சமயம் ஆகும். சைவநெறி அன்புநெறியாகும்.

இவ்வுலகத்தின் கர்த்தா சிவபெருமான். வியாசமுனிவர் இறைவனைக் கர்த்தா என்று குறிப்பிடுகிறார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான், தாம் யாத்த முதலாம் சைவ வினாவிடையிலே, ''உலகத்துக்குக் கருத்தா யாவர்?'' எனும் வினாவை எழுப்பி, உலகத்துக்குக் கருத்தா ''சிவபெருமான்'' என்று விடையையும் தந்துள்ளார்.

இங்கு ''கருத்தா'' என்பதன் கருத்து என்ன, என்பதை முதலில் நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

கருத்தா என்பதன் பொருள் முதல்வன், மூலவன், ஆக்கியோன், படைத்தோன் என்று கொள்ளலாம்.

இந்த உலகம் உள்ளிட்ட இப்பிரபஞ்சத்தையும், அங்கு வாழுகின்ற உயிரினங்கள் அனைத்தையும், அவற்றின் உயிர்வாழ்வுக்குத் தேவையான சகலவற்றையும், மற்றும் அவை அனுபவிப்பதற்கு வேண்டிய போகங்களையும் படைத்தவனையே கருத்தா என்கின்றோம். அந்தக் கருத்தாவையே கடவுள், இறைவன் பரம்பொருள், பிரம்மம் என்றெல்லாம் அழைக்கிறோம். சைவர்கள், சிவம் என்கின்றனர்.

எமக்குக் கடவுள் ஒருவரே.

''ஒன்றவன் தானே'' என்றும்

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்றும் சைவத்தின் மறையாகவும் முறையாகவும் விளங்கும் திருமந்திரம் அறிவிக்கிறது.

''ஏகம் சத்...'' -என்கிறது வேதம்.

''உண்மை ஒன்றே'' என்பது இதன் பொருள். அந்த ஒரே உண்மைப் பொருள்தான் பரமபதியாக விளங்குகின்ற, சிவ பெருமான்.

இந்த உலகம், அதன்மீதுள்ள உயிரினங்கள் மற்றும் உயிரற்ற பொருள்கள் என்பவற்றை நாம் கண்ணால் காண்கிறோம். எமது புலன்களால் அவற்றை அறிந்து கொள்ளுகிறோம். அவை உள்ள பொருள்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவை யாவற்றையும் படைத்தவன், அவற்றின் கருத்தா என்று கூறப்படுபவன் ஒருவன் உளன் என்பதை எவ்வாறு நிரூபிப்பது என்று சிலர் வினா எழுப்புகிறார்கள்.

அதற்கும் விடைகூறத்தான் வேண்டும். சைவசித்தாந்த சாத்திர வழி நின்றுதான் இதற்குத் தகுந்த விடைகூற விழைகிறேன்.

இந்த உலகம் தட்டை வடிவானதா? உருண்டை வடிவானதா? என்ற ஐயப்பாடு நீண்ட காலமாக இருந்து வந்தது. விஞ்ஞானம் அதற்கு முற்றுப்புள்ளி வைத்து, பூமி உருண்டைதான்; கோள வடிவினது; சூரியன் ஒரே இடத்திலேதான் நிலை கொண்டுள்ளது. அது தோன்றி மறைவதில்லை. பூமிதான், தன்னையும் சுற்றி, சூரியனையும் சுற்றி வருகிறது என்பதை நிரூபித்துவிட்டது. விஞ்ஞானம் தான் சொல்லி விட்டதே; ஏற்காமல் இருக்க முடியுமா? என்ன. இப்பொழுது பூமி தட்டையா, உருண்டையா, என்ற பிரச்சினையை யாருமே எழுப்புவதில்லை.

ஆனால் இந்த உலகத்தின் கருத்தாவான இறைவன் உண்டா, இல்லையா என்ற கேள்வி இன்னமும் கேட்கப்படுகிறது. மெய்ஞ்ஞானம், இறைவன் ஒருவன் உளன்; எங்கும் நிறைந்தும் வியாபித்தும் உள்ளான் என்பதை எப்பவோ நிரூபித்துவிட்டது. ஆயினும் தொடர்ந்தும் இக்கேள்வியைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். உண்மையை விளங்கிக் கொள்வதற்கும் அடிப்படை அறிவு வேண்டுமே.

இப்பொழுது, நாம் வாழும் உலகம் இயற்கையா? செயற்கையா? என்பதைத் தீர்மானித்தால், எமது பிரச்சினைக்குரிய தீர்வுகாணலை, அதிலிருந்து ஆரம்பிக்கலாம்.

உலகம் இயற்கையானது என்றால் அதில் மாற்றங்கள்,

விகாரங்கள் ஏற்படக்கூடாது. இருந்தது இருந்தபடியாய், ஒரே தன்மையுடையதாய் இருக்கவேண்டும். ஆனால் உலகம் அப்படியாக இல்லை; மாற்றங்கள், திரிபுகள் ஏற்படுகின்றன. தோன்றி, நின்று, ஒடுங்கும் இயல்பினது, உலகம்.

''உலகம், பொருள்தன்மை ரீதியாகவும், காலரீதியாகவும், இதில் துறைதோறும் வேறுபாடு காணப்பட்டு வருவதால், செயற்கையே என்பது சைவசித்தாந்த நோக்கு'' என்பர் சைவசித்தாந்த அறிஞர்.

செயற்கை என்பதால், உலகம் செய்யப்பட்டது அல்லது படைக்கப்பட்டது என்ற பொருள் தொனிக்கிறது. செயற்கையாய் உள்ளது எதுவோ, அது காரியம் எனப்படுகிறது. காரியம் என்றால் செய்யப்பட்டது என்று பொருள் கொள்வர்.

உலகம் செயற்கை என்பதால், அதாவது செய்யப்பட்டது என்பதால், அதைச் செய்தவர் ஒருவர் நிச்சயம் இருப்பர். உலகம் காரியம்; ஆகையால் காரியத்திற்கு ஒரு காரணன் அல்லது கர்த்தா இருக்கத்தான் வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க நியாயமில்லை. கர்த்தாதான் செய்பவர்.

அந்நிலையில், காரியம் ஆகிய இந்த உலகத்திற்குக் கருத்தா ஒருவர் உளர், என்ற நிலைப்பாடு சந்தேகத்திற்கு இடமின்றித் தெளிவாகிறது.

சைவசமயநெறி நின்று, நாவலர் பெருமான், உலகினைத் தோற்றுவித்த கருத்தாவைச் சிவபெருமான் என்று கூறுகிறார்.

இவ்வுலகிற்கு முதல்வராக ஒரு கருத்தா இருப்பது பற்றி வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் யாவும் ஐயந்திரிபு அறக் கூறுகின்றன.

சங்கத்தமிழ் இலக்கியங்கள், தொல்காப்பியம், திருமூலர் திருமந்திரம், திருக்குறள், தேவார திருவாசகங்கள் உள்ளிட்ட பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் முதலிய சைவத் தமிழ் நூல்கள் சான்று பகர்கின்றன.

**''சிவன் ஒடுஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை**
**அவன் ஒடுஒப்பார் இங்குயாவரும் இல்லை''**

-என்கிறார் திருமூலர்.

''ஆதிபகவன் முதற்றே உலகு'' எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் உறுதியாக உரைக்கிறார்.

''ஏக பெருந்தகை ஆயபெருமான்'' என்று சிவபெருமானை விழிக்கிறார் சம்பந்தர் பெருமான்.

**''மூத்தவனாய் உலகுக்கு முந்தினானே**
**முறைமையால் எல்லாம் படைக்கின்றானே''**
-என்கிறார் அப்பர் பெருமான்.

**''முழுமுதலே, ஐம்புலனுக்கும் மூவர்க்கும்**
**என்றனக்கும் வழிமுதலே''**
என்பது மணிவாசகரின் திருவாக்கு.

இவையாவும் இறைவன் உண்டு என்று உரைக்கும் அருளாளர்களின் ஆப்தவாக்கியம். சிற்றறிவுடைய நாம் அவற்றை நம்ப வேண்டும். நம்பினார் கெடுவதில்லை என்பது நான்மறையின் தீர்ப்பு.

இறைவன் உண்டு என்றிருப்போம். அவன் சிவன் என்போம்.

**- எம்மோடு என்றென்றும் தொடர்ந்து நிற்பது சிவம்**
**- எங்கும் எவ்விடத்தும் படர்ந்து, பரவி, நிறைந்து நிற்பது சிவம்.**
**- யாவற்றையும் கடந்து நிற்பதும், காலத்தை வென்று நிற்பதும் சிவம்.**

சிவமே அன்பு, சிவமே நீதி, சிவமே கருணை, சிவமே உண்மை. சைவர்களாகிய நாம், அன்பு, நீதி, கருணை உண்மை என்பவற்றோடு உறவுகொண்டு- சிவ சம்பந்திகளாக வாழ்ந்து இன்பம் பெறுவோமாக.

# 7. அஞ்சுவது அஞ்சாமை பேதமை

சமய வாழ்வு, சமயப் பண்பாடு என்று கூறப்படும்போது நல்ல ஒழுக்கமான, செம்மையான, சீரான வாழ்வைக் குறிப்பதாகவே உள்ளது. சமயம் சொல்வதை, வாழ்வில் நாம் அனுட்டிப்பதால், நம் வாழ்வு சீர் பெறுகிறது. சமயம் வேறு, வாழ்வு வேறாகக் கருதலாகாது. சிறுபராயத்திலிருந்தே தூய ஒழுக்கம் நிறைந்த, சமய வாழ்வினை வாழ்வதற்குப் பிள்ளைகள் பழகிக் கொள்ள வேண்டும். அதற்குத் தாய், தந்தை, ஆசிரியர் ஆகியோரின் பங்களிப்பு பெரிதும் வேண்டப் படுகிறது. பழக்க வழக்கங்கள், பண்புகள் என்பற்றைப்போதனை மூலம் கற்பிப்பதிலும் பார்க்கக் கூடிய பலன்களை, அப்போதனை யாளர்கள் அவற்றைப் பின்பற்றி முன்மாதிரியாக நடந்து காட்டுவதன் மூலம், அடைந்து கொள்ள முடியும். ஆகையால் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், மூத்தோர்கள் என்போர் நல்ல முறையில் வாழ்ந்துகாட்ட வேண்டியது அவசியமாகின்றது.

வளரும் பிள்ளைகளிடம் அன்பு,பயம், பணிவு, நம்பிக்கை என்பன இருக்க வேண்டும். எல்லோர் மீதும் அன்பு கொண்டவர் களாகப் பிள்ளைகள் வளர வேண்டும். பெற்றோர்கள் குடும்பத்தில் பரஸ்பரம் அன்பு காட்டுபவர்களாக இருந்தால்தான், பிள்ளைகளும் அவர்களைப் பார்த்துத் தாமும் அன்புள்ளவர்களாகத் திகழ்வார்கள். பயம் தேவைதானா, என்று கேட்கக்கூடும். இதற்குப் பதில், வள்ளுவரே கூறுகிறார்.

''அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்'' என்பது தமிழ் வேதவாக்கு.

அஞ்சப்பட வேண்டியவற்றிற்கு அஞ்சாதிருத்தல் பேதைமை. அது அறிவுடைமை ஆகாது; விவேகமும் அல்ல. அப்போது, எது அறிவுடைமை என்றால், பயப்பட வேண்டியவற்றைக் கண்டு பயப்படுதல் அறிவுள்ளமையைக் காட்டுவதாகும்.

பழிபாவங்களைச் செய்தவற்கும்; பிழைகள், தவறுகளைச் செய்வதற்கும்; பிறருக்குக் கேடுகள், இம்சைகள், தொல்லைகள் இழைக்கும் எச்செயல்களைப் புரிவதற்கும் பயப்பட்டே ஆக வேண்டும். இன்று இத்தகைய பயப்பாடுகள் அற்றுவருவதனால்தான் சமூகங்களில் அமைதிக்குப் பங்கம் ஏற்படுகின்றது. சமூகம் தூற்றுமே

என்ற பயமும், கடவுள் அறிந்து வைத்துக் கொள்வாரே என்ற அச்சமும் மனிதரிடம் இருக்கும் வரை அவர்கள் தவறாக நடந்து கொள்ள மாட்டார்கள்; பாதகங்களையும் புரியமாட்டார்கள்.

அடுத்து பணிவு வேண்டும். பணிவு, ஒருவரிடமுள்ள அறிவின் வெளிப்பாடு. மூத்தோர், பெற்றோர், ஆசிரியர், பெரியோர் முன் ஒருவர் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

''பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணி....''

என்கிறது தமிழ்மறை. பணிவு உடையவனாகவும், இனிய சொற்களையே பேசுபவனாகவும் ஒருவன் விளங்கினால் அதுவே அவனுக்கு மேன்மை தருவதாக அமையும். அத்தகையவர்களை எல்லோரும் விரும்புவர். அவர்கள் எடுத்த காரியங்கள் யாவும் வெற்றி பெறும்.

நம்பிக்கை என்னும் பண்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்பிக்கை எதில் வேண்டும். முதலாவதாகக் கடவுளில் நம்பிக்கை வேண்டும். கடவுள் நம்பிக்கை, தெய்வநம்பிக்கை, இறைநம்பிக்கை என்று கூறுவார்கள். ''நம்பினார் கெடுவதில்லை'' என்பது நான்கு மறைகளினதும் முடிவு ஆகும். ''கடவுளை நம்பினார் கைவிடப் படார்'' என்பதும் உறுதியான மொழியாகும். அநுபூதிமகான்களின் கூற்றுக்கள் பொய்ப்பதில்லை. வேதங்கள், உபநிஷதங்கள், தர்ம சாஸ்திரங்கள், நீதிநூல்கள், ஆகமநூல்கள் கூறும் மெய்யுரைகளில் நம்பிக்கை வேண்டும். அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகினால் நம் வாழ்வு சிறக்கும் என்பதில் நம்பிக்கை கொள்ள வேண்டும். மேன்மை கொள் சைவநீதியில் நம்பிக்கை கொள்ளுதல் சைவசமயிகள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இவற்றுடன் தன்னம்பிக்கையும் வேண்டும். நம்பிக்கை உறுதியை வளர்க்கும். சலனத்தைத் தகர்க்கும். மனத்தை ஒரு நிலைப்படுத்தும். உண்மையை உணரவைக்கும்.

உண்மையை உணர்ந்தவர்கள் நேரிய எண்ணங் கொண்டவர் களாக வளர்வார்கள். தீயவற்றை, கெட்டவற்றை விலக்கிக் கொள்வார்கள்.

ஒரு வேப்ப மரக்கன்றை, இளம்நிலையிலே நிமிர்த்திக்கட்டி நேராக வளரச் செய்ய முடியும். அந்த மரம் வளர்ந்து வைரமான மரம் ஆன பின்னர், வளைந்து நின்றால், வளைவை நேராக்க முடியாது. குழந்தைகள், பிள்ளைகள், இளையோர் ஆகியோர், சரி, பிழை

அறியாது வழிதவறிச் செல்லக்கூடும். அப்பொழுது அவர்களுக்கு நல்வழி காட்டுதல் கிடைக்குமாயின், நல்லவர்கள் ஆகிவிடுவார்கள். அவர்களுக்கு இளம் பராயத்தில் கடவுளின் பாதையைக் காட்ட வேண்டியது தாய், தந்தை, ஆசிரியர், பெரியோர் ஆகியோரின் பொறுப்பாகும்.

நல்லவர்களாக, ஒழுக்கம் உள்ளவர்களாக வாழும்போதுதான் கடவுளின் திருவருள் முழுமையாகக் கிடைக்கிறது. கடவுளின் திருவருளினால் தான் நாம் நினைத்த காரியங்கள் கைகூடுகின்றன; எமது வாழ்வு செழிக்கிறது என்பதை உணர்வோமாக.

# 8. சிவம் உண்டு பயமில்லை

சிவபெருமானை முழுமுதற்கடவுளாக ஏற்றிப் போற்றுபவர்கள் சைவர்கள்.

சிவம் ஆதியானது; ஜோதியானது; நீதியாகவும் உள்ளது. அப் பரம்பொருள் ''உரையற்றது, கரையற்றது, திரையற்றது, புரையற்றது, குணம் குறியும் அற்றது'' என அருளாளர்கள் கூறிவைத்துள்ளனர்.

சிவம், ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி'' என்று மாணிக்கவாசகர், கடவுளின் பிரதான இயல்பை எடுத்துக் காட்டுகிறார்.

அருள் நிறைந்ததும், எஞ்ஞான்றும் இடைவிடாது பிரகாசித்துக் கொண்டிருப்பதும், என்றுமே அணையாததும் ஆன சோதியாய், சுடராய், ஒளியாய் சிவம் புலப்படுகின்றது.

சிவம் நீதியாக வெளிப்படுகின்றது.

''பங்கயத்து அயனும் மால் அறியா நீதியே''

என்று சிவத்தை நீதியாகக் காண்கிறார் மணிவாசகப் பெருமான். இறைவன விருப்பு வெறுப்பு அற்றவன்; நடுநிலையாளன்; எல்லோர்க்கும் நீதி வழங்கும் தலைமை நீதிபதி அவன்.

சிவத்தை வழிபடும் நாம் அனைவரும் நீதிநெறி நின்று ஒழுக வேண்டும். நீதியைக் குறுக்கி நீதி சம்பாதிக்கும் முயற்சிகளில் ஈடுபடுதல் ஆகாது. பாதகம் செய்தல், வேற்றுமை காட்டுதல் நீதியல்ல. நீதி ஒன்றுதான், இரண்டு அல்ல என்பது சைவத்தின் நிலைப்பாடு. மேன்மை கொள் சைவநீதி உலகம் முழுவதும் விளங்கும் போது, என்ன குறையும் இவ்வு லகில் இருக்கமாட்டாது. இன்பமே சூழும்; எல்லோரும் இன்புற்று வாழ்வர்.

அன்பே சிவம்; கருணையே சிவம்; நீதியே சிவம்; அறிவே சிவம்; அழகே சிவம்; நன்மையே சிவம்; உண்மையே சிவம்; செம்மையே சிவம்; சர்வமும் சிவம் சைவம் காட்டும் கடவுட் கோட்பாடும்; மனித நலவியல் கோட்பாடும் ஒன்றோடொன்று இணைந்து காணப்படுகின்றன. சைவம் ஒரு சமயதத்துவம்; அதேவேளை, அது ஒரு வாழ்க்கை நெறியும் ஆகும்.

அநேகம் பேர் சைவத்தைச் சமயதத்துவமாக, சடங்கு, கிரியை களாக; விவாதப் பொருளாக மட்டுமே கொள்கின்றனர். சைவத்தை வாழ்க்கை நெறியாக, வாழ்க்கைப் பாதையாக, ஏற்று சைவம் காட்டும் விழுமியங்களை மதித்து வாழும்போதுதான், உண்மையான சைவர்கள், சைவசமயிகள் ஆக முடியும். சமயம் வேறு; சமூகம் வேறு என்று கொள்வது, சைவத்தின் நிலைப்பாடு அல்ல. சமயமும், வாழ்வும் இணைய வேண்டும்.

''நீதிவழுவா நெறிமுறையில் இட்டோர் பெரியோர்'' - இது ஔவையாரின் அருள்வாக்கு. இதன் பொருளை நன்கு உணர்ந்திருத்தல் அவசியம். நீதிநெறியில் அதாவது சைவநெறியில், அன்புநெறியில் தம் வாழ்க்கையை இட்டு வைத்திருப்பவர்தான் பெரியோர்கள்; உயர்ந்தோர்கள் ஆகின்றனர். அவ்வாறு நீதிநெறியில், சைவநெறியில், அன்புநெறியில் தம்மை இட்டுக் கொள்ளாதவர்கள் ''இழிகுலத்தோர்'' (தாழ்ந்தோர்) ஆக வந்து விடுகின்றனர். ஆக, உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்பது பிறப்பினாலோ, குலத்தினாலோ தீர்மானிக்கப்படுவது என்பது சைவத்தின் கொள்கை. தூய வாழ்க்கையே சைவ வாழ்வாக மலருகின்றது.

சைவர்கள் யார் என்பதற்கு, நாவலர் பெருமான் திருத்தொண்டர் பெரியபுராண வசன முகவுரையில், பின்வருமாறு கூறுகிறார்:

''சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய், கொலை, களவு, கள்ளுண்ணல், புலாலுண்ணல், பிறன்மனை விழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய்ச் சான்றுரைத்தல், முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய், இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையர்களாய், குரு லக்கணங்குறைவற அமைந்த, சைவாசாரியரை அடைந்து சிவதீட்சை பெற்றுக் கொண்டவர்களாய், விபூதி உருத்திராட்சதாரணம், சந்தியா வந்தனம், ஸ்ரீ பஞ்சாட்சர ஜபம், சிவத்தியானம், சிவாலய சேவை, சிவலிங்க பூசை, குருவாக்கிய பரிபாலனம், மகேசுர பூசை முதலியன வற்றைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களே சைவர்கள் என்று சொல்லப்படுவார்கள்.''

சைவர்களின் இலட்சணங்கள் இவ்வாறு அமைகின்றன. நாம் எந்த அளவிற்குச் சைவர்களாக வாழ்கிறோம் என்பதை நாவலர்தந்த

உரைகல்லில் உரைத்துப் பார்த்துத் தெரிந்துகொள்வோம். சுய மதிப்பீடு மிகமிக இன்றியமையாதது. அதன் மூலம் தன்னை அறிந்து கொள்ளலாம். குறை நிறைகளை இனங்காணலாம். குறைகளை நிவிர்த்தி செய்யலாம். நிறைகளை மேலும் நிறைவாக்கலாம். அப்போதுதான் மண்ணில் நல்லவண்ணம், மனிதர்கள் மனிதத்தன்மை களுடன் மனிதர்களாக வாழமுடியும்.

கடவுளில் நம்பிக்கையுள்ளவர்கள், கடவுளை நேசிப்பவர்கள், சிவபெருமானைப் பக்தியுடன் வழிபாடு செய்பவர்கள், சைவர்கள் ஆகிய நாம், சிவபெருமான் எம்மீது கொண்ட அளப்பெருங்கருணை யினால், தனு, கரண, புவன, போகங்களையெல்லாம் நமக்கு வழங்கி எம்மை வாழ்விக்கிறார். அவனின்றி இவ்வுலகில் ஓரணுவும் அசையாது. இவ்வளவற்றையும் எமக்களித்த இறைவனுக்கு எம் நன்றியைக் காட்ட வேண்டாமா?

இறைவனால் விரும்பப் படுபவைகளைச் செய்தலும், வெறுக்கப்படுபவற்றை செய்யாமல் தவிர்த்தலும், இறைவனுக்கு நாம் காட்டும் நன்றிகள் ஆகும்.

''கடவுளால் விரும்பப்படுபவைகளாவன, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப்படுபவை களாவன கொலை, புலாலுண்ணல், களவு, கள்ளுண்ணல், வியபிசாரம், பொய், செய்ந்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்'', என்று நாவலர் பெருமான் நான்காம் பாலபாடத்தில் எழுதியுள்ளார்.

கடவுளில் நம்பிக்கை கொண்டு வாழும்போது, கடவுளால் விதிக்கப்பட்டவை புண்ணியங்கள், நல்ல காரியங்கள் என்றும்; விலக்கப்பட்டவை பாவங்கள், தீய காரியங்கள் என்பதையும் நாம் உணர்வோம். அதனால் புண்ணியங்களையே செய்வோம், பாவங் களைச் செய்யாது தவிர்ப்போம். இறைசிந்தனையோடு, இறைவனைக் கேட்டுச் செய்யும் காரியங்கள், புண்ணியங்கள் ஆக அமையும். அவை எமக்கும் பிறர்க்கும் நன்மையே பயக்கும்.

கடவுளை வணங்கி, நல்லவை புரிந்து நல்வாழ்வு வாழ்வோம்.

சிவம் உண்டு பயமில்லை.

# 9. சிவகுடும்பம்

சிவபெருமான் சைவத்தின் முழுமுதற் கடவுள். இவ்வுலகத்தினையும், ஏனைய அண்டங்களையும் படைத்து, காத்து, ஈற்றில் ஒடுங்கச் செய்கின்ற பரம்பொருள், சிவம்.

சிவனைச், சக்தியாகிய உமையுடனும்; பிள்ளைகளாகிய விநாயகர், முருகன் ஆகியோருடனும் சேர்த்து ஒரு சிவ குடும்பமாகக் காண்பதில் சைவமக்களாகிய நாம் மட்டற்ற மகிழ்ச்சியும் மகா திருப்தியும் கொள்கிறோம். எம்மைப் போன்று சிவபெருமானையும் ஒரு குடும்பஸ்தராக கற்பனை செய்து பார்ப்பதில் நாம் அடைகின்ற மகிழ்ச்சி எம்மை வாழ்விக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இதனை அறிவுக்கண் கொண்டு நோக்கினும், பல சமூக உண்மைகளைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

சிவனின் வாகனம் காளை மாடு; சக்திஉமை சிங்கத்தை வாகனமாகக் கொண்டவள். சிவன் பாம்புகளைத் தனது சிரசிலும், கழுத்திலும், ஏனைய அவயவங்களிலும் ஆபரணங்களாகத் தரித்துள்ளான். முருகனின் வாகனம் மயில். சிவனின் குடும்பத்தை நோக்கும்போது, அங்கு காளையும் சிங்கமும்; பாம்பும் மயிலும் அருகருகே தங்களது இயல்பான பகைமையை மறந்து நட்புறவு கொண்டு காணப்படுகின்றன. மகாவிஷ்ணுவின் வாகனமாகிய கருடனைப் பார்த்துப் பயப்படாது, சௌக்கியமா என்று, சிவனின் சிரசில் அமர்ந்துள்ள பாம்பு குசலம் விசாரிக்கின்ற காட்சி, கண்கொள்ளாக் காட்சி மட்டுமன்று, கருத்துள்ள காட்சியும் ஆகும். இவ்வாறு ஒன்றிற்கொன்று பகைமை பூண்ட பிராணிகள், சிவனார் குடும்பத்தில் பகைமையையும், கோபதாபங்களையும் ஒழித்து, நட்பும் அன்பும் பூண்டு அந்நியோன்யமாக வாழுகின்ற இந்த அற்புத நிகழ்விலிருந்து, மனிதர்களாகிய நாம் ஒரு பேருண்மையைத் தெளிந்து கொள்ள வேண்டும். சிவசந்நிதியில், எல்லா மாசுக்களும் மாயையும் நீங்கப் பெற்றுப், பேதமற்ற தெய்வீக நிலையில் உள்ள உயிர்களிடையே பகைமை இல்லை, வேற்றுமை இல்லை என்று தத்துவார்த்த விளக்கம் கொள்ளலாம். இன்னொரு வகையில் பார்க்கப் போனால், அறிவு குறைந்த விலங்குகள், பறவைகள் என்பன தமக்கே இயல்பான பகைமை, கோபம், பழிவாங்கல், அழிப்பு போன்ற தீய உணர்வுகளை விலக்கிக் கொள்ள முடியுமானால்; பகுத்தறிவு

படைத்த, அறிவில் மேம்பட்ட மனிதர்களால் ஏன் அத்தகைய தீயவற்றை விலக்கிக் கொள்ள முடியாது. என்பதை நமக்கு உணர்த்துவதாகவும் இந்த நிகழ்வுக் காட்சிகள் தோன்றலாம்.

காளைக்குச் சிங்கம் பகை; பாம்புக்கு மயிலும் கருடனும் பகை. அது இயல்பானது. ஆனால் அவை நட்பாகி விடுவது என்பது ஆச்சரியத்திற்கு உரியது. காளைக்குக் காளையும்; மயிலுக்கு மயிலும் பகை என்று கூறப்படுவதில்லை. ஆனால் ஆறறிவு கொண்ட மனிதர்களைப் பொறுத்தவரை, வேடிக்கை என்னவென்றால், மனிதனுக்குப் பகை மனிதனாக அமைவதுதான். இந்நிலை பரிணாம வளர்ச்சியின் பயனோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. மனிதர்கள் தமக்கிடையே பகைமையை வளர்த்துக் கொள்கிறார்கள். தம்மையே அழித்துக் கொள்ளுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் மனிதனுக்குச் சமயம் தேவையே என்பதில் இரண்டு கருத்துக்கள் நிலவ முடியாது.

மனிதனை மனிதனாக்குவது சமயம். சைவ சமய நூல்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பன மனித வாழ்க்கையின் நன்னெறிப் படுத்துவன. கதைகள் மூலம் பல தத்துவங்களையும், வாழ்க்கை உண்மைகளையும் நமக்கு விளக்கிக் காட்டுகின்றன. சிலர் கதைகளை வைத்துக்கொண்டு அவைதரும் சம்பவங்கள் உண்மையா, பொய்யா, புனைந்துரையா என்று வினவி வீணான ஆராய்ச்சியில் ஈடுபட்டு நேரத்தை வெறிதே கழிக்கின்றனர். இதுவும் சைவத்தை மாசுபடுத்தும் ஒரு முயற்சி. படித்தவர்கள் இவ்வாறு செய்யும் போது, பாமரரின் கதி என்ன? நல்ல வாழ்க்கைக்கும் தேவையான உண்மைகளையும், படிப்பினைகளையும் தேடி எடுத்து வாழ்க்கையில் அவற்றை மேற்கொள்பவர் அரிதிலும் அரிதாகிவிட்டனர். இதுவே இன்றைய வாழ்க்கைச் சீர்கேடுகளுக்கும், நிம்மதிக்குலைவுக்கும்; சமூக கோளாறுகளுக்கும் காரணங்கள் ஆகின்றன. நமது சைவசமயநூல்கள் தருகின்ற வாழ்வியல் கருத்துக்கள் ஒவ்வொன்றும் நமது வாழ்வினைச் செம்மைப்படுத்துவன; நம்மில் எத்தனை பேர், சைவசமய விழுமியங்களைக் கருத்தில் கொள்கிறோம்; வாழ்வில் அனுசரிக்கிறோம். சைவம் அனுட்டானத்திற்குரியது; வைத்து அழகுபார்ப்பதற்கல்ல. நாம் சைவர்கள் என்பதில் பெருமை உண்டு; அழகுண்டு. இல்லையென்று சொல்லவில்லை. அந்தப் பெருமையும் அழகும் நிறைவு பெறுவது நாம் சைவர்களாக வாழும் போதுதான் என்பதைச் சைவமக்கள் ஒவ்வொருவரும் நினைவில் வைத்திருத்தல்

வேண்டும்.

சைவம் ஒரு சிறந்த வாழ்க்கை நெறி. சைவநெறிப்படி வாழ்ந்தால், துன்பங்களைச் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பமே இருக்காது. அப்படி ஒரு வேளை சந்திக்க நேர்ந்தாலும், மறுகணத்தில் அத்துன்பம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்து விடும். இன்றைய எமது நிலை, வெண்ணெய்யைக் கையில் வைத்துக் கொண்டு நெய்க்கு அழுதவன் கதைபோல் உள்ளது. வெண்ணெயை உருக்கினால் நெய் கிடைக்கும். சைவநெறியில் வாழ்ந்தால் வாழ்வில் இன்பம் பெருகும்.

# 10. நாவுக்கரசர் நன்னெறி

''சொற்கோவும் தோணிபுரத்தோன்றலும் என்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே, மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே.''

'சொற்கோ' எனக் குறிப்பிடப்படுபவர் நாவுக்கரசர். ''தோணிபுரத் தோன்றல்'' திருஞானசம்பந்தர் இருவரும் ஒரே காலத்தவர். சுந்தரரும், மாணிக்கவாசகரும் அவர்களின் பணிகளைத் தொடர்ந்தவர்கள். சைவ உலகில் இந்நால்வரையும் சைவ சமய குரவர்கள் என்கின்றனர். சைவத்திற்குக் காப்பாளர்களாகவும், காவலர்களாகவும் திகழ்ந்தவர்கள். வேதாகமங்களையும், திருநீற்றையும், திருவைந்தெழுத்தையும் விளங்கச் செய்தவர்கள். அதனால், நாம் ஒவ்வொருவரும், அந்நால்வரையும் என்றென்றும் துதித்து வணங்கக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களின் குருபூசைத் தினங்களில், திருமுறைகள் ஓதியும், சேக்கிழார் பெரியபுராணத்திலிருந்து, அவரவர் சரிதங்களைப் படித்தும்; மாணிக்கவாசகர் குருபூசைத் தினத்தில் திருவாதவூரடிகள் புராணம் படித்தும்; அன்னதானம் செய்தும் வழிபடுதல் அவசியம்.

தற்காலத்தில் நால்வர் குருபூசைகள் நடத்துவதோ, ''நாலு பேர்'' சொன்னபடி நடப்பதோ அருகிவருகின்றது. இந்த நால்வர் செய்த நன்றிகளை மறக்கக் கூடாது.

நால்வருள் மூத்தவர் நாவுக்கரசர். அவர்கண்ட நெறி சிவத்தை முழுமுதல் பொருளாகக் கொண்ட சிவநெறி. அதற்கு முன், இந்திரன் முதலிய தேவர்களை முன்னிலைப் படுத்திச் செய்யப்படுகின்ற வேள்விகளுக்கே முக்கியத்துவம் இருந்தது. வேள்விகளில் உயிர்ப் பலியிடுதல் பிரதான அங்கம் திருநாவுக்கரசர், பலியிட்டு வேள்வி செய்யும் வழக்கத்தை எதிர்த்தார். சிவபரம் பொருளையே முதன்மைப் படுத்த வேண்டும் என்றார். அன்பு நெறியாம் பக்தி நெறியே சிவனை வழிபட மிக ஏற்றது என மக்களுக்கு வழிகாட்டினார்

''வேதம் ஓதில்என், வேள்விகள் செய்கில்என்
நீதிநூல்பல நித்தல் பயிற்றில் என்,
ஓது அங்கம் ஓர் ஆறும் உணரில் என்

ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே''

என்னும் இத்தேவாரம் நாவுக்கரசரின் சிவபரம்பொருள் பற்றிய கொள்கையைத் தெளிவாக்குகின்றது.

சைவநெறியில் நின்று ஒழுகுபவர் சாதிபேதம், குலவேறுபாடு, வருண வித்தியாசம், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் எவற்றையும் சிந்தை செய்வதில்லை. அன்பு செய்தல் ஒன்றே முக்கியம். இக்கருத்தினை அப்பர் சுவாமிகளின் பின்வரும் தேவாரம் விளக்குகிறது.

''சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லாராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலயரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.''

நாவுக்கரசர் செய்தது பெரும் சமூகப் புரட்சி. சைவத்தைச் சாதாரண குடிமக்களிடம் எடுத்துச் சென்றார். ஊர் ஊராகச் சென்று சைவநெறியைப் பொதுமக்கள் நெறியாக்கினார். பொதுமக்கள் நெறியாகும்போதே வாழும் நெறியாகின்றது என்பதை உணர்ந்து கொண்டார். இக்கால வழக்கில் சொல்வதானால், சைவம் மக்கள் மயப்படுத்தப்பட்டது எனலாம்.

நாவுக்கரசர், தாமும் சரியை நெறியில் நின்று தொண்டு மூலம், சிவபரம்பொருளை அடைந்தார். திருக்கோயில் வழிபாடு, கூட்டுப் பிரார்த்தனை, சிவத்தொண்டு, அன்புசெய்தல், பிறர்நலம் பேணல், திருமுறைகளை இசைத்தல், என்பன உள்ளிட்ட பக்திமார்க்கத்தை சாதாரண மக்களும் கடைப்பிடித்து உய்வு பெறக்கூடிய முறையில் அமைத்துத் தந்தவர், நாவுக்கரசர். சமயம் என்பது சமூகத்தில் உயர் மட்டத்தில் உள்ளவர்களுக்கே என குறித்துரைக்கப் பெற்றிருந்த கால கட்டத்தில், நாவுக்கரசர் தோன்றி, சைவ நெறி யாவர்க்குமே என்று துணிந்துரைத்தார். சாதாரண மக்களையும் சமயிகள் ஆக்கினார்.

தொண்டின் மூலம் இறைவனைத் தரிசிக்க முடியும் என்பதற்கு, நாவுக்கரசரின் பின்வரும் தேவாரம் விளக்கம் தருகின்றது.

''நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டனடியேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகிடப்பதே.''

அடியேன் உட்பட எல்லா உயிர்களையும் காத்தல் இறைவனுடைய கடமை. அதை அவன் குறைவின்றிச் செய்வான். என் கடமை தொண்டு செய்தலேயாகும். தொண்டு என்பது விரும்பிச் செய்யப்படுவது; எவ்வித பயனையும் எதிர்பாராமல் ஆற்றப்படுவது, அன்பின் நிமித்தம் செய்யப்படுவதே தொண்டு. சமூக நோக்கும் கொண்டது தொண்டு. தொண்டு செய்பவர்கள், தொண்டர்கள், எனப்படுகின்றனர். இறைவன் தொண்டர் உள்ளத்துள் அடக்கம் ''தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'', என்கிறார் ஔவையார்.

நாவுக்கரசர் காட்டிய தொண்டு நெறியில் நின்று இறையருள் பெற்று உய்வோமாக.

# 11. சித்தர் சிவநெறி

சித்தர்கள் என்போர் தமது உள்ளங்களில் இறைவனை உணர்ந்த வர்கள்; இறைவனோடு உடன் உறைபவர்கள். அவர்கள் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள். திருமூலர், தாயுமானவர், யோகர் சுவாமி கள் ஆகியோர் சித்தர்கள். அவர்கள் தூயமனத்தினர். சித்துக்கள் செய்வது அவர்களின் நோக்கமல்ல. ஆனால் ஆற்றல்கள் உண்டு. நோற்றலினால் ஆற்றல்கள் கைவரப் பெற்றவர்கள். அவர்கள் மனத்தை வென்று அதனை ஆள்பவர்கள். விருப்பு, வெறுப்புக்கள் அற்றவர்கள். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாது, வேறொரு நினைப்பையும் மனத்தில் கொண்டிராதவர். அதற்காகவே, இறைவனைச் சதா சிந்திப்பவர்.

சித்தர்கள் என்றும் இன்பத்தில் திளைத்திருப்பர். காரணம், நான் சிவம் என்னும் உணர்வு அவர்களிடம் மேலோங்கியிருத்தலேயாகும். சீவன்முத்தராய் அத்துவித உணர்வோடு வாழ்பவர்கள் சித்தர்கள். சித்தர்கள் என்போர் எத்தகைய இலட்சணங்களைக் கொண்டி ருப்பர் என்பதை யோகர் சுவாமிகள் பின்வரும் பாடல் மூலம் வெளிப் படுத்துகிறார்:

''செல்வமுண்டு கல்வியுண்டு
சீருமுண்டு பேருமுண்டு
சிந்தைத் தெளிவுமுண்டு
அவர்,
திசையெட்டு மாளுவார்
சென்ம மல நீங்குவார்
தேவரையு மேவல் கொள்வார்
செத்துப் பிறவார்கள்
அவர்க்கு,
சினமில்லை அச்சமில்லை
தீய வகங் காரமில்லை
இரவுமில்லை பகலுமில்லை
பழியூணுணவுமில்லை.
சாந்தம் பொறுமையுண்டு
திரிகால வுணர்ச்சியுண்டு
தீய பிணி நோயில்லை
தெய்வமே போல்வார்.''

'யோகர்சுவாமிகள் இந்தநிலையை எய்திய சித்தர் ஆவர்.

நாம் ஒவ்வொருவரும் சித்தர் ஆகலாம்; சீவன்முத்தர் ஆகலாம். எப்படி? யோகர்சுவாமிகளே அதற்குரிய வழியையும் கூறுகிறார்.

''சிவனடிக் கன்பு செய்குவர் பெரியர்
சிவனடிக் கன்பு செய்கிலர் சிறியர்
சிவனடிக் கன்பு சிறப்பினை யளிக்கும்
சிவனடிக் கன்பு சீவன் முத்தியே.''

சிவனடிக்கு அன்பு செய்வதன் மூலமே உயர்நிலையாகிய சீவன் முத்தநிலையை எய்தலாம். எல்லா உலகமும் ஆனவன் சிவன்; எல்லா உயிர்களிலும் செறிந்து இருப்பவன் சிவன். சிவனடிக்கு அன்பு செய்தல் என்பது அனைத்து உலகத்தையும், அனைத்து உயிர்களையும் அன்பு செய்தல் ஆகும். அன்பும் சிவமும் ஒன்றே; இரண்டல்ல என்பது திருமந்திரம் காட்டும் உண்மை.

ஒவ்வொரு மனிதனும் ஆன்மிக வளம் கொண்டவன். அதனால், ஒவ்வொரு மனிதனும் முயன்றால் சித்தர் நிலையை அடையமுடியும். சிவனடிக்கு அன்புசெய்தல் மூலம்; சிவனைப் பக்தி செய்தல் மூலம் இது சித்திக்கும். இன்னும் இலகுவாகச் சொல்வதானால், எல்லா உயிரினங்களையும், எல்லா மனிதர்களையும் எவ்வித வேற்றுமைகளையும பாராட்டாது சமமாக மதித்து அன்பு செலுத்துவதன் மூலம், கரிசனை கொள்வதன் மூலம், கைம்மாறு கருதாது சேவை செய்வதன் மூலம் மனிதன் தெய்வீக நிலைக்கு உயரமுடியும்.

நமது உலகியல் வாழ்வு தெய்வீக வாழ்வாக மலர்ந்து செழிப்பதற்கு நாம் சாதனைகளை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும்.

''...எழுக புலருமுன்
தொழுது வணங்குக தூநீறணிக
அன்னை பிதாவின் அடியினை வணங்குக
கண்ணைப் போலக் காக்க அறத்தை,
......................
அழுக்காறு கோபம் அவா ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்க டம்மை
ஒருபோதும் மறவாதுறவு கொள்ளுக
......................

கொல்லாமை கள்ளாமை வேண்டும்
கோபம் பொறாமை கொள்ளாமை வேண்டும்
எல்லார்க்கு மன்பு செய்ய வேண்டும்
நல்லாரிணக்கமே வேண்டும் .
நடுநிலைமை மாறாதிருக்க வேண்டும்.

இவ்வாறு அன்பு நெறியில், அறவழியில், அறிவின் துணை யோடு சித்தத்தை இறைவன் பால் வைத்து வாழ்ந்து வந்தால் நாம் எல்லோரும் சித்தர்களே, சீவன் முத்தர்களே, தெய்வத்திற்கு ஒப்பான வர்களே என்னும் பேற்றினைப் பெற்றவர்கள் ஆவோம். மனிதன் முயன்றால் ஆகாதது ஒன்றில்லை.

இன்று சித்தர்களிடம், சித்துக்களை எதிர்பார்த்து, தம் வாழ்வு நலன்கருதி நாடுபவர்களே அநேகர். அதனால் பல போலிச் சித்தர்களும் தோன்ற ஏதுவாகின்றது. நோய் தீர்ப்போம், பிணி போக்குவோம், செல்வம் பெருக்குவோம் என்கின்றனர். உண்மைச் சித்தர்கள் வித்தைகள் செய்யார், விளம்பரம் செய்யார். எல்லோ ரையும் சித்தர்களாக மிளிரச் செய்ய அவர்கள் நல்வழி காட்டிகள் ஆக விளங்குவர். சித்துக்களிலும் பார்க்க, உண்மைச் சித்தர்களே நம்மை உயர்த்தி உய்விப்பவர்கள் என்பதை உணர்வோமாக.

# 12. கோயில் என்றால் சிதம்பரம்

சிதம்பரம் என்னும் திருத்தலம், சைவர்களுக்கு மிகவும் முக்கிய மானது. பூலோக கைலாயம் ஆக அத்தலம் சிறப்பிக்கப்படுகிறது. நடராசப் பெருமான் திருநடனம் செய்கின்ற புனிததலம் சிதம்பரம் ஆகும். தில்லைவனம் என்றும் பெயர் கொண்டுள்ளது. கோயில்கள் பல உள்ளனவாயினும், கோயில் என்றால் சிதம்பரத்தையே குறிக்கும். வியாக்கிரபாதர், மன்றுதொழுத பதஞ்சலி முனிவர் என்போர், தவம் செய்து, நடராஜப் பெருமானைத் தரிசித்து பேறு பெற்ற தலம். திருமூலர் வணங்கிச் சிறப்பித்த தலம். திருநாளைப் போவார் என்னும் நந்தன் இறைவனைத் தரிசித்து முத்திபெற்ற தலம் சிதம்பரம். மாணிக்கவாசக சுவாமிகள் சிதம்பரத்தில்தான் இறை வனைச் சேர்ந்தார். அந்தவகையில், திருவெம்பாவைத் திருவிழா சிதம்பரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

பத்தாம்நாள், திருவாதிரைத் தினத்தில் அதிகாலையில் சிதம்பரத் தில் நடைபெறுகின்ற நடேசர் அபிஷேகமும், ஆருத்ரா தரிசனமும் அதி அற்புத நிகழ்வுகள். காணக்கண் கோடி வேண்டும்.

சிதம்பரத்தைச் சிற்றம்பலம் என்றும் பொன்னம்பலம் என்றும் தில்லையம்பலம் என்றும் கூறுவர். பேரம்பலம் என்பது சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கைலயங்கிரி ஆகும்.

சைவமக்களுக்கு, திருச்சிற்றம்பலம் என்பது ஒரு மந்திரச் சொல் ஆகும். பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரிப்பது போன்று, திருச்சிற்றம் பலம் என்னும் மந்திரத்தையும் அடிக்கடி உச்சாடனம் செய்யும் வழக்கம் சைவர்களிடையே காணப்படுகிறது. தேவாரம் முதலிய பஞ்சபுராணத்தைப் பாராயணம் செய்யத் தொடங்கும்போது ''திருச்சிற்றம்பலம்'' சொல்வது சைவமரபாகும்.

சிதம்பரம், இப்பூவுலகின் இருதயஸ்தானம் ஆகும். இங்குதான் சித்சபை என்னும் நடனசபை இருக்கின்றது. நடராஜப் பெருமானின் பஞ்சகிருத்திய நடனம் எனும் திருக்கூத்து சிதம்பரத்திலுள்ள ஆடலரங் கிற்தான் இடைவிடாது சதா நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உலகத்திலும் ஏனைய அண்டங்களிலும் நிகழும் சகல இயக்கங்களும், அசைவு களும், செயற்பாடுகளும், தில்லைத் திருக்கூத்தின் பயன்களும் விளைவுகளுமே ஆகும்.

பஞ்சபூததலங்களுள், ஆகாயம் அல்லது தூய வெறுவெளியைக் குறிக்கும் தலம் சிதம்பரம்.

''எங்கும் திருமேனி
எங்கும் சிவசக்தி
எங்கும் சிதம்பரம்
எங்கும் திருநட்டம்'' என்கிறார் திருமூலர்.

சிதம்பரதலத்தின் பெயர், உபநிஷதங்களிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. அத்துணை தொன்மை வாய்ந்தது சிதம்பரம் கோயில். அப்பர் சுவாமிகள், சிதம்பரத்தில் திருநடனம் புரியும் நடராஜப் பெருமானின் ''குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாய், குமிண் சிரிப்பு, பனித்த சடை, பவளமேனி, பால் வெண்ணீறு, எடுத்த பொற்பாதம் என்பவற்றைத் தரிசித்தார். அத்திவ்விய தரிசனத்தை மீண்டும் மீண்டும் கண்குளிரக் கண்டு களிப்பதற்காகவே, மனித்தப் பிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே என்று உள்ளமுருக வேண்டிநின்றார், திருஞானசம்பந்தர், அஞ்ஞான்று சிதம்பரத்தில் காணப்பெற்ற செல்வ நெடுமாடங்களைப் பாடிப் பரவினார். உயர்ந்த உள்ளங்களையும் ஓங்கிய நோக்கங்களையும் செல்வநெடுமாடங்கள் எடுத்துக் காட்டு கின்றன என்று குறிப்பிட்டார்.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் சிதம்பரத்தில் வாழுகின்ற தில்லை மூவாயிரவரை நோக்கி, ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று கைகூப்பித் தொழுகின்றார். சிதம்பரத்து மண்ணில் தோன்றிய படியினாலும், தில்லை நடராஜப் பெருமானைத் தீண்டி அபிஷேக ஆராதனைகள் செய்யும் பெரும் பேற்றினைப் பெற்றமை யினாலுமே சுந்தரர் அவ்வந்தணர்களைப் போற்றிப் பரவினார்.

மாணிக்கவாசக சுவாமிகள், புறச் சமயிகளை வாதில் வென்று, சைவத்தின் தனிப்பெருஞ் சிறப்பினை நிலைநாட்டியது சிதம்பரத்தில் ஆகும். அவர் பாடிய திருவாசகப் பாடல்கள் அனைத்தையும், சிதம்பரத்தில் வைத்தே இறைவன் தம் திருக்கரத்தினால் ஏட்டில் பொறித்தார்.

ஆதிசங்கரர் சிதம்பரத்திற்கு வந்து, சிதம்பர சக்கரம் ஒன்றையும் ஸ்தாபித்து, படிகலிங்கமாகிய அழகிய சிற்றம்பல முடையாரையும் வழங்கியதாக சரித்திரம் கூறுகிறது.

பல்லவமன்னர்களும், சோழ மன்னர்களும், பாண்டியர்களும் சிதம்பரத்தில் திருப்பணிகள் செய்துள்ளனர். சிதம்பரத்தில்தான், மூவர் பாடிய தேவாரத் திருப்பதிகங்கள் அழியாது பேணப்பட்டது. சேக்கிழார் திருத்தொண்டர் பெரியபுராணம் சிதம்பரம் ஆயிரங்கால் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், தமது சைவமறுமலர்ச்சிப் பணிகளுக்குச் சிதம்பரத்தையே தலைமை நிலையமாகத் தேர்ந்தெடுத்தார். சிதம்பரத்தின் தலவிசேடத்தை நன்கு உணர்ந்தவர் நாவலர் பெருமான். சிதம்பரதலத்தைத் தரிசித்தால் போதும் முத்தி நிச்சயமாகிவிடும் என்பது ஆன்றோர் வாக்கு. சைவசமயிகள் தம் வாழ்வில் ஒரு முறையாதல் சிதம்பரத்தைத் தரிசிக்க வேண்டும் என்பதை சமயக் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும்.

''சித்சபை என்ற சிற்றம்பலத்தில் கூத்தப் பெருமானும் இடது பாகத்தில் சிவகாமசுந்தரியும் காணப்படுகின்றனர். வலப்புறத்திலே சிதம்பர இரகசியம். இங்கே ஆகாசலிங்கம் மந்திரரூபமாகத் திருவம்பலச் சக்கரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.''

இன்றைய சூழ்நிலையில் எத்தனையோ விதமான பயங்கள் நம்மை ஆட்டி அலைக்கின்றன. இவற்றிற்கு மருந்து இல்லையா? என்று கேட்டால், சிதம்பரத்தில் அம்மருந்து உண்டு என்கிறார் ஓர் அருளாளர். ''அருமருந்து ஒரு திருமருந்து அம்பலத்தே கண்டேனே.'' என்பது அவர் அருள்வாக்கு. தில்லையின் எல்லையை அணுகினால் போதுமாம், மரணபயம் உள்ளிட்ட சகலபயமும், அஞ்சி விலகி ஓடிவிடுவதற்கு, என்கிறார் குமரகுருபரர் சுவாமிகள்.

**''வானாகி மண்ணாகி**
**வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி**
**உண்மையுமாய் இன்மையுமாய்**
**கோனாகி, ''யான், எனது'' என்று**
**அவரவரைக் கூத்தாட்டு**
**வானாகி நின்றாயை**
**என்சொல்லி வாழ்த்துவனே''**

என்னும் மணிவாசகரின் திருவாசகத்திற்கு அமைய, இத்திருவெம்பாவைத் திருநாளில் நாமும் தில்லைச் சிற்றம்பலவனைப் போற்றி வாழ்த்துவோம்; வணங்குவோம். சிதம்பர தரிசனம் காண்போம்.

# 13. நடராஜ தரிசனம்

சிவபிரானது உருவத்திருமேனிகளில் ஒன்றாக நடராஜ வடிவம் விளங்குகிறது. மனம், வாக்கு, காயத்திற்கு எட்டாத இறைவன், உயிர்களிடம் கொண்டுள்ள தனிப்பெருங்கருணையால், பேரருளால், ஒரு உருவத்திருமேனியைத் தாங்கித் தோன்றுவான் என்பது சைவ அநுபூதிமான்களின் கருத்து.

நடராஜப் பெருமானுக்கு உரிய புண்ணிய தலம் சிதம்பரம். அங்கு மார்கழி மாதத் திருவாதிரைத் திருநாள் அன்று அதிகாலையில் நடேசர் ஆருத்ரா தரிசனம் நிகழ்கிறது.

சிதம்பரம் கோயிலில், சித்சபை, கனகசபை, தேவசபை, நிருத்தசபை, இராஜசபை என ஐந்து சபைகள் உள்ளன. சபாநாயகராக இந்த ஐந்து சபைகளுக்கும் ஸ்ரீ நடராஜப் பெருமான் விளங்கி அருள்பாலிக்கின்றார். வருடத்தில் இரண்டு முறைகள், ஆனி உத்தரத் தன்றும், மார்கழித் திருவாதிரையன்றும் இராஜசபையாக விளங்குகின்ற ஆயிரங்கால் மண்டபத்தில் நடராஜப் பெருமான் எழுந்தருளி திருமஞ்சனம் ஏற்று அடியார்களுக்குத் திவ்விய தரிசனம் தருகிறார். ஆருத்ரா தரிசனம் மார்கழித் திருவாதிரையில் நடைபெறுகின்ற பேரருள் திருவிழா. திருவெம்பாவை விரதகாலம் பத்துநாட்கள் கொண்டது. பத்தாம் நாள், திருவாதிரைத் திருநாளாகும். அன்று எல்லா ஆலயங்களிலும் நடேசப் பெருமானுக்கு அபிஷேக, உற்சவங்கள்; ஆருத்ரா தரிசனம் என்பன சிறப்பாக நடத்தப் படுகின்றன.

''அன்பே சிவம்'', இரண்டும் வேறல்ல என்று கூறும் திருமூலர், சிதம்பரத்தில் நடராஜ தரிசனம் செய்தவர். அங்கு ஆடல் அரசனின் ஊர்த்துவ தாண்டவத்தைக் கண்ணாரக் கண்டவர். அவர் பின்வரும் பாடலில், தான் கண்ட தாண்டவத்தை விபரிக்கிறார்.

**''ஆதிபரன் ஆட, அங்கைக் கனலாட**
**ஓதும் சடை ஆட, உன்மத்தம் உற்றாட**
**பாதிமதி ஆட, பாரண்டம் மீதாட**
**நாதமோடு ஆடினான், நாதாந்த நட்டமே.''**

இறைவன் ஐந்தொழில்களை ஆன்மாக்களின் நலன் பொருட்டுச்

செய்கின்றான். இது அவனின் பெருங்கருணையாகப். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவே அவ்வைந் தொழில்களும் ஆகும். நடராஜ வடிவம், இறைவனின் இந்த ஐந்து தொழில்களையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. தில்லையில் நடைபெறுகின்ற நடராஜப் பெருமானின் ஆனந்தக்கூத்தை, பஞ்ச கிருத்தியத் திருநடனம் என்பர்.

ஆகாசம், தோற்றப் பொருள்கள் யாவற்றிற்கும் ஆதாரம். ஆகாசம், ஒலியுடன் தொடர்புடையது. நடராஜப் பெருமான் திருக்கரத்தில் ஏந்தியுள்ள உடுக்கு அல்லது டமருகம் ஆகாசம் தோன்றுவதற்கு மூலஸ்தானம் என்பர். அதனால், எல்லாப் பொருட் கள் தோன்றுவதற்கும் உற்பத்திஸ்தானம் இந்த உடுக்கு ஆகும். எனவே உடுக்கு ஏந்திய திருக்கரம் படைத்தலைச் செய்கிறது.

நடராஜப் பெருமானின் அபயகரம், ''நாம் இருக்கப் பயமேன்'' என்பதைக் குறிப்பால் உணர்த்திக் காத்தல் தொழிலை மேற் கொள்கிறது. தீ ஏந்திய திருக்கை அழித்தல் ஆகிய விடுதலைத் தொழிலையும்; ஆணவத்தின் வடிவமாக உள்ள முயலகன் மீது ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலையும்; தூக்கிய திருவடி அருளால் தொழிலையும் குறிப்பனவாக அமைந்துள்ளன என்று விளக்கம் தருகின்றனர்.

மாணிக்கவாசகரும், நந்தனாரும் இறைவனின் தூக்கிய திருவடியின் நிழலில், அவனின் அருளல் காரணமாக, இடம் பெற்று சதா ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள், என்பதை நூல்கள் வாயிலாகத் தெளிந்துள்ளோம். அவர்கள் நமக்கெல்லாம் நல்ல வழிகாட்டிகளாக உள்ளனர் என்பதை மனதில் கொள்வோம்.

ஆனந்த நடனத்தினால் ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன என்னும் நடராஜ தத்துவத்தின் உட்பொருள் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பொம்மையாட்டத்தில், பொம்மைகளை, ஒருவர் பின்னிருந்து, அவற்றுடன் தொடுக்கப்பெற்ற கயிற்றினை இயக்கி, ஆட்டுவிக்குமாப் போல, எம்மையெல்லாம் ஆட்டு விக்கிறான், அம்பலத்தில் ஆடுகின்ற நடராஜப் பெருமான் என்பது ஞானிகள் தரும் உண்மைவிளக்கம் ஆகும்.

''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதோரா'' என்பது பொருள் பொதிந்த பாடல். உலகம் ஒரு நடனமேடை. அதில் நாம் எல்லோரும்

ஆடுகிறோம். அப்படியெனில், அவன் நம்மை ஆட்டுவிக்கிறான் என்பதால் ஆகும். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பது இப்போது விளங்குகின்றதல்லவா?

நடராஜன், இவ்வுலகில் ஆடுவது போன்று நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் திருநடனம் செய்கின்றான்.

''ஆடிய காலும் அதில் சிலம்போசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்''

கண்டுகொண்டேன் என்கிறார் திருமூலர். அவர் எங்கே கண்டு கொண்டார் என்றால், தமது உள்ளக் கமலத்தில் கண்டு பூரிப்பதாக அறிவிக்கிறார். எமது உள்ளம் சித்தாகாசம்; அதைத் தூய்மையாக வைத்திருந்தால் எமது உள்ளத்திலேயே ஆடல்வல்லானின் நடனத்தைச் சதா கண்டு மகிழ்ந்து கொண்டிருக்கலாம். ஆருத்ரா தரிசனமும் தூய உள்ளத்தில் செய்யலாம். இந்த நிலையிலேயே, ''இருந்தேன் இக்காயத்தில் எண்ணிலி கோடி'' என்றும் ''ஒப்பிலி கோடி யுகம் இருந்தேனே'' என்றும் திருமூலர், திருமந்திரத்தின் வாயிலாக அறிவிக்கிறார்.

''வாழி திரு மன்றம்
கண்ட மலர்க் கண்கள்
வாழி பெருமான்
புகழ் கேட்ட வான்செவிகள்
வாழி அவனை
வணங்கும் முடிச்சென்னி
வாழியரோ
சீர்பாடும் வாய்''

என்னும் குமரகுருபரர் அருள் வாழ்த்துடன் வாரீர், ஆருத்ரா தரிசனம் காண்போம்.

# 14. ஐம்பெருங்கடமைகள்

சைவமக்கள் புண்ணியவான்கள் என்பதில் ஐயம் இல்லை. இப்பூமியில் வாழும்போது எப்படி வாழ வேண்டும்; என்ன என்ன கடமைகளைச் செய்ய வேண்டும்; எத்தகைய காரியங்களைச் செய்தல் ஆகாது; ஏதாவது தெரிந்தோ தெரியாமலோ தவறுகளைச் செய்து விட்டால், அதற்குரிய பிராயச்சித்தம் என்ன? இவ்வாறாக நம்மை வழிப்படுத்தி, நல்வாழ்வு வாழச் செய்வதற்கு உரிய நெறிமுறைகளை வகுத்து, நம்முடைய முனிவர்களும் இருடிகளும், அருளாளர்களும், எமக்கு வழங்கியுள்ளார்கள். அவற்றை அனுசரித்து வாழ்ந்தால், எமக்கு ஒரு தீங்கும் நேராது. சைவநெறி, வாழ்க்கை மேம்பாட்டு நெறியாகும்.

இந்தவகையில், இல்லறவாழ்வில் இருப்பவர்கள் செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகள் ஐந்தினை மறைநூல்கள் கூறுகின்றன. இவற்றை ஐம்பெரும் வேள்விகள் என்பர். அவையாவன தேவ வேள்வி (தேவயக்ஞம்); ஞானவேள்வி (ரிஜியக்ஞம்); மூதாதையரைப் போற்றும் வேள்வி (பித்ருயக்ஞம்); விருந்தினரை உபரித்தல் ஆகிய வேள்வி (அதிதியக்ஞம்); வீட்டு விலங்குகளுக்கு உணவளித்தல் ஆகிய வேள்வி (பூதயக்ஞம்); என்பன. இவற்றை இல்லறத்தார் தத்தம் இல்லங்களில் இருந்தபடியே செய்ய வேண்டும்.

சமூகத்தில் வாழுகின்ற நாம் பலருக்குக் கடமைப்பட்டும் உள்ளோம்; பலரைக் கடமைப்படுத்தியும் இருக்கின்றோம். கடமைப் பட்டு வாழ்கின்ற நாம், பிறருக்கு உதவி செய்வதன் மூலம், கடனைத் தீர்த்தவர்கள் ஆகின்றோம். கடன்பட்டால் அதனை தீர்த்தவர்கள் ஆகின்றோம். கடன்பட்டால் அதனை தீர்க்காவிட்டால் அது பாவச் செயல் ஆகும். பட்ட கடனைத் தீர்ப்பதற்கென்றே உயிர்களுக்கு பிறவிகள் இறைவனால் தரப்படுகின்றன. மனிதர்களுக்கு மட்டுமல்ல, இயற்கைக்கும் பலவகையால் நாம் கடன்பட்டிருக்கின்றோம்.

இந்த ஐம் பெரும் வேள்விகளையும் நாள்தோறும் செய்து வருவதன் மூலம் இயற்கையிடம் பட்ட கடனைத் தீர்த்துக் கொள்கிறோம். அவ்வாறு தீர்க்காவிட்டால் பாவத்தைச் சேர்த்துக் கொள்ளுகிறோம். மனிதர்கள் வாழ்நாட்களில் சேர்த்துக் கொள்ளக்கூடாதது பாவம் என்பதை மறந்து விடலாகாது.

நாம் தினசரி, தவிர்க்க முடியாமல் சில கொடுமைகளைப் புரிகின்றோம். தெரிந்தோ, தெரியாமலோ அவற்றைச் செய்கின்றோம். உதாரணமாக வீதியால் போக்குவரத்துச் செய்யும்போதும்; வீடு பெருக்கிச் சுத்தம் செய்யும் போதும், உணவு ஆக்கும்போதும், நிலத்தைக் கொத்திப் பண்படுத்தும்போதும், பயிர்கள் செய்யும் போதும் பூச்சிகள், எறும்புகள், புழுக்கள், சிறிய உயிரினங்கள் ஆகியவற்றிற்குத் துன்பங்களையும், இம்சைகளையும் விளைவிக்கின்றோம். இவற்றை வேண்டுமென்று செய்வதில்லை; எனினும் கொடுமை கொடுமைதான். இத்தகைய பாவங்களுக்குப் பரிகாரம் தேடுவதற்குரிய வழி என்று மறைநூல்கள் கூறுவது இந்த ஐம்பெரும் வேள்விகளைத்தான்.

முதலாவது தேவவேள்வியை எடுத்துக் கொள்வோம். சைவ மக்கள், வீட்டில் ஒரு அறையையோ, ஓர் இடததையோ இறைவழிபாட்டிற்கு என்று வைத்திருப்பர். அங்கு தெய்வங்களின் படங்கள், விக்கிரகங்கள் என்பன காணப்படும். தூய்மைநிறைந்த சுவாமி அறையில், காலையிலும் மாலையிலும் வழிபாடு, பிரார்த்தனை, தியானம், செபம் என்பவற்றை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வர். திருமுறைகளை இசைத்தல், இறைவன் திருநாமங்களை உச்சரித்தல் நீரும் மலர்களும் கொண்டு அர்ச்சித்தல், தூபதீபம் காட்டல் என்பன நிகழும். பக்தி, அன்பு இறைவன் மீது செலுத்தப்படும். எங்கும் தூய்மை, எதிலும் தெய்வீகம். இதுவே தேவவேள்வியாகும். இதனால் வீட்டில் பரிமளிப்பு எந்நேரமும் இருக்கும்.

ஞானவேள்வி என்பது அறிவுதரும் நூல்களைத் தினமும் வீட்டில் வாசித்தல்; அவற்றைத் தெளிதல்; தெளிந்தபடி ஒழுகுதல். முனிவர்களும், இருடிகளும், அருளாளர்களும் தமது உள்ளுணர்வினால் உண்மையை உணர்ந்து நூல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். அவை நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் அரிய நூல்கள். வேதங்கள், உபநிடதங்கள்; இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள்; திருக்குறள்; திருமுறைகள்; கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் ஆகிய அனைத்தும் படித்து, உணர்ந்து, வாழ்க்கையில் மேற்கொள்ளத் தக்கவை இவையாவும் மனங்களைப் பண்படுத்துகின்றன; மனத்தை உயர்நிலையில் வைத்திருக்கின்றன. அந்த நிலையில் நல்லது, கெட்டது; பயனுள்ளது, பயனற்றது என்று பிரித்தறியும் திறன் மிகுந்துவிடும். மனிதனாக வாழ, உயர்ந்த நூற்பயிற்சி அவசியம்

என்பதால் அவற்றைக் கற்பது ஒரு வேள்வி ஆயிற்று.

அடுத்து நமது பெற்றோர், மூதாதையர் ஆகியோரை முன்னிட்டுச் செய்யப்படுவது பித்ருயக்ஞம் எனும் மூதாதையரைப் போற்றும் வேள்வி. அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்பது வேதத்தின் கட்டளை. அவர்களைப் போற்றிப் பேணி வாழ்பவர்கள் நல்லாயிருப்பர் என்பது உறுதி. பெற்றோர்களுக்கு மனத்துன்பத்தைத் தராமல் இருத்தல் அவசியம். பெற்றோர்களை ஒருவர் போற்றி வந்தால், அந்த நல்ல செயலைப் பார்த்து அவருடைய பிள்ளைகளும் அவ்வாறு போற்றுவர். பெற்றோர், மூதாதையர்களைப் போற்றி வாழ்தல் ஒரு வேள்வியாகச் சைவநூல்கள் கூறுகின்றன.

வீட்டுக்கு வரும் விருந்தினர்களை முகம் மலர்ந்து உபசரித்தல் ஒரு வேள்வியாகும். பசு, எருது, ஆடு, நாய், பூனை போன்ற வீட்டு விலங்குகளைப் போஷித்து நலமாக வாழச் செய்தல் வேள்வி ஆகும். அன்பும், இரக்கமும், மரியாதையுமே இந்த ஐம்பெரும் வேள்விகளுக்கு ஊற்றாக உள்ளன. நாம் இவ்வேள்விகளை இயற்றி நல்வாழ்வு பெறுவோமாக.

# 15. சைவம் வேண்டாதது நடிப்பு வாழ்வு

சைவமக்கள் நாம்; உலகின் மிகத் தொன்மையான சமயம் நமது சைவசமயம்; வேதங்கள், ஆகமங்கள், புராண இதிகாசங்கள், பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், பக்திப் பனுவல்கள், நீதி நூல்கள் முதலிய தத்துவ, பக்தி இலக்கியங்களை நிரம்பக் கொண்டது சைவசமயம். சைவப் பண்பாடு, சைவக் கலாசாரம், சைவப் பழக்க வழக்கங்கள், சைவ மரபு என்றெல்லாம் பெருமை பேசிக் கொள்ளப்படுகிறது. எனினும் ஏட்டிலும், எழுத்திலும், பேச்சிலும் மட்டும்தான் இன்று சைவம் வாழுகின்றது என்பது நம்மில் எத்தனைபேருக்குத்தான் தெரியும்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'' என்று முழுங்குகின்றோம். உலகிற்கு நீதியை எடுத்துக்கூறும் நாம், அந்த நீதியின் ஒரு சிறு துளியையாவது சுவைக்க, பயன்படுத்த, குறைந்தது அது எப்படி என்று பரீட்சித்துப் பார்க்கவாவது முயல வேண்டாமா? இதுபற்றிச் சைவ மக்களாகிய நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும். உபதேசம் செய்வதில் வல்லுனர்களாக இருக்கின்ற நாம், அதில் கொஞ்சத்தையாவது வாழ்க்கையில் அனுசரித்து ஒழுகவேண்டும் என்பதில் அசிரத்தையாக இருக்கிறோம்.

**''சொல்லுதல் யார்க்கும் எளிது அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்''**

என்கிறார் வள்ளுவப் பெருமான். பிறருக்குப் பதனம் சொல்பவர்கள், தாங்களே கவனமின்றி நடந்து வழுக்கிவிழுவதை என்னவென்று சொல்வது? ''படிக்கிறது சிவபுராணம், இடிக்கிறது சிவன் கோயில்'' என்பார்கள். சைவ வேடம், சைவசமய சின்னங்களைத் தாங்கினால், சைவஒழுக்கத்தையும் மேற்கொள்ள வேண்டும். அல்லது அது வெறும் நடிப்பாகி விடும். சமய வாழ்வு, நடிப்பு வாழ்வு ஆகிவிடக் கூடாது.

திருக்கோயிலுக்குச் செல்லுதல்; அர்ச்சனை, அபிஷேகங்கள் செய்தல்; திருவிழாக்கள் நடாத்துதல்; சுவாமி தரிசனம் செய்தல் என்பன வெறும் சம்பிரதாயங்கள் அல்ல. கடற்கரை, பூங்கா, சினிமா,

மற்றும் களி யாட்ட நிலையங்கள் என்பனவற்றிற்கு உல்லாசத்திற் காகவும், பொழுது போக்கிற்காகவும், கேளிக்கைக்கா கவும் செல்கின்றார்கள். ஆனால் திருக்கோயில்களுக்கு அத்தகைய நோக்கங்களுடன் செல்லு தல் ஆகாது. பயபக்தியுடன் இறைவனை வழிபாடு செய்வதற்காகவே கோயிலுக்குச் செல்கின்றோம். ஆனால் நம்மில் எத்தனைபேர் இதனை உணர்ந்து செயல்படுகிறோம் என்ற வினாவும் கூடவே எழத்தான் செய்கிறது.

ஆலயம் புனிதமான இடம். தூயவன், இறைவன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம். வழிபாடு செய்யப் போகின்றவர்களும் அகந்தூய்மை, புறத்தூய்மை பேணி ஆலயத் தினுள் பிரவேசிக்க வேண்டும். இறைசிந்தனை அன்றி வேறெந்த சிந்தனையும இருத்தல் ஆகாது. ''இறைவன் பெருமையை அன்றி வேறொன்றும் பேசற்க ஆலயத்தில்'' என்ற வாசகம் எழுதப்பட்ட அட்டைகள் எம் கண்களுக்குத் தெரியாமலுமில்லை. அமைதி பேணப் பட வேண்டும்; தூய்மை ஓம்பப்படவேண்டும்; ஆசாரம் அனுட்டிக்கப் பட வேண்டும், ஆலயத்தில், என்பது எல்லோருக்கும் தெரியும். ஆயினும், அவை ஆலயங்களில் மீறப்படுகின்றன என்பதும் தெரிந்த விஷயம்தான்.

புலால் உண்டுவிட்டுக் கோயிலுக்குச் செல்லுதல்; கோயிலுக்குச் சென்று திரும்பிய பின்னர் புலால் உண்ணல்; ஆசாரமின்றிச் செல்லு தல்; மது போதையில் செல்லுதல்; கோயிலுக்கு ஆசௌசத்துடன் செல்லுதல் என்பன மகாபாதகங்கள்.

தற்காலத்தில் பல சைவர்கள் ஆசௌச விதிகளை நழுவவிட்டு வருகிறார்கள். உரிய கால எல்லை வருவதற்கு முன்னரே, தத்தம் சௌகரியங்களுக்காக, துடக்குக் கழித்து விடுகிறார்கள். அதற்குக் குருமார்களும்அநுசரணையாக இருக்கின்றார்கள். இந்நிலைமை வருந்தத்தக்கது. நம்முன்னோர் வகுத்த சமய கலாசாரத்தை முறை யாகவும் முழுமையாகவும் அனுட்டிக்க வேண்டும் அல்லது முற்றிலாக விலக்கிவிட்டு சைவத்தினின்றும் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். சைவர்கள் என்று தம்மை வெளிப்படுத்திக் கொண்டு, சைவ நெறியை யும், விதிமுறைகளையும், ஆசாரங்களையும் புறக்கணித்து நடப்பது பாவம் மட்டுமல்ல சமய விரோதச் செயலுமாகும்.

இக்காலத்தில் சமூகச் சட்டங்கள், விதிகள், ஒழுங்குகள்

என்பவற்றை மீறுதல் சமுதாயத்தில் சர்வ சாதாரணமாகிவிட்டது. அமைதி, சமாதானம், நிம்மதி என்பன, அதனால் நம்மைவிட்டு விலகி நெடுந்தூரம் சென்று விட்டன. சமய நெறிமுறைகள், ஆசாரங்கள், விதிகள், கட்டுப்பாடுகள், ஒழுங்குகள் என்பனவும் தளர்த்தப் படுகின்ற நிலைமை இன்று ஏற்படத் தொடங்கி விட்டது. நியாயம் தெரிந்த மனிதர்கள் எதனையும் நியாயப்படுத்தி வருகிறார்கள். கோயில்களின் உட்பிரகாரங்கள், வெளிப்பிரகாரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சூழலும் சுற்றாடலும் மாசுபடுத்தப்பட்டு வருகின்றன.

சைவப் பண்பாடு பெருமைமிக்க பண்பாடு. வாழ்க்கை நெறி முறைகள், ஆசாரங்கள், ஒழுங்குநடைமுறைகள், விதிகள் எல்லாம் உண்டு. அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலமே, நமது பண்பாடும் வாழ்வும், வளம்பெறும், நலம் பெறும், பயனுள்ள தாகவும் அமையும் என்பதைக் கருத்திற் கொள்வோமாக.

# 16. வெள்ளிக்கிழமை விரதம்

சுக்கிரவாரம் என்பது வெள்ளிக்கிழமை. எல்லா வெள்ளிக் கிழமைகளும் முருகனுக்குரிய விரதநாட்களேயாகும். எனினும் ஐப்பசி மாதத்தில் வருகின்ற வெள்ளிக்கிழமைகள் விசேட மகிமை பொருந் தியன என்று சைவ நூல்கள் கூறுகின்றன. ஐப்பசி வெள்ளிக் கிழமைகளில் விரதம் அனுட்டித்தல், ஆலய தரிசனம் செய்தல், சைவ ஆசாரம் பேணுதல், இறைபணி நிற்றல், விடே பூசை ஆராதனை களில் கலந்து கொள்ளல், கடவுள் சிந்தனையோடு இருத்தல் என்பனவற்றில் சைவமக்கள் ஈடுபாடு கொள்வதைக் கடமையாகக் கொள்ளல் வேண்டும். இதனால் அவரவர்களுக்கு இகபரசுகம் கிட்டுவதோடு, நாடு செழிக்கவும் உலகம் தழைக்கவும் வழிபிறக்கும்.

இன்று நாஸ்திகம் பெருகவும், ஆஸ்திகம் குன்றவும் செய்யும் சக்திகள் வலுப்பெற்று வருகின்றன. அதற்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன. ஆஸ்திகர்களாக உள்ள சைவர்களும், உரிய சைவ ஆசாரங்களைக் கடைப்பிடிப்பதைத் தளர்த்திவருகிறார்கள். கால அவகாசம் இல்லை என்பது அவர்கள் காட்டும் காரணம். நாள் முழுவதும் வேலை, வேலை என்று ஓய்வு ஒழிச்சலின்றிப் பஞ்சாய்ப் பறந்து திரிகிறோமே, மூச்சு விடக்கூட நேரமில்லை. இந்த இலட்சணத்தில் கடவுள் வழிபாட்டிற்கோ, இறைபணி நிற்றலுக்கோ, சைவ ஆசாரங்களைப் பேணுவதற்கோ, எங்கே நேரம் கண்டு பிடிப்பது, என்று கேட்டுச் சினக்கிறார்கள். ஆனால், மூச்சு விடக் கூட நேரமில்லை என்று கூறுபவர்கள் அவ்வாறு சும்மா ஒரு பேச்சுக்குத் தான் கூறுகிறார்கள். அது நிஜம் அல்ல. எப்படியோ அவர்கள் மூச்சை எடுத்துக் கொண்டும் விட்டுக் கொண்டுதான் சதா இருக்கிறார்கள். அவ்வாறு செய்யாவிட்டால் அவர்களின் நிலைமை என்னவாகும் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. மூச்சை விட மறந்தால் ஏற்படக் கூடிய விளைவுகளை நன்கறிந்திருக்கும் மனிதர்கள், மூச்சுக்கு மூச்சாய், முழுமூச்சாய், உயிர்க்குயிராய் விளங்கும் இறைவனை ஒரு கணமேனும் நினைக்க மறந்தால் எத்துணை பாரிய விளைவுகள் ஏற்படப் போகின்றன என்பதை அறியாமலும் உணராமலும் இருக்கிறார்களே என்பதுதான் இன்றைய புரிந்து கொள்ள முடியாத புதிர் ஆக உள்ளது.

உணவு உண்ண, நீர் அருந்த, உடற்கழிவுகளைத் தினசரி அகற்ற,

நண்பர்களுடன் அளவளாவி மகிழ, நித்திரை செய்ய, தொலைக் காட்சி பார்க்க, பிறருக்கு அல்லவற்றைப் புரிய- இவையெல்லா வற்றிற்கும் போதிய நேர அவகாசங்களைக் கண்டுபிடித்து, அவற்றை ஒழுங்காகச் செய்துவரும் மனிதர்கள், கடவுளைக் குறைந்த பட்சம் காலை, மாலையிலாவது, சில நிமிடநேரம் வழிபடவும், சமய ஆசாரங்களைப் பேணி அனுட்டிக்கவும், சிறு சிறு நல்ல காரியங்களை யாதல் செய்யவும், அகப்புறத்தூய்மை பேணவும் நேர அவகாசம் இல்லையென்பது விநோதமாக உள்ளது. இவ்வாறு கூறுவது வெறும் சாக்குப் போக்குகளேயன்றி வேறு ஒன்றும் இல்லை. மனம் உண்டானால் இடம் உண்டு என்பார்கள் கடவுளை வணங்க வேண்டும் என்று மனம் விரும்பினால், அதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது. மனிதன் நினைத்தால் செய்ய முடியாததொன் றில்லை. கடவுளை வணங்க வேண்டும் என எண்ணினால், விரும்பினால், நேரம் நிச்சயமாகக் கிடைக்கும் என்பது உறுதி. கடவுளை வணங்கமறுப்பவன், வாழ மறுப்பவன் ஆவான்.

விரதம் அனுட்டித்தல் சைவ ஆசாரம் ஆகும். வாரத்தில் ஒருநாள், வெள்ளிக்கிழமைகளில் விரதத்தை மேற்கொள்ளலாம். அதற்கு முன்னோடியாக, ஐப்பசி மாதத்து வெள்ளிக்கிழமைகளில் விரதமிருக்கலாம். பின்னர், எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் விரதம் அனுட்டிக்க வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டுவிடும். விரத காலங்களில் அகப் புறத்தூய்மை பேணப்பட வேண்டும்.

புறந்தூய்மை நீரால் அமையும் என்பர். உடலை, நீராடிச் சுத்தம் செய்தல்; தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிதல்; வீடு, சுற்றாடல் என்பவற்றைக் கூட்டிக், கழுவி, அழுக்குகளை நீக்கிச் சுத்தமாக்குதல்; சமையல் பாத்திரங்களை விளக்கி, கழுவுதல் என்பவற்றின் மூலம் புறத்தூய்மையை விரதநாட்களில் பேணலாம். மஞ்சள் தெளித்து, சாம்பிராணி தூபம் காட்டி வீட்டையும், சுற்றுப்புறங்களையும் பரிமளிக்கச் செய்யலாம். இப்பொழுது பாருங்கள், வீட்டிலே ஒரு தெய்வீகச் சூழல் நிலவும். அது மனத்துக்கு ஓர் இதத்தையும், இன்ப சுகத்தையும் தருவதை உணர்வீர்கள். பார்ப்பவை யாவும் அழகாகத் தோன்றும். ஆசாரம் இருந்தால், ஆளிலும் சரி, வாழும் சூழலிலும் சரி, வீட்டிலும் சரி பொலிவும், மலர்ச்சியும் தெய்வீகமும் கமழும்; பீடைகள் அகன்று வீடும் வீட்டில் விடிவு இருக்கும் அதன்பின் நாம் செய்வன யாவும் சித்திக்கும். மகிழ்ச்சிக்குக் குறைவே, இராது. சைவ ஆசாரத்தினால் இத்துணை நன்மைகள் ஏற்படும்போது, அந்த

நன்மைகளை அடைவதற்கு நாம் ஏன் பின்னிற்க வேண்டும்.

''அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்'' என்பது வள்ளுவரின் வேதவாக்கு. மனத்தூய்மை எல்லா நற்செயல்களுக்கும் தோற்றுவாய். மனத்தூய்மை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது. உண்மை பேசுதல் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. அத்தோடு, மனத்திலுள்ள அழுக்குகள், கசடுகள் என்பன நீக்கப்படும்போதே, மனம் சுத்தமாகும். அழுக்காறு, அவா, கோபம், வஞ்சகம், பொறாமை, செருக்கு, காமம் போன்ற அழுக்குகள் மனத்தை அசுத்தமாக்குவன. விரத காலங்களில் இவற்றிற்கு அறவே இடங்கொடுக்கக்கூடாது. சைவ ஆசாரம் பேணுதல் மூலம் இவற்றின் பிடியிலிருந்து எம்மை மீட்டுக் கொள்ள வழி பிறக்கிறது. இடைவிடாத கடவுள் சிந்தனையை மேற்கொள்ளும்போது, அங்கு வேறு கெட்ட சிந்தனைகள் கால்கொள்ள முடியாமல் போய்விடும். விரதகாலங்களில் அகத் தூய்மை, புறத்தூய்மை என்பன பேணப்பட வேண்டியதன் அவசியம் இப்பொழுது விளங்குகின்றதல்லவா.

உற்றநோய் நோன்றல், உயிர்க்கு உறுகண்செய்யாமை, இரண்டும் விரதத்தின் இலட்சணங்கள் எனத் தமிழ்வேதம் கூறும். தமக்கு வருகின்ற துன்பங்களைப் பொறுத்தல், பிறர் சீண்டினாலும் கோபங் கொள்ளாதிருத்தல், எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமை என்பன விரத நாட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. விரதநாட்களில் பயிற்சி செய்து மற்றைய நாட்களுக்கும் அவை விஸ்தரிக்கப்பட வேண்டும். சைவ ஆசாரம் கடைப்பிடிப்பதற்கு விரதங்கள் களம் அமைத்துத் தருகின்றன. சைவ ஆசாரமும் ஒழுக்கமும், மிருகநிலையில் உள்ளவர்களை மனித நிலைக்கும், மனித நிலையில் உள்ளவர்களை தெய்வீக நிலைக்கும் உயர்த்தும் என்பதை உணர்வோமாக.

# 17. தைப்பொங்கல்

தை முதலாந்திகதி தமிழ்ப்புத்தாண்டு மலர்கின்றது. ஆண்டு தோறும் வருகின்ற தைமாத முதல் நாளை சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்திருப்பர். ''தை பிறந்தால் வழி பிறக்கும்''; வாழ்வில் ஒரு புதிய அத்தியாயம் தோன்றும் என்னும் நன்னம்பிக்கை எல்லோர் உள்ளங்களிலும் உறுதியாக இடம் பெற்றி ருக்கும். நம்பிக்கை வீண்போவதில்லை. நம்பிக்கை முயற்சியை ஊக்குவிக்கிறது. முயற்சி திருவினையாக்கும். எனவே நல்ல பலன் கிடைக்கின்றது.

இந்த நன்னாளில், பொங்கல் பண்டிகையைக் குதூகலத்துடன் கொண்டாடுகின்றோம். நமக்கெல்லாம் வாழ்வளிக்கும் கதிரவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி, பொங்கல் செய்து, படையல் வைத்து, மடைபரவி வழிபாடு செய்கின்றோம். துதிபாடி, எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பூமியிலே மழை அத்தியாவசியமாகத் தேவை. நீரின்றி இந்த உலகம் இயங்காது. மழையைத் தருவது சூரியன். வெப்பமும், ஒளியும், உயிர்ப்புச் சக்தியும் சூரியனாலேயே அனைத்துச் சீவராசி களுக்கும வழங்கப்படுகிறது. இன்னார், இனியவர்; உயர்வு, தாழ்வு என்னும் பேதங்களின்றி ஒரே விதமாக எல்லோருக்கும் அவற்றை வழங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, தை முதல் நாளில் பொங்கல் விழா எடுத்து வருகின்றமை, தமிழ் மக்களின் நயத்தக்க நாகரிகத்தையும் உயர் பண்பாட்டையும் காட்டுகின்றது.

தைமாதம் முதல் தேதியை மகர சங்க்ராந்தி என்பர். உத்தரா யனம் ஆரம்பிக்கும் நாளும் அதுவே. தென்திசையிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் திரும்புவதை உத்தராயனம் குறிக்கும். தை தொடக்கம் ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயனம், புண்ணிய காலம் என்றும்; சுப கருமங்கள், மங்கள காரியங்கள் நிகழுகின்ற காலம் என்றும் கொள்ளப்படுகிறது.

உழைப்பின் உயர்வை, உழவர்களின் மேன்மையை மதிக்கும் விழாவாகவும் தைபொங்கல் விழா பண்டு தொட்டு விளங்கி வருகிறது. மனித உழைப்பாளிகளுடன், விலங்கு உழைப்பாளி களையும் நினைத்து நேசித்து, நன்றி செலுத்தும் பெருநாளாகவும்

தைப்பொங்கல் பண்டிகை விளங்குகின்றது.

பொங்கல் திருநாளில், சூரியன் உதிப்பதற்கு ஐந்து நாழிகைக்கு முன்னர் அதிகாலையில் மக்கள் நித்திரைவிட்டு எழுந்துவிடுவர். நீராடித் தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்வர். வீட்டுமுற்றத்தில், சாணத்தினால் மெழுகப்பட்ட நீள்சதுரமான பகுதியை, வெள்ளை, சிவப்பு நிற மாவினால் அழகிய கோலம் இட்டு, மண்டபமாக வடிவமைத்துக் கொள்வர். மாவிலை, வாழை, கமுகு, கரும்பு, மகர தோரணங்கள், மலர்கள் என்பவற்றால் அலங்கரிப்பர். அதனுள் அழகிய கோலங்களையும் கலைத்திறன் மிளிரப் போடுவர். பிள்ளையார் பிடித்து வைத்து, குத்துவிளக்கு ஏற்றி, பூரணகும்பம் வைத்து, பழங்கள், வெற்றிலை, பாக்கு, தேங்காய் முதலிய மங்களப் பொருட்களை நிவேதிப்பர். விநாயகனை முதலில் நினைந்து இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்திப்பர்.

நீரினால் சுத்தம் செய்யப்பட்ட புதுப்பானையை திருவணையில் வைத்து, அதன் வாய்ப்புறத்தில் மஞ்சள் இலை,இஞ்சியிலை, மாவிலை, ஆகியவற்றைப் பொருத்திக்கட்டி; பானையின் மேற்புறத் தில், திருநீற்றைக் குழைத்து திரிபுண்டரமாக மூன்று இடங்களில் பூசி; சந்தனம், குங்குமம் திலகமிட்டு; பானைக்குள் பசுப்பாலும், நீரும் விட்டு நிரப்பி, தூபதீபம் காட்டி; கற்பூரதீபத்தினால் அடுப்பில் நெருப்பை உண்டாக்கி, பற்றவைத்து, கணவனும் மனைவியும் ஒருமித்த சிந்தையராய், சூரியனை வணங்கி, இஷ்ட தெய்வங்களை நினைந்து, பானையைப் பக்குவமாய் இருவரும் தம் கைகளால் பற்றிப் பிடித்துத் தூக்கி அடுப்பில் ஏற்றுவர். குடும்பத்தவர் யாவரும் அங்கு பிரசன்னமாய் இருப்பர்.

பானையில் பால் பொங்கி எழும்போது ''பொங்கலோ பொங்கல்'' என்று உரத்துக் கூவி மகிழ்வர். தம்முடைய வாழ்வில் இன்பம் பொங்கப் போவதை உணர்த்தும் அறிகுறியாகப் பால் பொங்கி ஓங்கி எழுதலைக் கண்டு அவர்களின் மனமும் பொங்கிப் பூரிக்கும். பால் பொங்கி வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாக வேனும், ஈசானத்தை நோக்கியேனும் முதலில் சரிந்து வெளித்தள்ளி னால், அதனை நன்நிமித்தமாகக் கருதிப் புளகாங்கிதம் கொள்வர். அதன் பின்னர் குடும்பத் தலைவர் புதுநெல் குற்றியெடுத்த பச்சரிசியை தம் இருகைகளாலும் அள்ளி, சூரியபகவானை வழிபட்ட வண்ணம் பானையின் வாய்விளிம்பினை மும்முறை சுற்றி, பானையுள் இடுவர்.

தொடர்ந்து குடும்பத்தலைவி, குடும்பப் பெரியவர்கள், பிள்ளைகள் என்போர் அரிசியைப் பானையில் இடுவர். வெல்லம், கற்கண்டு, நெய், தேன், கருப்பஞ்சாறு, திராட்சை, முந்திரிப்பருப்பு, பயற்றம் பருப்பு என்பற்றைப் பாலுடன் கலந்து விட்டு தித்திக்கும் இனிய பொங்கலை ஆக்குவர்.

பொங்கிய அமுதினை மூன்று தலைவாழையிலைகளில் படைத்து; பழங்கள், கரும்பு, செவ்விளநீர், மலர்கள், முதலியவற்றைக் கொண்டு மடைபரவி; தேங்காய் உடைத்து வைத்து, நீரும் மலரும் கொண்டு அர்ச்சித்து, தூபதீபம், காட்டி, பக்தி சிரத்தையோடு திருமுறைகளைப் பாராயணஞ் செய்து, சூரிய பகவானை வணங்கி வழிபாடு செய்வர்.

இத்தினத்தில் கோயில்வழிபாடு; பெற்றோர், பெரியோர், குரு ஆகியோரை வணங்கி ஆசிபெறல்; ஏழைகள், ஆதரவற்றோர், நலிந்தோர் ஆகியோருக்கு உணவளித்தல், தானதருமங்கள் செய்தல்; இனசனபந்துக்கள், நண்பர்கள் ஆகியோருடன் கூடி மகிழ்தல்; சமூக உறவுகளைப் பேணுதல், ஒற்றுமையை பலப்படுத்துதல் போன்ற நற்கருமங்களில் ஈடுபடுவர். மனிதர்கள் கலந்து பேசிப் பழகி, மனம் விட்டு உறவாடி, அதனால் பெறும் இன்பத்தை அவாவி நிற்பவர்கள். மனிதர்கள் வெறும் யந்திரங்கள் அல்ல; ஆனால் யந்திரங்களாகத் தற்போது மாறிவருகிறார்கள் என்பதையும் சொல்லத்தான்வேண்டும். அத்தகைய மாற்றம் மனித இயல்புக்கு மாறானது. மனித உறவுகளை மதித்து, உறவாடும் ஒற்றுமையில், ஐக்கியத்தில், பரஸ்பரம் புரிந்துணர்வில் சாந்தியையும், இன்பத்தையும் நாடி நிற்கும் மனிதர்களுக்கு அவற்றை அளிக்க வல்ல தைப்பொங்கல் பண்டிகை நிச்சயம் கொண்டாடப்பட வேண்டியதே.

எனவே, தைப்பொங்கல், அன்புப் பொங்கலாக, அறிவுப் பொங்கலாக, இன்பப் பொங்கலாக, இனிமைப் பொங்கலாக, மகிழ்ச்சிப் பொங்கலாக, சர்வமங்களப் பொங்கலாக அமைய வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போமாக. சாந்தியும் சமாதானமும் ஓங்கட்டும். ''தை பிறந்தால் வழிபிறக்கும்'' என்னும் நம்பிக்கை நிஜம் ஆக மலரட்டும். அனைவர்க்கும் பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

# 18. தை அமாவாசைத் தினம்

தை அமாவாசை நாள் சைவமக்களாகிய நமக்குப் பல வகையிலும சிறப்பும் புனிதமும் பெற்று விளங்கும் திருநாளாகத் திகழ்கின்றது. உத்தராயணம் தை மாத்தில் தொடங்குகின்றது. தேவர்களுக்குப் பகற்காலம் ஆரம்பிக்கின்றது. தமிழ்ப்புத்தாண்டும் தை மாதத்திலேயே மலர்கின்றது. சகல சுபகருமங்களும், மங்கள நிகழ்ச்சிகளும் நடைபெறச் சிறந்த மாதம். அத்தகைய உத்தராயணத்திலே, தமிழ்ப்புத்தாண்டிலே வரும் முதல்அமாவாசை தை அமாவாசையாகும்.

ஆடி அமாவாசை போன்று, தை அமாவாசையும் பிதுர்கள் என்றும் தென்புலத்தார் என்றும் கூறப்படுகின்ற நம் முன்னோர்க்கு அருங்கடன் செய்வதற்குரிய சிறப்பு நாள் என்பர். இத்தினத்தில் தென் புலத்தாரை வழிபட்டு தர்ப்பணம், சிரார்த்தம், தானம் முதலியவற்றைச் செய்வதால் பிதுர்களாக உள்ள நம் மூதாதைகள் மகிழ்ந்து நமக்கு அனுக்கிரகம் செய்வார்கள். தை அமாவாசையில் விரதம் இருந்து வழிபாடு செய்வதால், பல நன்மைகள் கிட்டும்; பல்வேறு துன்பங்கள், எதிர்பாராத கஷ்டங்களிலிருந்தும் காப்பாற்றப்படுவோம். நம் தாய் தந்தையர்களை, அவர்கள் உயிரோடு இருக்கும்போது நன்கு பேணி, மரியாதை செய்து மகிழ்வித்து வருவதுடன்; அவர்கள் தெய்வமாகிய பின்பும் சிரார்த்தம் செய்தல், அமாவாசை, பௌர்ணிமை நாட்களில் அவர்களை நினைந்து விரதம் அனுட்டித்தில் என்பனவற்றைப் பிள்ளைகள் மேற்கொள்ளுதல் வேண்டும் எனச் சைவசமய நூல்கள் விதித்துள்ளன. தென்புலத்தார் வழிபாட்டினை அருங்கடன் என்றும் இன்றியமையாத கடமை என்றும் நமது சமயம் உணர்த்துகின்றது.

அமாவாசை மாதந்தோறும் வருகின்றது. எனினும் தை அமாவாசையும், ஆடி அமாவாசையும விசேஷமானவை என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

தை அமாவாசை மற்றொரு சிறப்பையும் பெற்றுள்ளது. தேவி உபாஸகர் அபிராமிப்பட்டருக்கு அம்பாள், திருக்காட்சி கொடுத்து அருளியது தை அமாவாசை தினத்தில் ஆகும். அமாவாசை அன்று முழு இருட்டாக இரவு நேரம் இருக்கும். ஆனால், அமாவாசையில் பூரணச் சந்திரப் பிரகாசத்தை ஏற்படுத்தி, அபிராமிப் பட்டரின் சந்திரப்

பிரகாசத்தை ஏற்படுத்தி, அபிராமிப்பட்டரின் பக்தியை உலகறியச் செய்தவள் அன்னை அபிராமி. அந்த அற்புதம் நிகழ்ந்தது ஒரு தை அமாவாசையில் ஆகும். தமிழ் நாட்டில், காவிரி நதியின் தென்கரையில் அமைந் துள்ளது திருக்கடவூர் என்னும் சிவத்தலம். இங்குதான் மார்க்கண் டேயருக்காக, காலனை எம்பெருமான் காலால் உதைத் தருளினார் என்று புராணம் கூறும். தேவர்கள் திருப்பாற்கடலில் கடைந்து எடுத்த அமுத கடத்தை வைத்து எடுக்க முடியாது இறைவனின் திருவருளை வேண்டி நின்றதும் திருக்கடவூரில் ஆகும். இத்திருத்தல அமுத கடேசுவரர் என்னும் திருப்பெயருடைய இறைவனுடன் வீற்றிருந்து திருவருள் பாலிக்கும் அம்பிகையின் திருப்பெயர் அபிராமி.

அபிராமிப் பட்டர், இதே திருக்கடவூரில் பிறந்தவர். அன்னை அபிராமியை மறவாத அருட்சிந்தையராய் விளங்கினார். அன்னையின் புகழ்பாடுவதையே அரும்பணியாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

தஞ்சாவூரை ஆட்சி செய்து வந்தவர் சரபோஜி மன்னர். தை அமாவாசைத் தினத்தன்று காவிரிக்கு கடலோடு கலக்கின்ற காவேரி சங்கமத்தில் புனிதநீராடி முடித்தபின்பு, திருக்கடவூர் இறைவனையும் அன்னை அபிராமியையும் வணங்குவதற்காக தமது பரிவாரங் களுடன் மன்னர் வந்த வேளை, அபிராமிப்பட்டர், அபிராமி அம்பாள் சந்நிதியில் தியானத்தில் ஒன்றித்திருந்தார். மன்னர் வந்ததைப் பட்டர் காணவில்லை.

தரிசனம் முடிந்ததும், மன்னர் அபிராமிப் பட்டரைப் பற்றி விசாரித்தார். அவர் ஒரு பித்தர் என்று கூறப்பட்டது என்றாலும் அவருடன் பேச வேண்டும் என்ற விருப்பம் மன்னருக்கு ஏற்பட்டது. பட்டரின் தெய்வீகப் பொலிவு மன்னரை ஈர்த்திருக்க வேண்டும்.

அபிராமிப்பட்டர் தியானத்திலிருந்து விழித்தார். ஆனாலும் அம்பிகையின் அருளொளியில் ஆழ்ந்து மூழ்கியிருந்த பேரானந்தத் திளைப்பிலேயே இருந்தார். மன்னர், 'அபிராமிப்பட்டரை நோக்கி, ''இன்று என்ன திதி'' என்று கேட்டார். அதற்கு பட்டர் ''இன்று பௌர்ணமி'' என்றார். மன்னர் அகன்று விட்டார்.

சுயநினைவு வந்ததும் அபிராமிப்பட்டர், நிதானம் தவறித் தாம் மன்னரிடம் அமாவாசையைப் பௌர்ணமி என்று சொன்னதை

நினைந்து பெருங்கவலை கொண்டார். அன்னையிடம் ஓடோடிச் சென்று தன்னைக் காத்தருள வேண்டும் என்று விண்ணப்பித்தார். அபிராமியை வேண்டி அந்தாதி பாடத் தொடங்கினார். அன்று பௌர்ணமிதான் என்று நிரூபிக்கும்படி வேண்டினார். சூரியனும் மறைந்தான். அபிராமி அன்னை, ஆனந்த ஜோதியாய் அருள் ஞானப் பிழம்பாய் பட்டருக்குக் காட்சி தந்து திருவருள் பாலித்தாள். அம்பிகை, தனது காதை அலங்கரித்த திருத்தோட்டினை கழற்றி, கிழக்குத் திசையில் வானத்தில் வீச, அது பூரணச்சந்திரன் பொலிவுற்று ஒளி வீசியது. இந்த அற்புதக் காட்சியை மன்னர் சரபோஜி உட்பட சகலரும் கண்டு களித்தனர். அன்னை அபிராமியின் திருவருட் சிறப்பையும், அபிராமிப் பட்டரின் பக்திச் சிறப்பையும் எண்ணி யெண்ணி வியந்தனர். இவ் அற்புத நிகழ்வு நடந்த ஒரு தைமாத அமாவாசையில் அன்றுதான் அபிராமி அந்தாதி பிறந்தது. அமாவாசை பௌர்ணிமையும் ஆனது. நாமும் அம்பிகையை வழிபட்டு, அபிராமி அந்தாதி பாடி, அருள் பெற்று உய்வு பெறுவோமாக.

''ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை,அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூ நிறத்தாளை, புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்குசமும் கரும்புமங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு
தீங்கில்லையே.''

# 19. தைப்பூசத் திருநாள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள், சிதம்பரமான்மியம் என்னும் நூலில், நடராசச் சருக்கம் என்ற அத்தியாயத்தில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்:

''தைப்பூசம் வியாழக்கிழமையோடு கூடும் சித்தயோக' தினம் வர, அன்று மத்தியானத்திலே, ஆயிர முகத்தையுடைய பானுகம்பர் ஆயிரஞ்சங்கூத, ஆயிரந்தொளையுடைய வாணாசுரன் குடமுழா ஒலிப்பிக்க, பஞ்ச துந்துபி ஒலியும் வேதவொலியும் கந்தருவரு டைய கீதவொலியும் மிக்கெழ, ஞான சபையிலே சிவபெருமான் உமாதேவியாரோடு நின்று ஆனந்த நிருத்தஞ் செய்தருளினார். வியாக்கிரபாத முனிவர், பதஞ்சலி முனிவர் என்னும் இருவரும்; பிரமா விட்டுணு முதலிய தேவர்களும், திருவுடையந்தணர் மூவாயிரவரும், பிறரும், சிவபெருமானுடைய திருவருளினாலே, ஞானக் கண்ணைப் பெற்று, அவருடைய ஆனந்த தாண்டவத்தைத் தரிசித்து, உரோமஞ் சிலிர்ப்ப, நெஞ்சு நெக்குருகக், கண்ணீர் பொழிய, சிவானந்த மாக்கடலில் மூழ்கினார்கள்.''

இந்த வகையில் தைப்பூசத்திருநாள், சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவ நடனத்தை, வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர்களும், தில்லை வாழந்தணர்களும், தேவர்களும் ஏனைய அடியார்களும் தரிசித்து ஆனந்தக் களிப்பில் மூழ்கிய அந்த நன்னாளைப் போற்று வதாகவும்; ஸ்ரீ நடராசப் பெருபான், அம்பாள், முருகப் பெருமான் ஆகியோரை வழிபாடு செய்தற்கு மிகவும் ஏற்ற புனிதநாளாகவும் சைவமக்களால் கொண்டாடப் பட்டு வருகின்றது.

இதே தைப்பூசத்தினத்தில், சிவபெருமானின் ஆனந்த தாண்டவத் தைக் கண்டு ஆனந்தக்கடலில் மூழ்கிய பதஞ்சலி முனிவர், தாம் பெற்ற இன்பத்தைச் சகல ஆன்மாக்களும் பெற வேண்டும் என்ற பெருநோக்குடன் சிவபெருமானுக்கு ஒரு விண்ணப்பம் செய்தார். ''எம்பெருமானே, இந்த ஞானசபையிலே, உமாதேவியாரோடு இன்று முதல் எக்காலமும் ஆன்மாக்களுக்கு ஆனந்த நிருத்தத்தைப் புலப்படுத்தியருளும், என்று வேண்டிக் கொண்டார். சிவபெருமான் பதஞ்சலி முனிவரின் விண்ணப்பத்தை ஏற்று, பணித்தருளியபடியே, தேவர்கள், அந்த நிருத்தஸ்தானத்தை வளைத்து, பெருமதிப்புக்

கொண்ட பொன்னினால், ஒரு மகாசபையை நிர்மாணித்தார்கள். அந்த மகாசபையே கனகசபை என்றும் பொன்னம்பலம் என்றும் கூறப்படுகிறது.

அது தில்லையிலுள்ள சிதம்பரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பேரம்பலமாகிய கைலாயமலையிலிருந்து சிற்றம்பலமாகிய சிதம்பரத் திற்கு எழுந்தருளி வந்து சிவபெருமான் அன்று தொடங்கித் தேவர் களும்; வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர், தில்லைவாழந்தணர்கள், அடியார்கள் முதலியோரும் காணப்பெற்று வணங்கச் சிவகாமியம் மையர் காண கனகசபையாம் திருச்சபையிலே எக்காலமும் திருநடனத்தைத் தரிசித்து அருள்வாராயினர்.

தில்லையிலே உள்ள சிதம்பரத்திலே, எஞ்ஞான்றும் ஸ்ரீ நடராசப் பெருமான், சிவகாமசுந்தரியம்மையாரோடும் புலப்படுத்தி யருளுகின்ற ஆனந்தத் தாண்டவத்திற்கும் தைப்பூசத்திற்கும் தொடர்பு உள்ளமையை நூல்கள் காட்டுகின்றன. தைப்பூசத்திருநாளை, இறைவன் தமது தாண்டவத்திரு நிருத்தத்தைப் பக்தகோடிகளுக்கு முதலில் தரிசிப்பித்து அருளுவதற்கு தெரிந்தெடுத்தமை, தைப்பூசப் புண்ணியநாளின் சிறப்பினை உணர்த்துவதாக உள்ளது.

இத்தினத்தில் கோயில் என்று சிறப்புப் பெயர் பெற்ற சிதம்பரம் எனும் தலம் பற்றியும், ஆங்கு கனகசபையிலே திருநடனம் செய்கின்ற் ஸ்ரீ நடராசாப் பெருமான், சிவகாமசுந்தரியம்மாள் பற்றியும் சிந்தித்து நமது வல்வினைகளைப் போக்கிக் கொள்வோம்.

முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான், இப்பிரபஞ்சம் முழுவதி லும் நீக்கமற வியாபித்துள்ளார். ஆயினும் அவ்வுண்மை ஆன்மாக்க ளாகிய யாவருக்கும் எளிதில் விளங்காது என்பதனால், ஆன்மாக்கள் அனைவரும் தம்மை வழிபட்டு உய்வு பெறும் பொருட்டு பூமியில் பல ஸ்தலங்களைச் சிவபெருமான் தோற்றுவித்துள்ளார். அவைகளுள் அறுபத்தெட்டுத் தலங்கள் சிறந்தனவாக நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் ஆறுதலங்கள் மிகச் சிறந்தன. அந்த ஆறுதலங்களுள்ளும், திருவாரூர், காசி, சிதம்பரம் எனும் மூன்றுதலங்கள் மிகமிகச் சிறந்தன.

திருவாரூரில் பிறந்தவர்களும், காசியில் இறந்தவர்களும், சிதம்பரத்திலே சிவபிரானின் திருவடிகளைத் தரிசித்தவர்களும் பிறவிப் பெரும் பிணியிலிருந்தும் நீங்கப் பெற்றவராய் முத்தியை அடைவார்கள். அதனாலேயே இம்மூன்று தலங்களும் மிகமிகச்

சிறந்தனவாகக் கொள்ளப்படுகின்றன.

திருவாரூரில் பிறத்தல், முன்செய்த நல்வினையினால் நிச்சயிக்கப்படுகிறது. அது சிரமமானது. காசியில் இறத்தல் என்பதும் எல்லோருக்கும் கைவரக்கூடியதன்று. அதுவும் மிகச் சிரமமானது. ஆனால் சிதம்பரம் சென்று சிவ பெருமானின் திருவடிகளைத் தரிசித்த மாத்திரத்தே முத்தி உறுதியாகி விடுகிறது.

சிதம்பரத்தில் ஞானசபையிலே, சிவபெருமான், ஸ்ரீ நடராச வடிவந்தாங்கி, சிவகாமியம்மையார் காண சகல ஆன்மாக்களும் உய்வு பெறும் பொருட்டும், உலகினை இயக்கம் செய்யும் நோக்கிலும், அல்லும் பகலும் அனவரதமும் இடைவிடாது ஆடல் செய்து அருளுகின்றார்.

ஸ்ரீ நடராசப் பெருமானாகிய சபாநாயகருடைய வடிவம் ஸ்ரீ பஞ்சாட்சர வடிவம், அவர் நிகழ்த்தும் ஆனந்த நடனம் பஞ்சகிருத்தியம் ஆகும். பஞ்சகிருத்தியம் என்பது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களும் ஆம். திருக்கரத்தில் பொருந்தியுள்ள டமருகம் படைத்தல் தொழிலையும், அபயகரம் காத்தல் தொழிலையும், அக்கினி அழித்தலையும் குறிக்கின்றன.

சிதம்பரத்தின் கண்ணுள்ள சிவகங்கைத் தீர்த்தத்திலே புனித நீராடி, நடேசப் பெருமானுடைய ஆனந்த நிருத்தத்தைக் கண்குளிரக் கண்டு வணங்கி சிவானந்தப் பெருவாழ்வினைப் பெற்றவர்கள் பலர். அவர்களுள் வியாக்கிரபாதர், பதஞ்சலி முனிவர், உபமன்னியு முனிவர், தில்லைவாழந்தணர்கள், வியாசமுனிவர், சுகர் முனிவர், சௌனக முனிவர், சைமினி முனிவர், சூதமுனிவர் என்போரும் அடங்குவர்.

வியாக்கிரபாத முனிவருடைய அநுஞ்ஞைப்படி இரணிய வன்மன் எனும் அரசன் நடேசப் பெருமானுக்குத் திருவம்பலமும், திருமூலட்டானேசுரருக்குத் திருக்கோயிலும் திருமாளிகைகளும், திருமதில்களும், திருக்கோபுரங்களும் செய்வித்தான். திருமாளிகை களில் தில்லைவாழந்தணர்கள் வாழ்ந்தனர். பூசை, திருவிழா முதலியவற்றிற்கு வேண்டும் நிபந்தங்களும் இரணியவன்மனாரால் அமைக்கப்பட்டது. நித்தியபூசை, பன்னிரண்டு மாதப்பூசை, தமனகஞ் சாத்துதல், பவித்திரஞ் சாத்துதல், ஆனியுற்சவம், ஆடிநீர்விளையாட்டு

உற்சவம், ஐப்பசி உற்சவம், கார்த்திகைத் திருவிளக்கீடு, மார்கழி உற்சவம், தைப்பூசத் திருப்பாவாடை, மாசியுற்சவம் முதலியவை களெல்லாம் விதிப்படி செய்விப்பாராயினர். சபாநடேசருக்கு வருடத்தில் ஆறு விசேட அபிடேகங்களும் நடத்தப்படுகின்றன.

சிதம்பரத்தில் நடைபெறுகின்ற தைப்பூசத்திருப்பாவாடை பற்றிச் சிறிது நோக்குவோம். திருப்பாவாடை உற்சவம் தைப்பூசத்தன்று நடாத்தப்படுகின்றது. இதற்கெனச் சாசனமும் எழுதப்பட்டிருகிறது. இந்தச் சாசனத்தில் திருப்பாவாடை உற்சவத்தைத் தைப்பூசத்தன்று நிகழ்த்துவதற்காக அந்தக் காலத்திலேயே நிலத்தானம் செய்யப் பட்டிருந்தமை பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. இன்னொரு சாசனத்திலிருந்து அரிசி, பருப்பு, சர்க்கரை, தேங்காய், பலாப்பழம் முதலியவற்றைக் கொண்டு இனிப்புச் சுவை கொண்ட பொங்கல் திருவமுது, தைப்பூசத் திருப்பாவாடையின் போது செய்வதற்கு நிலத்தானம் செய்யப்பட்டமை தெரிய வருகின்றது. இவையாவும் சிதம்பரத்தில், தைப்பூசத்திருநாள் பெற்றுள்ள சிறப்பினையும், மகிமை யையும் எடுத்துக் காட்டுகின்றன. தைப்பூச உற்சவத்தின் தொன்மை யும் இதிலிருந்து தெளிவாகின்றது.

தைப்பூசம், முருகன் கோயில்களிலும் சிறப்பாக அனுட்டிக்கப் படுகிறது. விசேட பூசைகள், ஆராதனைகள், ஆயிரத்தெட்டுச் சங்குகளினால் சங்காபிஷேகம், இலட்சார்ச்சனை, மஞ்சம் முதலிய வற்றில் திருவுலா வருதல் ஆகியன கோயில்களில் இடம்பெறுகின்றன. கிராமியத் தெய்வங்களுக்குப் பொங்கல், மடை, விசேட பூசைகள் என்பனவும் நிகழ்த்தப்பட்டு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. நெல் அறுவடைக் காலமாகவும், இப்பருவம் திகழ்வதால் புதிதெடுத்தல், புதிதுண்ணல் என்னும் பாரம்பரிய வைபங்களும் தைப்பூசத்தினத் தன்று கமக்காரர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிதெடுத்தல் என்பது வயலில் விளைந்துள்ள புதிய நெற்கதிர் களை முதன்முதலாகக் குடும்பத்தலைவன் சுபவேளையில் அரிவாள் கொண்டு கொய்தல்,இறைவனை நினைந்து, நெல் பொலியவேண்டும் என வாழ்த்தி வணங்கி, மிகுந்த பயபக்தியுடன் ஒரு சமயச் சடங்காகவே வேளாண்மை செய்வோர், புதிதெடுத்தல் வைபவத்தை நிகழ்த்துகின்றனர்.

அன்றையதினம், யோகம், கரணம், திதி என்பன வாய்ப்பாக

இருக்க, ராகுகாலத்தைத் தவிர்த்து பட்சி அரசு அல்லது உண்டியில் இருக்க, வரும் சுபவேளையில் வீட்டில், குத்துவிளக்கு ஏற்றி, பிள்ளையார் பிடித்து வைத்து, நிறைகுடம் வைத்து, அவற்றின் முன்பாக அருவி அரிவாள்களையும் வைத்து, தேங்காய் உடைத்து, தூபதீபம் காட்டி, வழிபாடு செய்து, குடும்பத்தலைவன் அரிவாள்களைத் தூக்கி, ஆண் பிள்ளைகள் பின்தொடர, பூரணகும்பத்தை வலம் வந்து, சுமங்கலியான மனைவி வழியனுப்ப, விடைபெற்று, வயலுக்குச் சென்று தேங்காய் உடைத்து, தந்தையும் ஆண்பிள்ளைகளும் முற்றிய நெற்கதிர்களைக் கொய்து, பிடியாகக் கட்டி, தலைமேல் வைத்து கையினால் பிடித்துக் கொண்டு, வீட்டுக்கு வந்து, மனையாளுடன் சேர்ந்து, சுவாமிப் படத்துக்கு முன்னால் வைத்து வழிபடுவர். அதன் பின், நெற்கதிர்களைக் காம்புடன், ஒற்றைவிழ ஐந்து, ஏழு, என எடுத்து, மூன்று மாவிலைகளுடன் சேர்த்து, வீட்டுக்கூரைமரம் ஒன்றில், கதிர்கள் மேல்நோக்கி அமையும்படி கட்டி விடுவார்கள். அவ்வாறே அடுக்களை என்று சொல்லப்படுகின்ற குசினியின், கைமரத்திலும் நெற்கதிர்களைக் கட்டிவைப்பர். இவையாவும் இறை சிந்தையுடன், மிகுந்த பயபக்தி கலந்து செய்யப்படும். வீட்டில் உள்ள பெரியோர்கள் வழிநடத்துவர். சகுனம், நிமித்தம் என்பனவற்றை இவ்வைபவத்தின்போது பார்த்து, எதிர்கால நிலைமையைக் கணித்துக் கொள்வர். இத்தினத்திற்கு முதல் புதிய நெல்லையாரும் கொடுத்தால் வாங்கமாட்டார்கள். தமது வயலிலிருந்து முதன்முதலாக நெற்தானியங்களை வீட்டிற்குக் கொண்டு வருதலையே புதிதெடுத்தல் என்கின்றனர்.

அதன் பின்னர், குடும்பத்தலைவி புது அரிசியை உலையில் இட்டுச் சமைத்துப் பொங்கலை விளக்கிற்குப் படைப்பார். குடும்பத் தலைவன், பல்வேறு கறிவகைகள், நெய், தயிர், பழங்கள், சர்க்கரைப் பொங்கல் ஆகியவற்றுடன் படைக்கப்பெற்ற சாதத்தைக் குழைத்துக் கவளம், கவளமாக எடுத்து மனைவி, மக்கள், சுற்றத்தவர், உறவினர்களுக்கு வழங்குவார். அது ஒரு விருந்து வைபவமாகவே நடத்தப்படும்.

இதனையே புதிதுண்ணல் என்கின்றனர். புதிதுண்ணும் வரை, புதிய அரசியைச் சமைத்து உண்ணமாட்டார்கள். இந்த வழக்கம் நெடுங்காலமாக இருந்துவருகிறது.

தைப்பூசத் திருநாளன்று குழந்தைகளுக்குக் கர்ணவேகனா

என்னும் காது குத்தல், அன்னப்பிராசனம், வித்தியாரம்பம் என்பனவும் நடத்தப்படுகின்றன. தைப்பூசம் ஒரு நிறைந்தநாள்; எல்லாக் குற்றங்களையும் நீக்கும் நாள்; எடுத்த கருமங்கள். அனைத்தும் கைகூட வைக்கும் நாள் என்பதால் புதிய கருமங்களை ஆரம்பிப்பதற்குத் தைப்பூச நன்னாளைத் தேர்ந்தெடுக்கின்றனர். இந்த நம்பிக்கை மிகப் பழைய காலந்தொட்டு மக்களிடையே இருந்து வருகிறது. நம்பிக்கைகள், உறுதியாக இருக்குமேயானால் அவை வீண்போவதில்லை.

திருஞானசம்பந்தர் காலத்தில் தைப்பூச உற்சவம் மிகுந்த சிறப்பினைப் பெற்றிருந்தமை, அவரின் தேவாரப்பாடல் ஒன்றி விருந்து அறியக்கூடியதாக உள்ளது.

''மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச்சர மமர்ந்தான்
நெய்ப்பூசு மொண் புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்''

என்பது சம்பந்தர் தேவாரம். திருமயிலையில் இறந்த பூம்பாவை என்ற பெண்ணை உயிர்ப்பிக்க, கபாலீச்சரத்தானை வேண்டிப் பாடிய திருப்பதிகத்தில் தைப்பூசம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம் என்பதிலிருந்து பெரும்பாலும் பெண்களே தைப்பூச உற்சவத்தைக் கொண்டாடினர் போலும் என்று எண்ணத் தோன்றுகிறது.

தைப்பூசத் திருநாள், இறைவனை வழிபாடு செய்வதற்குச் சிறந்த நாள்; புதிய கருமங்களைத் தொடங்குவதற்குரிய புனிதநாள்; புதிதெடுத்தல், புதிதுண்ணல் செய்யும் புண்ணிய நாள்; குழந்தைகளுக்கு ஏடுதுவக்குதல், காதுகுத்துதல், சோறு தீத்துதல் முதலிய நற்காரியங்களுக்கேற்ற மங்கலநாள். இந்தப் பெருநாளில் நாமும் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணி, அநுசரித்து, இறைசிந்தனையில் கருத்தை ஊன்றி, உய்வு பெற்று வாழ்வோமாக.

# 20. மகாசிவராத்திரி

சிவ வழிபாடு, மிகத் தொன்மையான காலத்திலிருந்து நடை பெற்று வருகிறது. இவ்வுலகின் கண்ணே காணப்படுகின்ற சமயங் களுள் மிகப் பழமையும் தொன்மையும் வாய்ந்தது சைவ சமயம். சைவம் என்றால் சிவசம்பந்தம் என்று பொருள் கொள்ளப்படுகிறது. சைவத்தின் முழு முதற்கடவுள், சிவம். சிவபரம்பொருளே இவ்வுலகத் திற்குக் கருத்தா. அதன் பொருள் என்னவெனில் தனு, கரண, புவன, போகங்கள் அனைத்தையும் படைத்து, உயிர்களை உடம்போடு இணைத்து வாழச் செய்வது சிவபரம்பொருள் என்பதாகும். இவ்வுலகில், உடம்புக்கு அறிவோ, இயக்கமோ இல்லையாதலால், உடம்பானது தானாகச் சென்று உயிரை நாடிப் பற்றிக் கொள்ள மாட்டாது. உயிரும் தானாக ஓர் உடம்பை எடுத்துக் கொள்ள முடியாது. உயிர் உடம்பின்றித் தன் அறிவையோ ஆற்றலையோ பயன்படுத்த அதற்கு இயலாது. உயிரற்ற உடம்பும் செயலற்றது; இயக்கமற்றது. உயிரும் உடம்பும் சம்பந்தப்படுத்தப் படுவதற்கும் மூன்றாவதான ஒன்று இருக்க வேண்டும் என்பது உணரப்பட்டது. அதையே கடவுள் என்றனர். சைவர்கள், கடவுளை சிவம் என்று பெயரிட்டு அழைத்தனர்.

உயிர்களுக்கு உடம்பைத் தந்தவன் சிவன். உடம்பு என்பது தோல், எலும்பு, சதை, புலன்கள் என்பவற்றுடன், அதற்கு உள்ளீடாய் நிற்கும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் உட்கரணங்களை யும், தத்துவமயமான சூக்கும, காரண உடம்புகளையும் உள்ளடக்கிய தாகும். உயிர்களுக்காகவே, நூதனமான உடம்பை மாத்திரமல்ல, இந்த உலகத்தையும், போகங்களையும் படைத்துத் தந்துள்ள சிவத்திற்கு, உயிர்கள் எத்துணை நன்றியறிதலும் கடப்பாடும் கொண்டவையாக விளங்கவேண்டும். உயிர்களுக்கும் சிவத்திற்கு முள்ள சம்பந்தம்; உலகத்துக்கும் சிவத்துக்கும் உள்ள சம்பந்தம் என்பன அளந்தறிய முடியாதவை. சிவம், உயிர், உலகம் ஆகியவற் றிற்கிடையேயான சம்பந்தத்தைக் கூறுவது சைவம்.

இவ்வுடம்பை நாம் பெற்றதனால், அதன் உதவியோடு கடவுளை, சிவத்தை நாம் வழிபாடு செய்யக்கூடியதாக உள்ளது என்பதை நாம் உணர்ந்து கொண்டால், பிறவிப் பயனை நன்கு தெரிந்து கொண்டவர்கள் ஆவோம்.

''மனம் முதலிய அகக் கருவிகளையும்; மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிய அறிகருவிகளையும்; கை, கால் முதலிய தொழிற் கருவிகளையும் இறைபணி செய்யச் செலுத்துவதே வழிபாடாகும்.'' என்று கூறப்படுகிறது.

நமது உள்ளம் ஆனது ஒரு நிலையில் நிற்பதில்லை. அது வழிபாட்டிற்கு இடையூறாக உள்ளது. மனம் அலையும் இயல்பு டையது. பல திசைகளில் அலைந்து கொண்டிருக்கும் மனத்தை ஒரு வழிப்படுப்படுத்த வேண்டும். அதுவும் இறைவனை நோக்கியதாக அமையும்போதே வழிபாடு முட்டின்றி நடைபெறுகிறது. பல்வகைப் பட்ட நினைவுகளால் மனம் அங்கும் இங்கும் உழன்று கொண்டு இருக்கும் போது வழிபாடு செய்வது முடியாத காரியம்.

பெரியவர்கள் மனத்தைக் குரங்கிற்கும், குதிரைக்கும் ஒப்பிடுவர். ''சும்மா இருக்கின்ற திறன் அரிது காண்'', என்கிறார் தாயுமானவர். மனத்தை ஒரு நிலையில் வைத்திருப்பது அத்துணை எளிதான காரியம் அன்று.

மனத்தை ஒரு நிலைப்படுத்துவதற்குச் சாதனை வேண்டும். அத்தோடு இறையருளும் வேண்டும். எல்லாம் புனித நூல்களும் மனத்தைச் செம்மைப்படுத்தி ஒருமைப்படுத்த வழிகூறுகின்றன. இறைபணி செய்தல், விரதம் அனுட்டித்தல் மூலம் மனத்தையும், பொறிகளையும் இறைவன்பாற் சேர்க்க வேண்டும். இறைவழிபாட்டினால் உள்ளம் தூய்மை அடையும்; அங்கிங்கு என்று அலைவதை நிறுத்தும்; இறைவன் திருவருள் மனதில் பதிய வாய்ப்பு உண்டாகும். இந்த வகையில் நமது மனம் மொழி மெய்களைச் சிவவழிபாட்டில் ஒன்றைச் செய்வதற்கு வாய்பாகச் சிவராத்திரி விளங்குகின்றது.

விரதமாவது ''மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதல்'' என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விரதத்திற்கு வரைவிலக்கணம் கூறியுள்ளார்.

சிவராத்திரி விரதம் சிவனை நோக்கி மேற்கொள்ளப்படுகின்ற விரதம். விழித்திரு, பசித்திரு, ~~விரதம்~~ தனித்திரு என்னும் மூன்றையும் சிவராத்திரி விரதம் அனுட்டிப்பவர்கள் கடைப்பிடிக்கின்றனர்.

மகா.
தவிப்பு.



விழித்திருத்தல் ஆவது கண்தூங்காது சிவராத்திரி தினம் அன்று பகலும் இரவும், பாறணை செய்த பின் வருகின்ற பகலிலும் கண்விழித்து நித்திரை செய்யாது இருத்தல் ஆகும். ஒரு கணமேனும் சிவனை நினையாது இருத்தல் ஆகாது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. அது மட்டு மல்ல விரதநாட்களில் நல்லனவற்றைச் சிந்திப்பதிலும், கேட்பதிலும் பேசிப் பரவுவதிலும், நல்ல காரியங்களைச் செய்வதிலும் விழிப்பாய், கண்ணுங்கருத்துமாய் இருத்தல் வேண்டும். அதே வேளை கூடாதனவற்றில் மனத்தைச் செலுத்தாமல் விடுவதிலும்; கெட்டவற்றைப் பேசாது, கேளாது, பாராது தவிர்ப்பதிலும்; தீயனவற்றையும், தீமை பயக்கக் கூடியவற்றையும், தீயசெய்கைகளையும் புரியாமல் விடுவதிலும் மிக விழிப்பாக இருத்தல் அவசியமாகும். இதுவே விரதமாகும். அப்படியானால், சதா நேரமும் மனம் மொழி மெய்யினால் இறைவனை வழிபட்டவண்ணம் இருத்தல் வேண்டும். அவ்வாறு இறைவனைச் சிந்தையில் இருத்தி அவனை மெய்யன் போடு வழிபடுதலில் விழிப்பாய் இருப்பின், அதுவே விரதமாகும்; உபவாசம் என்பதும் அதுவே. சிவத்தோடு உடன் உறைதல், உடன்வாசஞ்செய்தல் என்பது உபவாசம் என்பதன் கருத்து.

சிவத்தோடு நாம் உபவாசம் செய்வதற்கு நமக்கு இடையூறாக மனம் இருக்கின்றது.

மனம் எம்முடைய சொல்லைக் கேட்காது, எமக்கு வஞ்சகம் செய்யும் ஐந்து புலன்களினதும் சொற்படி நடப்பதால், மனம் எமது கட்டுப்பாட்டிற்குள் வருவதில்லை. எனவே மனத்தை இந்த பஞ்சப் புலன்களின் வழி அதாவது மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றின் வழி போகாது தடுப்பதற்கு எம் ஆன்றோர் கூறுகின்ற நெறிதான் ''பசித்திரு'' என்பதாகும். மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டுத்தான் உணவை முற்றாக விடுத்தலும் சுருக்குதலும் வேண்டும். சிவத்தோடு உபவாசம் செய்வதற்கு நமக்குக் குந்தகமாக உள்ள மனத்தைக் கட்டுப்படுத்தி எமக்குச் சார்பாக இருக்கச் செய்வதற்கும்; மனத்தை ஒரு வழிப்படுத்த, சிவசிந்தனையில், சிவபுண்ணியங்களில், சிவத் தொண்டுகளில் நிலைக்கச் செய்வதற்கும் உணவு ஆகாரங்கள், பானங்கள் என்பனவற்றை உட்கொள்ளாது பசித்திருக்கின்றனர் விரதிகள்.

நாம் தனித்திருத்தல் என்பது உலகியல் பந்தங்களுடன் சேர்ந்திருக்காது, அவற்றினின்றும் விடுபட்டுச் சுதந்திரமாக இருத்தல்,

நாம் நாமாக இருத்தல். அப்போதுதான் நாம் சிவத்தோடு சேர்ந்திருக்க, உபவாசம் செய்ய வாய்ப்பு உண்டாகிறது. எனவேதான் விரதம் அனுட்டிப்பவரை நோக்கி, ''தனித்திரு'' என்று கூறப்பட்டது. ஒவ்வாதவைகளுடனும், ஒவ்வாதவர்களுடனும் கூட்டுச் சேரந்திருந் தால் இறைவனின் அருள் கிடைக்காது. இறைவனின் அருள் பெறுவதற்கு கூடாதவற்றினின்றும் எம்மை விடுவித்துத் தனித்திருப் போமானால், இறைவன் தாமாகவே வந்து எமக்கு அருள் பாலிப்பான்; எம்முடன் சேர்ந்து உடன் உறைவான். அதுவே உபவாசம் ஆகும்.

மாசிமாதத்தில் வருகின்ற அபரபக்கத்துச் சதுர்த்தசி நாளில் மகாசிவராத்திரி இடம் பெறுகின்றது. மாசி அமாவாசைக்கு முதல் நாளாகும். சதுர்த்தசியுடன் திருவோண நட்சத்திரமும் சேர்ந்திருந்தால் அதி சிறப்பாகும். ஒவ்வொரு மாதமும் அபரபக்கச் சதுர்த்தசித் தினத்தன்று சிவராத்திரி வருகிறது. அது மாத சிவராத்திரி ஆகும். மாசி மாதத்துச் சிவராத்திரியை மகாசிவராத்திரி என விசேடமாகக் குறிப்பிடுகின்றனர். மகாசிவராத்திரி நடுஇரவு, ''சிவ நிசி'' எனப் படுகிறது. அந்த சிவநிசியில்தான் 'இலிங்கோற்பவம்' நிகழ்ந்தது.

''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி''யாகச் சிவப்பரம்பொருள், பிரமவிட்டுணுக்கள் முன்தோன்றி நிற்க, அதன் அடியையும் முடியையும் அவர்களால் தேடிக் கண்டுகொள்ள முடியாத நிலையில் அயர்ந்து இருந்தபோது, சிவபெருமான் அனற்பிழம்பு வடிவமாகச் சிவலிங்கத் திருமேனியில், மாசி மாத அபரபக்கச் சதுர்த்தசி நடுநிசியில், பிரம விட்டுணுக்கள் முன் தோன்றினார். பிரமா, விட்டுணு முதலிய தேவர்கள், சிவலிங்கத்தை வழிபட்டு அருள் பெற்றனர். பிரமாவோ, விட்டுணுவோ பெரியவர் என்ற சச்சரவும் அத்துடன் நீங்கிற்று. சிவலிங்கம் தோன்றிய நடுநிசி வேளையே இலிங்கோற்பவ காலம் ஆகும்.

அருவம், உருவம், அருவுருவம் என மூன்று திருமேனிகளைச் சிவம் கொண்டுள்ளது. சிவலிங்கம், சிவத்தின் அருவுருவத் திருமேனியாகும். ''இலிங்கோற்பவம்'' நிகழ்ந்த மாசிமாதத்து அபர பக்கச் சதுர்த்தசி நாளே, ''மகாசிவராத்திரி''யாகச் சிறப்புப் பெறுகிறது.

மகாசிவராத்திரி நான்கு சாமமும் சிவலிங்க பூசையும் வழிபாடும் நடைபெறவேண்டும். ''சிவபூசை, வழிபாடு செய்வோர் முதற்

சாமத்தின்போது, மூல மூர்த்திக்கு பஞ்சகவ்வியத்தினால் அபிடேகஞ் செய்து, சந்தனக்குழம்பு சாத்தி, வில்வம், தாமரைமலர் என்பவற்றால் அர்ச்சித்து; பயற்றம்பரப்பு அமுதினை நிவேதித்துப் பூசை செய்வர். இரண்டாம் சாமப் பூசையின்போது பஞ்சாமிர்தத்தினால் அபிடேகம் செய்து; அகிற்குழம்பு சாத்தி; வில்வம், தாமரை, துளசி முதலிய வற்றால் அர்ச்சித்துப், பாயசம் நிவேதித்துப் பூசை செய்து வழிபடுவர். மூன்றாம் சாமத்தின்போது தேன் அபிடேகஞ்செய்து; பச்சைக் கர்ப்பூரச் சுண்ணம் சாத்தி; வில்வம், சண்பகமலர் கொண்டு அர்ச்சித்து; எள்ளன்னம் நிவேதித்துப் பூசை செய்து வழிபடுவர். நான்காம் சாமத்துப் பூசையின்போது, கருப்பஞ்சாற்றினால் அபிஷேகம் செய்து; குங்குமம் சாத்தி; வில்வம், நநதியாவர்த்தனம் கொண்டு அர்ச்சித்து; சுத்த அன்னம் படைத்து பூசை செய்வர்.''

நான்கு சாமப் பூசைகளின்போதும் வில்வத் தழைகளினால் அர்ச்சித்தல் முக்கியமானதாகும். சிவபூசையில் வில்வத்திற்கு அத்துணை மகத்துவம் உண்டு என்று நூல்கள் கூறுகின்றன. சிவராத்திரி என்று தெரியாமலே, அந்த இரவில், கொடிய விலங்குகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, காட்டில் உள்ள வில்வமரம் ஒன்றின் மேல் ஏறி இருந்து கொண்ட வேடன் ஒருவன், நித்திரையைத் தவிர்ப்பதற்காக, வில்வமரத்தின் இலைகளைப் பிடுங்கி ஒவ்வொன் றாகக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். கீழே மண்ணிற்குள் புதைந்திருந்த சிவலிங்கத்தின் மீது, அந்த வில்வ இலைகள் இரவு முழுவதும் விழுந்தன. சிவபெருமானுக்கு வில்வந்தழைகளால் அர்ச்சிப்பது போலாயிற்று. அந்த இரவு, சிவராத்திரியாகவும் இருந்தது. எனவே, அங்குலன் என்ற அந்த வேடனுக்குச் சிவபூசை செய்த பலனைச் சிவபெருமான் அருளினார். வேடன் சிவ கணங்களுள் ஒருவனானான் என்று புராணம் கூறுகின்றது. இவ்வாறே குரங்கு ஒன்றும், வில்வந்தழைகளை பிடுங்கி, இரவு முழுவதும் கீழே போட, அவை மரத்தின கீழுள்ள சிவலிங்கத்தின் மீது விழ, வில்வ அர்ச்சனையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதுவும் ஒரு சிவராத்திரி நாள் ஆகும். வில்வத்தினால் சிவபூசை செய்த பலனை அக்குரங்குக் கும் சிவபெருமான் அருளினார். முசுகுந்தச் சக்கரவர்த்தியாக அடுத்த பிறவியில் அமையத் திருவருள் பாலித்தது. வில்வத்தின் மகிமை மதிப்பிடக் கூடியதன்று.

மகாசிவராத்திரி விரதத்தை அனுட்டிப்பவர்கள் அகப்புறத் தூய்மையுடையராய், முதல் நாளில் ஒரு வேளை உணவை உண்டு,

சிவ்ராத்திரிநாள் முழுவதும் உணவை உட்கொள்ளாமல் உபவாசம் இருந்து, இரவு முழுவதும் நித்திரை விழித்திருந்து, சிவவழிபாடு செய்து, நான்கு சாமப் பூசைகளில் கலந்து கொண்டு, நடுநிசியாம் சிவநிசியில் இலிங்கோற்பவம் தரிசித்து, மறுநாட்காலையில் முறைப்படி பாரணம் செய்து விரதத்தை நிறைவு செய்து கொள்வர். எல்லா நாட்களும் சிவனின் நாட்கள்தான். நாம் எல்லோருமே சிவசொத்துக்களே என்பதில் சந்தேகம் இல்லை. எனினும், சிவராத்திரிதினம், எல்லாம் வல்ல சிவபரம்பொருளை உண்மையை சத்தியத்தை,மனம், மொழி மெய்யினால் உள்ளன்போடு வழிபட்டு, இம்மை, மறுமை நலன்களையும்; பாப விமோசனங்களையும் அடையப் பெற்று; மனிதப் பிறவியின் இறுதியும் அதி உயர் இலட்சியமான முத்தியின்பத்தையும் அடைவதற்கு மிகச் சிறந்த நாளாகச் சைவநூல்கள், புராணங்கள் என்பன கூறுகின்றன.

''சிவாய நம'', என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை'' என்னும் ஆணித்தரமான உறுதிமொழி பண்டுதொட்டு நம்மிடையே நிலவி வருகிறது. இது முற்றிலும் உண்மை.

சிவபெருமான் முழுமுதற்கடவுள். ''சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினம் இல்லை'' என்கிறது திருமூலர் திருமந்திரம். அவர் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர். நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் என்றும் சிவபிரானின் திருவடிகளை நினைந்து, வணங்கி வருபவர்க்கு ஒரு குறையுமில்லை. எல்லாம் நிறைவாகவே இருக்கும். எந்நாளும் இன்பமே என்ற நிலை ஏற்பட்டுவிடும் என்பது உறுதி.

# 21. மாசிமகம்

சைவசமயம் பக்திநெறிக்கு மிகுந்த முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது. பக்திநெறிக்கு எமது பழைய வினைகளையெல்லாம் மாறச்செய்யும் வலிமை உண்டு என்கிறார் மணிவாசகப் பெருமான். அதுமட்டுமல்ல, புதிய வினைகளையும், எம்மை அணுகவிடாது தடுக்கும் ஆற்றலும் பக்திநெறிக்கு உண்டு. நாம் செய்கின்ற வினைகள், அவை நல்வினையாகவோ, தீவினையாகவோ, இருக்கலாம், பிறவிகள் தோறும் எம்மைத் தொடருகின்றன. அவற்றை அனுபவித்தே ஆக வேண்டும். அதற்காகவே பிறவிகள் எடுக்கப் படுகின்றன. எடுத்த பிறவிகளில், பழைய வினைகளுடன், புதிய வினைகளும் வந்து சேர்ந்துவிடுகின்றன. சுமைகள் அதிசரிக்கின்றன. உயிர்கள் சுமைதாங்கிகள் ஆகின்றன. எனவே, பிறவி என்று ஒன்று இருக்கும்போது, துன்பங்களும் இருக்கத்தான் செய்யும். பிறவிக்குக் காரணம் செய்யப்படுகின்ற வினைகள். வினைகளின் தன்மை, அளவு என்பவற்றிற்கேற்ப, பிறவிகளின் வகைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. பிறவிகளின் வகைகள் எவை, என்பது பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் பின்வருமாறு திருவாசகத்தில் கூறியுள்ளார்:

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்..''

என்னும் பாடல் தொடரிலிருந்து பிறப்புக்களின் வகை பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் பிறப்புக்கள் எழுவகை யென்றும், தேவர், மனிதர் நீர்வாழ்வன, விலங்கு, ஊர்வன, பறவை, தாவரம் என்பனவே அவையென்றும், இந்து சமய நூல்கள் கூறுகின்றன. அவற்றுள் தேவர், மனிதர் என்போரே உயர்திணையைச் சேர்ந்தவர்கள். ஏனைய யாவும் அஃறிணையைச் சார்ந்தவை.

மனிதப் பிறவி, பிறவிகளுக்குள் உயர்வானது என்று கொண்டு, உயர்திணையில் வைக்கப்பட்டுள்ளதற்கு காரணங்கள் பல உண்டு. மற்றைய பிறவிகளை உயிர்கள் எடுக்கும் காலங்களில், உயிர்களின்

இலட்சியம் அல்லது குறிக்கோள் நிறைவேறுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. அவ்வாறாயின், உயிர்களின் இலட்சியம் என்ன? என்பதை நாம் அறிய வேண்டும். சைவசித்தாந்த அடிப்படையில் நோக்கும் போது, உயிர்களின் இலட்சியம், பிறவிக்குக் காரணமாக உள்ள வினைகளிலிருந்து விடுபட்டு; துன்பங்களுக்கு ஏதுக்களான மலங்களின் பிடியிலிருந்து விடுதலை பெற்று, பிறப்பும் இறப்பும் இல்லாத பேரானந்தப் பெருவாழ்வினை எய்துதல். சுருங்கக் கூறின், உயிர்களின் இறுதி இலட்சியம், முத்தி அடைதல். முத்தியடைதல் என்பது பதியாகிய சிவத்தைப் பசுவாகிய உயிர் சென்றடைதல்.

உயிர்கள் இந்த உயர்இலட்சியத்தை அடைவதற்கு, மனிதப் பிறவி எடுக்கும் காலமே மிகச் சிறந்தது. அதனாலேயே பெறுதற்கரிய பிறவியாகவும், உயர்பிறவியாகவும் மனிதப் பிறவி கொள்ளப் படுகிறது. ''இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, யாதுமறி யேன்'' என்கிறார் ஓர் அருளாளர். ''மனித்தப் பிறவியும் வேண்டு வதே இந்த மாநிலத்தே'' என்கிறார் அப்பர் அடிகள். ''நாம் இந்த மனித சரீரத்தை எடுத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற் காகவே'' என்கிறார் நாவலர் பெருமான். மனிதப் பிறவி, ஆன்மா ஈடேற்றம் பெறுவதற்கு, உயிருக்கு வழங்கப்பட்ட இறுதிச் சந்தர்ப்பம் என்பது உணர்தற்பாலது.

துன்பங்களுக்குக் காரணம், பிறப்பு எடுத்தமை. பிறவிக்குக் காரணம் வினை. வினைகள் நீங்கப் பெறுவதற்கு கிடைத்த ஒரே சந்தர்ப்பம் மனிதப் பிறவி. எனவே வினைகள் நீங்கப் பெற்று, பிறவியை ஒழித்து, விடுதலை பெறக்கூடியது. நாம் அரிதாகப் பெற்றுள்ள மனிதப் பிறவியை எடுத்த காலத்தில்தான். எனவே, மனிதர்களாகப் பிறந்த நாம், இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி, இறைவனை அடைதலாகிய ஆன்மீக இலட்சியத்தை எய்துவதற்கு முயல வேண்டியது அவசியம் ஆகின்றது. எனவே, எமது பிரதான மான தொழில், ஆன்மாவின் இலட்சியத்தை அடைவதற்கு வேண்டிய முயற்சிகளில் ஈடுபாடு கொள்வதேயாகும்.

எத்தகைய முயற்சிகளில் நாம் ஈடுபாடு கொள்ளவேண்டும் என்பதை இனி நாம் ஆராய வேண்டும்.

ஆன்ம இலட்சியத்தை எய்துவதற்கு மனிதர்களாகிய எமக்குப் பல வழிகளையும், மார்க்கங்களையும் அருளாளர்கள் காட்டியுள் ளனர். அவற்றுள் மிக எளிதானதும், இலகுவானதும் பக்தி நெறி எனும்

மார்க்கமாகும். இம்மார்க்கத்தை எல்லோராலும் கடைப்பிடிக்க முடியும். இறைநம்பிக்கை, இறையன்பு, இறைவனைச் சிக்கெனப் பற்றிப் படித்தல், அவனிடம் பூரணமாகச் சரணடைதல்- இவைதான் தேவை. பிரார்த்தனை, வழிபாடு, விரதம் அனுட்டித்தல், சைவ ஆசாரங்களை வாழ்க்கையில் பின்பற்றுதல், இறைவனின் படைப்புக்களில் அன்பு செலுத்துதல், மனிதத் தன்மையோடு வாழ்தல் ஆகிய சைவ சாதனைகள்தான் பக்திநெறியில் முக்கியத்துவம் பெறுகின்றன. சைவசாதனைகளைத் திரிகரண சுத்தியோடு ஆற்றிக் கொண்டு வரும்போது, மனிதன் மனிதனாகின்றான்; நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளும் ஒன்றே என உணரும் தன்மை யாகிய இருவினை ஒப்பு ஏற்படுகின்றது. தொடர்ந்து மலங்கள் நீக்கம் பெறுகின்றன. மலபரிபாகம் என்பர் இதனை. அவன் அருளாலே, அவன்தாள் வணங்கி, வினைகள் நீங்கப் பெற்று தெய்வீக வாழ்வுபெற்று; இறுதி இலட்சியமான, ஆன்ம ஈடேற்றமாம், முத்திநிலையை அடைவதற்கு உதவுகின்ற ஒரே பிறவி மனிதப் பிறவியே யாகும் என்பதனைத் தெளிந்து கொண்டு, பக்தி நெறியில், ஆன்மா நயப்படுவதற்கு இன்றியமையாததாகிய கடவுள் வழிபாட்டோடு இணைந்த விரதங்கள், விழாக்களுள் ஒன்றானதும் சிறப்புப் பெற்றதுமான மாசிமகம் பற்றிச் சிறிது சிந்திப்போம்.

மாசி மாதத்தில் இரண்டு விசேட விரததினங்கள் வருகின்றன. ஒன்று முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை நோக்கி அனுட்டிக் கின்ற மகாசிவராத்திரி. மற்றையது சிவத்தின் கூறாகிய சக்தியை நோக்கி மேற்கொள்ளப்படுகின்ற மாசிமகம். மகம் என்பது இருபத்தேழு நட்சத்திரங்களுள் ஒன்று. மாதந்தோறும் வருகின்ற மக நட்சத்திரத்தோடு கூடிய நாள் இறைவழிபாட்டிற்குச் சிறந்த நாள் ஆகும். எனினும் மாசிமாதத்து மகம் பொருந்திய நந்நாள் மிகவும் புனிதம் நிறைந்த புண்ணிய நாள் ஆக நூல்கள் குறிப்பிட்டுள்ளன.

மாசிமாதத்து மக நட்சத்திரத்தில், தக்கன் என்பானின் மகள் தாட்சாயிணி பிறந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தக்கன், தனது மகளாகச், சிவபெருமானின் சக்தியாகிய உமாதேவியார் வந்து பிறக்க வேண்டும் என்று வேண்டிப் பெருந்தவம் இயற்றினான். தக்கன் பிரமனின் புத்திரரர்களில் ஒருவன் என்றும், பிரமனின் கட்டைவிரலிற் பிறந்தவன் என்றும் கூறுவர். தக்கன் செய்த தவத்தைக் கண்ட சிவபெருமான், அவன் முன்தோன்றிய பொழுது, தான் உமாதேவி யாரை மகளாகப் பெறவும், சிவபிரானை மருமகனாக அடையவும்

வரம் வேண்டினான். வேண்டுவார் வேண்டியனவற்றை ஈபவன் ஈசன். அதனால் தக்கன் கேட்ட வரத்தை, மறுக்காமல், ஈசன் வழங்கியருளினார். உமாதேவியாரும் வந்து தக்கனுக்கு மகளாகப் பிறந்தார். தெய்வக் குழந்தைக்குத் தாட்சாயிணி எனத் தக்கன் பெயரிட்டு அன்போடு வளர்த்துச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்வித்தனன். தாட்சாயிணி, மாசி மகத்தன்று திருவவதாரம் செய்தமையினால், தேவியின் பிறந்த தினமாக, அப்புனிதநாள் மகத்துவம் பெறுகிறது.

பிறப்பு, இறப்பு இல்லாத சிவசக்திக்கு, பிறப்பு இறப்புகளுக்குட்பட்ட மனிதர்களுக்குப் போன்று, பிறந்த தினம், பூப்பு நீராட்டுதல், திருமணம் போன்றவற்றை நிகழ்த்திப் பார்ப்பதில் பக்தர்களுக்கு ஒரு ஆசை உள்ளது. அவற்றை நிறைவேற்றி, தெய்வீகக் காட்சிகளைக் கண்குளிரக் கண்டு பரவசத்தில் திளைப்பதில், அடியார்கள் ஓர் அற்புத அனுபவத்தையும், ஆன்ம திருப்தியையும் பெற்றுக் கொள்ளுகிறார்கள். அத்தகைய ஆன்மதிருப்தி அவர்களின் வாழ்வுக்கு வளமும் ஒளியும் தருவதோடு, வெவ்வினைகளை அறுப்பதற்கும் அவர்களுக்கு உதவுகின்றது எனும் நம்பிக்கை, காலம் காலமாக இந்து மக்களிடையே இருந்து வருகிறது.

விரதங்களும், விழாக்களும் இணைந்தே காணப்படுகின்றன. மாசி மகம், தேவியின் விழாவாகவும், தேவி நோக்கிய விரதமாகவும் அனுட்டிக்கப்படுகிறது. அம்பாள் கோயில்களில் மாசி மகத்தன்று, விசேட பூசைகள், விழாக்கள், திரு உலாக்கள், திருஊஞ்சல் என்பன நிகழ்த்தப் படுகின்றன. தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில், பத்துநாட்கள் தேவிக்கு இலட்சார்ச்சனை நடைபெற்று, மாசி மகத்தன்று நிறைவு விழா மிக விமரிசையாக எடுக்கப்படுகின்றது. மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் மாசி மாதத்தில் கொடியேற்றத் திருவிழா நடைபெற்று, மாசி மகத்தன்று பஞ்சரத பவனி நடைபெறுகின்றது. ஐந்து தேர்கள் பவனி வரும் தெய்வீகக் காட்சி, அம்பாள் அடியவர்களுக்கு அற்புதமான கண்கொள்ளாக் காட்சியாக அமைகின்றது.

தென்னிந்தியாவில் கும்பகோணத்தில் மாசிமக உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, மகாமகம் வருகிறது. அப்புண்ணிய நன்னாளில் கும்பகோணத்தில், புனித நதியில் தீர்த்தமாடி, தங்கள் பழம் வினைகளைப் போக்கி, உய்வு

பெற்றுக் கொள்ளப் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் எதிர்பார்த் திருப்பர். வட இந்தியாவில் ''கும்பமேளா'' எனும் விழா வெகு விமரிசையாக இக்காலப்பகுதியில் கொண்டாடப்படுகிறது. கும்ப மாதம் என்பது மாசிமாதம். எனவே ''கும்பமேளா'' என்றால் மாசி மாதத்தில் நடைபெறுகின்ற விழா எனப்பொருள்படும். இது மிகக் குதூகலமாகக் கொண்டாடப்படும். கங்கையில் தீர்த்தமாடிப் பாவங்களைப் போக்குவர். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றின் மகிமைகளைப் பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. திருக்கோயில்கள், அமைந்துள்ள இட விசேடம், பிரதிட்டை செய்யப்பட்டுள்ள மூர்த்தி யின் விசேடம், ஆங்கு காணப்படுகின்ற தீர்த்த விசேடம் என்பன குறித்துப் பெருமையும் சிறப்பும் பெறுகின்றன. தீர்த்த விசேடம் பெற்றுள்ள திருத்தலங்கள் பல உள்ளன. ஆங்குள்ள நதி, ஆறு, குளம், கிணறு, கடல் ஆகியவற்றின் தீர்த்த விசேடம் இத்தலங்களுக்குத் தனிச் சிறப்பைத் தருகின்றன. இன்ன இன்ன புண்ணிய காலங்களில், அல்லது தினங்களில் இத்தீர்த்தங்களில் நீராடினால், தர்ப்பணஞ்செய் தால் இகபரசுகங்கள் கிட்டும் என்று எல்லா நூல்கள் கூறுகின்றன.

தைமாத சங்கிராந்தி, அதாவது தைமாதப் பிறப்பு, ஆடிமாதச் சங்கராந்தி, அதாவது ஆடிப்பிறப்பு (அவையிரண்டும் முறையே உத்தராயன,தட்சணாயன காலத் தொடக்கநாட்கள் ஆகும்),சூரிய சந்திர கிரகண புண்ணியகாலம்; வருஷ சங்கிராந்தி அதாவது சித்திரை மாதப்பிறப்பு, அமாவாசை, பூரணை, சநித்திரயோதசி, துவாதசி, ஏகாதசி, ஆவணி மூலம், தீபாவளி, கேதார விரதம், விநாயக சதுர்த்தி, கந்தசஷ்டி, சிவராத்திரி, கோகுலஷ்டமி, கார்த்திகை, பிதிர்துவசம், மகாநவமி, மகம் ஆகிய வருகின்ற தினங்களில் புண்ணிய தீர்த்தங் களில், குறிக்கப்பட்ட வேளைகளில் நீராடி இறைவன், இறைவியை வழிபாடு செய்யின் இம்மையில் சகல போகங்களையும், மறுமையில் சுவர்க்காதி இன்பங்களையும், இறுதியில் வினைகள் நீங்கிய நிலையில் முத்தியையும் அடையப் பெறுவர் என்பது இந்துசமய நூல்களின் துணிபு.

அந்தவகையில் மாசிமகமும் தீர்த்தத்தோடு தொடர்புள்ள புனித நாளாகக் கொள்ளப்படுகிறது. கும்பகோணம் மாசிமகத்தீர்த்தத்திற்கு விசேடம் பெற்றுள்ள திருத்தலம் ஆகச் சொல்லப்படுகிறது. கங்கை, கோதாவரி, நர்மதை, சிந்து, சரஸ்வதி, மதுரா, மாயா, அவந்தி, கோடிதீர்த்தம், பஞ்சநதம், யமுனை, பாபநாசம், சேது போன்ற தீர்த்தங்களும், தீர்த்த மகிமை பெற்றவை. இத்தீர்த்தங்களில்

மாசிமகத்தன்று மனம், வாக்கு, காயங்களினால் ஸ்மரித்தாலும் பல்வேறு பலம் களையும் பெறுவர். தீர்த்தக்கரையில் மூன்று தினங்கள் உபவாசம் இருந்து சங்கற்பஞ்செய்து, முழுகிட்டு, காயத்ரி முதலாம்மந்திரங்களை உச்சாடனம் செய்து; காஞ்சனம், பசு முதலியவற்றை தானங்களாக வழங்கி விரதம் காத்து கடவுள் வழிபாடு செய்பவர்கள் எல்லாப் பெரும் பலன்களையும் அடைவார்கள். மாசிமகத்தில் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களைத் தரிசிக்கினும், தொட்டும் மூழ்கியும் பரிசிக்கினும்; வாயில் பருகி உருசிக்கினும், அவற்றின் கீர்த்தி புகழைப் பேசினாலும், பெரும் புண்ணியங்களை அவ்வாறு செய்பவர் அடைவர். பழவினைகள் கரைந்து விடும்; பக்தி மேலோங்கும்; முத்திகைவரப் பெறும். இப்புண்ணிய தினத்தில், தீர்த்தக்கரைகளில் இறந்த உயிர்களுக்காக, நற்கதி வேண்டிப் பிண்ட தானம் தர்ப்பணம், பிதுர்கடன், அஸ்தியிடல் என்பவற்றை நிகழ்த்தினால் அவர்களின் பாவங்கள் தொலையும், அதனால் அவர்கள் நற்கதியடைவர். இவ்வாறு மாசிமகத்தில், புனித தீர்த்தமாடுதல் பயனாக இம்மை வாழ்வும், மறுமை வாழ்வும் சுகம் பெறுகின்றன.

மாசிமகத்தில் தீர்த்தம் ஆடல் எவ்விதம் சிறப்பினைப் பெற்றது என்பதற்குப் புராண வரலாறு ஒன்று கூறப்படுகிறது. ஒரு முறை, சமுத்திரராஜனான வருணபகவானுக்குப் பிரம்மஹத்தி தோசம் ஏற்பட்டு விட்டது. அப்பொழுது அவர் கட்டப்பட்டுக் கடலில் போடப்பட்டிருந்தார். வருணபகவான் தொழிற்படாமையினால் உலகில் மழையின்றி வரட்சியும் பஞ்சமும் ஏற்பட்டது. உயிர்கள் துன்புற்றன. தேவர்கள் உடனே முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானிடம் சென்று, வருணபகவானை விடுவிக்கும்படி வேண்டிப் பிரார்த்தித்தனர். சிவபிரானும் இரக்கங்கொண்டு, வருண பகவானை விடுவித்து அருளினார். வருணபகவான் விடுதலை பெற்ற பெருநாள், மாசி மகத் திருநாளன்று ஆகும். ஈடேற்றம் பெற்றுவிட்ட மகிழ்ச்சியில் வருணபகவானும், எம்பெருமானை, வரம் ஒன்று தருமாறு வேண்டி நின்றான். தனது பிரம்மஹத்திப் பிணி, தான் சமுத்திரத்தில் நீரினுள் இருந்த படியே, சிவமூர்த்தியை வணங்கினமையால், நீக்கம் பெற்றது போன்று; மாசிமகத்தினத்தன்று புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி நீராடி, இறைவனை வழிபாடு செய்யும் அடியார்களுக்கு, அவர்களின் பாவவினைகள், பிறவிப் பிணிகள், துன்பங்கள் யாவும் நீக்கப் பெற்று, அவர்கள் உய்வு பெறத் திருவருள் பாலிக்க வேண்டும் எனக் கேட்டுக்

கொண்டான். சிவபிரானும் வருணன் கேட்ட வரத்தை வழங்கியருளினார். மாசிமகத்தன்று தீர்த்தமாடல் இந்த வகையில் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றது.

இறைவனுக்கும், இறைவிக்கும் உவப்பான மாசி மகப் புண்ணிய தினத்தில், புனித நீராடி, வழிபாடு செய்து, விரதம் அனுட்டித்து, இயன்ற தான தருமங்களைச் செய்து, ஒழுக்கம் பேணி, எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுதல் செய்வோமாக.

# 22. பங்குனி உத்தரம்

சிவசக்தி தத்துவம், சைவநெறியின் அடிநாதமாக விளங்கும் மகாதத்துவம், ''சக்தி பின்னமிலான்'' ஆக, எங்கள் பிரான் விளங்குகின்றான். உலகியல் நோக்கிலும், ஆத்மீக நோக்கிலும் இத்தத்துவம் நிறைந்த கருத்துள்ளதாக மிளிர்கின்றது. சிவசக்தி சங்கமம் இருக்கின்ற படியினாலேயே இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சகலதும் இயங்குகின்றன. சிவமும் சக்தியும் இணைந்துள்ளமை எனும் தத்துவம், உலக இயக்கத்தின தத்துவம். சிவமும் சக்தியும் இணைவதான ஒரு நிகழ்வாகப் பார்வதி, பரமேஸ்வரன் திருமண வைபவம், பங்குனி உத்தரநாள் அன்று நடத்தப்படுகிறது. எனவே, பங்குனி உத்தர உற்சவத்தின் மகிமை, சிவசக்தி சங்கமம் அல்லது சிவசக்தி இணைப்பு என்னும் அரியதத்துவத்தை உலகத்தவர்க்கு உணர்த்துவதாக உள்ளது.

உலகியல் ரீதியாகப் பார்க்கும்போது, திருமணம் என்பது ஆணும் பெண்ணும் பரஸ்பர அன்பு மேலீட்டினால், ஒத்த கருத்துடையவராகி, சமத்துவத்துடன் நல்லறமாம் இல்லறத்தை மேற்கொள்வதற்குப் புகுமுகமாக அமைகின்றது. அதன் பின், கணவனும் மனைவியும் இல்லறத்தில் ஒருமுகம் கொண்டவராகவே திகழ்வர். சிந்தனை, பேச்சு, செயல் என்பன அனைத்தும் ஒரு முகமானவையாகவே அமையும். பேதங்களுக்கோ, வேற்றுமைகளுக்கோ அங்கு இடம் இருக்காது. அதனாலேயே, ''இல்லறமல்லது நல்லறமன்று'' என்றார் ஔவைப் பிராட்டியார். பங்குனி உத்தரத்தன்று, பரமேஸ்வரனுக்கும் பார்வதிக்கும் நடத்தி வைக்கப்படுகின்ற திருக்கலியாணவிழா, உலகியல் வாழ்க்கையில், திருமணத்தின் புனிதத்தன்மையையும்; அத்தகைய உலக வாழ்க்கையின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும், தொடர்ச்சிக்கும், திருமணம் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் நமக்கு எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

ஆன்மீக நிலையில், பங்குனி உத்தரத் திருக்கலியாண விழாவினை நோக்கும்போது, பசு ஆகிய ஆன்மா, பதியாகிய சிவத்துடன் இணைவதான ஓர்உயர்நிலையினை எடுத்துக்காட்டுவதாக அவ்விழா அமைகிறது. சிவசக்தி சங்கமம், ஆன்ம ஈடேற்றத்தைக் குறிப்பதாக உள்ளது.

சிவமும் சக்தியும் இணைந்துள்ளமை எனுந்தத்துவம், உலகம்

நடைபெறுவதனை உணர்த்தும் தத்துவம். சிவம் இன்றேல், சக்தி இல்லை, சக்தியின்றேல் சிவம் இல்லை. இவை இரண்டும், இணைந்து இல்லையேல் உலக இயக்கமே இல்லை என்கின்ற பெரிய உண்மையை, பங்குனி உத்தரத் திருக்கலியாண விழா காட்டுகிறது.

என்றுமே இணைபிரியாத, சிவனையும் சக்தியையும், ஆடை அணிகளால் அழுகுசெய்து, மணவறையில் அமர்த்தி, வாத்தியங்கள் முழங்க வேதபாராயணம் ஒலிக்க, ஓமம் வளர்த்து, கோத்திரம்கூறி, கூறை உடுத்தி, மாலை அணிவித்து, பல்லோர் சாட்சியாகத் தாலி கட்டி, பல்வேறு உபசாரங்களும் வழங்கி, வாழ்த்துக்கள் கூறி, அவர்களை திருமணக் கோலத்தில் கண்குளிரக் கண்டுகளித்து, அருள்பெற்று, அடியவர்கள் அகமகிழ்கின்றனர். திருஊஞ்சலில் இறைவனையும் இறைவியையும் அமர்த்தி, பாட்டுப்பாடி, ஆட்டுகின்றனர். அலங்கரித்த பூம்பல்லக்கில் இருவரையும் ஊர்வலம் கொண்டு வருகின்றனர். ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடிப் பரவுகின்றனர். வேண்டுதல், வேண்டாமை இலாத அக்கடவுளர்களுக்கு அன்போடு உபசாரங்கள் பல செய்து உவகை கொள்கின்றனர். என்றும் துயிலாத அம்மையப்பனை, துயில்கொள்ள வேண்டி, பள்ளியறையில் சேர்க்கின்றனர். அவையனைத்தையும் மனிதர்களுக்குச் செய்யுமாப் போலப் பாவனை செய்து செய்கின்றனர். இச்செயல்கள் யாவும் தம் குழந்தைகளின் அறியாப் பருவ விளையாட்டுக்கள் என்பது அம்மைக்கும் அப்பனுக்கும் தெரியும். ஆயினும், தம் குழந்தைகளின் அன்பிற்கும், ஆசைக்கும்; பாசத்திற்கும் அடங்கியவர்களாகி, அவர்களின் குழந்தைத்தனமான செய்கைகளுக்கு இசைந்து கொடுத்து, அவர்களின் தாளத்திற்கெல்லாம் ஆடி, அனைத்திலும் மனங்கோணாது பங்குபற்றி அடியார்களை மகிழ்விக்கின்றனர். பகுத்தறிவாளர்களுக்கு இச்செய்கைகளெல்லாம், நகைப்பிற்கிடமானவையாக இருக்கலாம். ஆனால் ஆழ்ந்து சிந்திப்பின், அர்த்தங்கள் பல புலப்படும். இவ்வாறு மாந்தர்கள் செய்வதால், வாழ்க்கையில் பூரிப்பும், நம்பிக்கையும் பெறுகிறார்கள்; உலக வாழ்க்கைக்குத் தேவையான பாடங்களை இத்தகைய செயல்கள், அனுபவங்கள் மூலம் கற்றுக் கொள்ளுகிறார்கள். அதனாலேயே தேவதேவியர், குழந்தைகளின் இவ்விளையாட்டுக்களில் தாமும் பங்குபற்றி, உபசாரங்களையும் ஏற்று, திருவருள் பாலிக்கின்றனர்.

பூமி மீனராசியில் சஞ்சரிக்கும் காலம் பங்குனி மாதம். சந்திரன் கன்னிராசியில் உத்தர நட்சத்திரத்துடன் சேர்ந்து, பங்குனி மாதத்தில்

வரும் நன்னாளே பங்குனி உத்தரத்திருநாள். இத்தினத்தில், பார்வதி சமேதராகப் பரமேஸ்வரனைத் திருமணக் கோலத்தில் தியானித்து விரதம் அனுட்டிக்கப்படும் புண்ணிய நாள். இவ்விரதம் திருமண விரதம் எனவும், கலியாண சுந்தரவிரதம் எனவும் போற்றப்படுகிறது. இவ்விரதத்தை மேற்கொள்பவர்கள் பகல் முழுவதும் உணவு உட்கொள்ளாமல் இருந்து இரவிலே பரமான்னமும் பழமும் உட்கொள்வர்.

நம்நாட்டில், சிவஸ்தலங்களில் திருக்கலியாணப் பெருவிழா, பங்குனி உத்தரத்தன்று நடத்தப்படுகிறது. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களில் இவ்வுற்சவம் மிகச் சிறப்பாக ஆண்டுதோறும் நடைபெறுகின்றது. பங்குனி உத்தரத்தை இறுதியாகக் கொண்டு சிவாலயங்களில், கொடியேற்றத்துடன் மகோற்சவம் நடை பெறுகின்ற வழக்கமும் உண்டு. கொழும்பு, ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயம், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம், திருகோணமலை பத்திரகாளியம்மை ஆலயம் ஆகியவற்றில் இக்காலத்தில் மகோற்சவம் நடைபெறுகிறது. மதுரையில், ஸ்ரீ மீனாட்சி -சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம், பங்குனி உத்தரத்தில் நிகழ்த்தப் படுகின்றது.

பங்குனிமாதம் வேனிற்காலம் வெப்பமும் வரட்சியும் மிகுந்திருக்கும். நோய்களும் பரவும் காலம். இவற்றையெல்லாம் நிவிர்த்தி செய்து, மக்களைத் துன்பங்களிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் அம்பாள் ஆலயங்களில் பங்குனித் திங்கட்கிழமைகளில் குளிர்த்தி எனும் கிராமியப் பண்பாட்டுடனான பக்திவழிபாட்டு முறை அனுட்டிக்கப்படுகிறது. அபிடேகம், பொங்கல், படையல், பழமடை, நீர்ச்சோறு, தயிர்சாதம் என்பன அன்னைக்கு நிவேதனம் செய்யப் படுகின்றன. காரம், உறைப்பு, சூடு பொருந்திய தின்பண்டங்கள் சேர்த்துக் கொள்வதில்லை. மருத்துவ வசதிகளற்ற பழைய காலங்களில், தெய்வநம்பிக்கையே மக்களை நோய் பிணி துன்பங்களிலிருந்து பாதுகாத்து வந்துள்ளது.

ஆகமவிதிப்படி பங்குனி உத்தரத் திருக்கலியாண விழா, சிவாலயங்களில் நிகழ, பக்திமுறைப்படி அம்பாள் ஆலயங்களில் பங்குனித்திங்களில் குளிர்த்தி வழிபாடு நடைபெறுகின்றது. அறிவுப் பெருக்கமும், அன்புப் பிரவாகமும் ஒன்றிக்கும் அருமையான கலாசாரத்தை இங்கு காண்கின்றோம்.

''உற்சவம் என்பது உத்தமயாகம் எனவும், மேலான பஞ்ச கிருத்தியம் எனவும், சிருஷ்டி மார்க்கத்தைக் குறிப்பது எனவும், போக மோட்சங்களைக் கொடுப்பது எனவும் பொருள்படும்'' என்று பெரியோர் கூறியுள்ளனர். ''சர்வதோஷநிவிர்த்தியின் பொருட்டும், சர்வ லோக சுகத்தின் பொருட்டும், எல்லோரையும் இரட்சித்தற்பொருட்டும், சர்வதேவப் பிரியமாகவும், சர்வப் பிராணிகளின் சுகத்தின் பொருட்டும், அரசர்களுக்கு விஜயசித்தியின் பொருட்டும் உற்சவத்தைச் செய்க.'' என்பது சிவவாக்கிய திவ்விய ஆகமங்களின் கூற்று.

பங்குனி உத்தரத்தன்று இறைவன் சந்நிதியில் எத்தனையோ திருமணங்கள் நிகழ்கின்றன. இத்தினத்தில் வேறு நாள், கோள், முகூர்த்தங்கள் பார்ப்பது கிடையாது. நம்பிக்கை மக்களை வாழ வைக்கின்றது. அது எப்படி மூட நம்பிக்கையாகும். நம்பிக்கையில் தளர்வு ஏற்படும் போதுதான் மக்கள் வாழ்க்கையிலும் தளர்ச்சி ஏற்படுவதைக் காண்கின்றோம். இதுவே உண்மை நிலை. இளைஞர்களும் கன்னிகளும் இத்தினத்தில் விரதம் அநுட்டித்து வழிபாடு செய்தால் அவர்களுக்குத் திருமணம் விரைவில் நிறைவேறுகின்றது. வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈவான் இறைவன். தேவர்களும், தெய்வநிலையில் உள்ளவர்களும் தேவதேவியரை வழிபட்டு இத்தினத்தில் விரதம் அநுட்டித்து வேண்டும் வரங்களைப் பெற்றுள்ளனர். திருமகள் மகாவிஷ்ணுவின் திருமார்பில் வீற்றிருக்கும் பேற்றினைப் பெற்றாள். இந்திரன் இந்திராணியை அடைந்ததும், பிரமன் சரஸ்வதியை நாவில் பெற்றதும் இவ்விரதத்தின் மகிமையால் என்று புராணங்கள் கூறுகின்றன.

சிவநேசர் என்பவர் திருமயிலாப்பூரில் வாழ்ந்து வந்த சிவ பக்தர். அவரது புதல்வி பூம்பாவை. திருஞானசம்பந்தருக்கு அவள் உரியவள் என்று எண்ணியிருந்த காலத்தில், பூம்பாவை பூக்கொய்ய நந்தவனம் சென்றபொழுது அரவம் தீண்டி இறந்துவிட்டாள். அவளின் உடலைத் தகனஞ்செய்து பெற்ற சாம்பரையும் எலும்பையும் பொற்குடத்திலிட்டு வைத்திருந்தார் சிவநேசர். திருஞானசம்பந்தரும் அவர் எதிர்பார்த்தபடி அவ்வூருக்கு வருகை தந்தார். அன்றைய நாள் மயிலாப்பூர் கபாலீச்சுரருக்கு ஒன்பதாம் திருவிழா. அது பங்குனி உத்தரத்திருநாள். பொற்குடம் அங்கு வரவழைக்கப்பட்டது.

**''மலிவிழா வீதிமடநல்லார் மாமயிலைக்**
**கலிவிழாக் கண்டான் கபாலீச்சரமமர்ந்தான்**
**பலிவிழாப் பாடல்செய் பங்குனியுத்தரநாள்**
**ஒலிவிழாக் காணாதே போதியோபூம்பாவாய்''**

என்று தொடங்கும் திருப்பதிகத்தைத் திருஞானசம்பந்தர் பாடினார். பூம்பாவையும் விடம் நீங்கப் பெற்ற நிலையில் உயிர் பெற்றெழுந்தாள். சம்பந்தர் காலத்திலும் பங்குனி உத்தரவிழா சிறப்புற்று விளங்கியமை தெளிவாகிறது. ஒருமுறை ஈசனை நோக்கி, ''போகமும் யோகமும் எதிரும் புதிருமாக இல்லாமல் ஒன்றிய நிலை யில் இருப்பது எப்படி? என்று உமையவள் கேட்டாள்'' அதற்கு ஈசன்,

''உலகங்கள் யாவும் படைத்தவனாகிய என்னைப் பின்பற்றி நான் காட்டிய பாதையில் நடக்கின்றன. அஞ்ஞானத்தினால் பீடிக்கப் பட்டுள்ள மக்களுக்கு யோகநிலையையும், போகநிலையையும் கற்பிக்க நானே அவற்றை முன்மாதிரியாகச் செய்து காட்ட வேண்டியுள்ளது. இவர்கள் போகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள நான் முன்மாதிரியாக உன்னை மணந்து போகியாகக் காட்சியளிக் கிறேன். யோகசித்தி பெற்று மெய்ஞ்ஞான நிட்டை கூடி முத்தியை மக்கள் பெற்றுக் கொள்ள யோகியாகவும் நடந்து காட்டுகிறேன்'' என்றார் ஈசன். அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பது தெளிவா கின்றது. பார்வதி பரமேஸ்வரனாக பங்குனி உத்தரத்தினத்தன்று போக நாடகம் ஆடுவது மாந்தர்க்குப் போக ஞானத்தை - வாழ்வியல் நெறியை, உணர்த்துவதற்ககாகத் தான்போலும். அதேவேளை யோக நாடகமாகவும் ஆத்மீக அடிப்படையில் கொள்ளலாம். போகமும், யோகமும் எதிரும் புதிரும் அல்ல. உலகியலும் ஆத்மீகமும் ஒன்றுக் கொன்று முரணானவையல்ல. இரண்டும் இணைந்தவை; இணையக் கூடியவை. அறியாமையினால் மக்கள் வேறுவிதமாக இவற்றை நோக்குகிறார்கள். ஈசன் இரண்டிலும் இருக்கின்றான், இரண்டாகவும் இருக்கின்றான் என்பது இதன் தாற்பரியம்.

மனிதவாழ்க்கை உற்பத்தி முதற்கொண்டு இணைப்பிலேயே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. உலகினை ஒன்றாகக் காண விழைவது சிவநெறி. ''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'' என்பது சிவநெறியின் சீரிய குறிக்கோள். உலகம் யாவையும் தாமுள வாக்கி, வேதப் பொருளாகி, ஞானத்தின் திருவுருவாய்ப் பொலிந்து, கருணை வள்ளல்களாக இறைவனும் இறைவியும் நீக்கமற இணைந்து நிற்கும் சிவசக்தி தத்துவத்தின் காட்சிவிளக்கமாகப் பங்குனி உத்தரத்திருக்கல்யாணப் பெருவிழா துலங்குகிறது. ஒன்றாகி விட்ட உலகில் இன்பமே சூழும், எல்லோரும் வாழ்வர். சகல மக்களும், சீவராசிகளும் உய்வதற்குத் திருவருள் பாலிக்கும் அம்மையப்பனை போற்றி வழிபடுவோமாக.

# 23. சித்திரைப் புத்தாண்டு

சூரியன் ஒளிப்பிழம்பாகக் காட்சியளிக்கிறது. சூரியன், எல்லாக் கோள்களுக்கும் தலைமை தாங்கி அவற்றை நெறிப்படுத்தியும், வழிப்படுத்தியும், ஒழுங்காக இயக்கியும் வருவதைக் காண்கின்றோம். சீரான, செம்மையான தலைமைத்துவம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கும்; மோதல்கள், முரண்பாடுகள் இன்றி உறுப்பினர் களிடையே ஒழுங்கு எப்படிப் பேணப்பட்டு வருகின்றது என்பதற்கும் எடுத்துக்காட்டாகச் சூரிய குடும்பம் விளங்குகிறது. சூரியன் தரும் ஒளியும் சக்தியுமே உலகில் உள்ள சீவராசிகள் அனைத்திற்கும் ஆதாரத்தையும், உயிர்ப்பையும், வாழ்வையும் வழங்குகின்றன. பூமியில் மண், வெப்பம், காற்று, மழை, காலங்கள், பயிர்கள், விலங்குகள் முதலிய எல்லாவற்றிற்கும் சூரியன் ஆதாரமாக உள்ளது. அதனால் சூரியனைக் கண்கண்ட தெய்வமாகக் கொண்டு வழிபாடு செய்யும் மரபு இந்து மக்களிடையே தொன்றுதொட்டு இருந்து வருகிறது.

இறைவனை ஒளிவடிவத்தில் வழிபடுவது சூரியவழிபாடு. மேடம் முதல் மீனம் வரை பன்னிரண்டு இராசிகள் உள்ளன. ஒவ்வொரு இராசியும் முறையே சித்திரை முதல் பங்குனி வரை ஒவ்வொரு மாதத்தைக் குறிக்கின்றது. மேடம் முதலாவது இராசி என்று கொண்டு அது குறிக்கும் சித்திரை முதலாவது மாதமாகக் கொள்ளப்படுகிறது. முதலாவது இராசியான மேடத்தில் சூரியன் புகும் தொடக்க நாள், சித்திரைமுதல் நாள் ஆகும். அந்தச் சித்திரை முதல் நாள் புத்தாண்டு பிறக்கும் நாள். இந்துக்கள் சித்திரை முதலாந் திகதி யன்று புதுவருடப் பிறப்பினைப் பண்டிகையாகக் கொண்டாடுவதை மரபாகக் கொண்டுள்ளனர்.

சூரியன் நிற்கும் நிலையைக் கொண்டு பருவகால மாற்றங்கள் ஏற்படுகின்றன. இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என ஆறு பருவகாலங்கள் ஒருவருடத்தில் ஏற்படுகின்றன. வசந்த ருது என்னும் இளவேனிற்காலம் மக்களுக்கும், ஏனைய உயிரினங்களுக்கும் இதமான, சுகமான காலம். மிதமான காலநிலை, பதமான இயற்கைச் சூழல், பூத்துக் குலுங்கும் மலர்களின் மலர்ச்சி, அறுவடைக்குப் பின்னர் தானிய விருத்தி, போன்றன இளவேனில் காலத்து இலட்சணங்கள். இந்த, மகிழ்ச்சியும் பூரிப்பும் நிறைந்த பொன்எழில் கொண்ட வசந்த ருதுவின் தொடக்கத்தில் புதுவருடமும்

மலர்கின்றது. புதுவருடப் பிறப்பைத் தொடர்ந்து வருகின்ற இள வேனில் பருவத்தை ஆடல்,பாடல், விளையாட்டுக்கள், மங்கள கரமான காரியங்கள், விருந்துண்ணல் என்பவற்றில் மக்கள் ஈடுபாடு கொண்டு இன்பமாகக் கழிப்பர். கடின உழைப்பு இல்லாததால் ஓய்வும் அவர்களுக்கு உண்டு. பழைய வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன; புதிய வேலைகள் தொடங்கப்படவில்லை இந்த இடைக்காலம் தான் இளவேனில் காலம். உழைப்பின் பயனையும் அனுபவித்து உல்லாச மாகவும் இருக்கும் இந்த வசந்த காலம்.

இத்தகைய இன்பப் பொழுதுபோக்குக்கள், கேளிக்கைகளாக மாறிவிடக்கூடாது; மக்களின் உள்ளத்தினதும் உடலினதும் ஆரோக்கியம் கெட்டு விடக்கூடாது என்பதையும் நம் முன்னோர் அறிந்திருந்தனர். அதனால் வருடப்பிறப்பு பண்டிகை அதைத் தொடரும் பல்வேறு நிகழச்சிகள் யாவும் சமயத்தோடு தொடர்பு படுத்தி, இறைசிந்தனையுடன் ஆற்றவேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டது. உலகியல் இன்பங்களை ஆன்மிகத்துடன் இணைத்து, ஆன்மிக ஒப்புதல் உடன் அனுபவிக்கும்போது, அதனால் கெடுதல் இல்லை என்பதை இந்துக்கள் புதுவருடத்தைக் கொண்டாடி மகிழும் நெறிமுறைகளைப் பார்க்கும் போது புரிந்து கொள்ள முடிகின்றது. புதுவருடப் பண்டிகை சமூக விழாவாக மாத்திரம் அமையாது சமய விழாவாகவும் விளங்குவதில் அதன் சிறப்பு தங்கியுள்ளது.

புதுவருடம் பிறப்பதற்கு முன்னும் பின்னும் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியைப் புண்ணிய காலம் என்பர். இப்புண்ணிய காலத்தில் இறைவனை நினைந்து சங்கற்பித்து மருத்து நீர் தலையில் தேய்த்து, நீராடி, புத்தாடை தரித்து திருக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து; குரு, பெற்றோர், பெரியோர் ஆகியோரை வணங்கி அவர்களின் ஆசிபெற்று, இயன்ற தானதருமங்களைச் செய்தல் வேண்டும். வருடம் பிறக்கும் நேரம் சோதிடர்கள் கணித்துக் கூறுவர். குறித்த அந்த வேளையில் குத்துவிளக்கேற்றி நிறைகுடம் வைத்து புத்தாண்டை வரவேற்பது மரபு. அதிகாலையில், நித்திய நைமித்திய கர்மானுஷ் டானங்களை முடித்துத் தத்தம் இல்லங்களில் குடும்பத்தவர் சகிதம் சூரியனுக்குப் பொங்கல் பூசைகள் செய்வது இந்துக்களின் வழக்கம். நல்ல சுபநேரத்தில் கைவிசேஷம் நடைபெறும். கைவிசேஷம் என்பது வெற்றிலையில் நெல் அல்லது பச்சையரிசி இட்டு அதன் மீது காசுபணம் வைத்துக் குடும்பத் தலைவன் தமது குடும்பத்தவருக்கு

வழங்குதல் என்பதைக் குறிக்கும். கைவிசேஷம் பெரியவர்களிடம் பெற்ற பின்னரே கொடுக்கல் வாங்கல் ஏனையோரிடம் செய்யப்படும். விருந்துண்ணல்; குரு, ராஜ, பிரபு, உறவினர், நண்பர் தரிசனம் என்பன வியாழன், செவ்வாய் தவிர்ந்த நாட்களில் திதி, நட்சத்திரம்,யோகம் என்பன சுபமாக உள்ள வேளையில் நிகழ்த்தப்படும். எந்த வேலையையும் நல்ல நாள், முகூர்த்தம் பார்த்து சுபவேளையிலேயே புதுவருடத்தில் தெய்வத்தை நினைந்து தொடங்கும் பாரம்பரியம் கடைப்பிடிக்கப்படுகிறது. இவையனைத் தும் வெறும் சம்பிரதாயங்கள், அர்த்தமற்ற சடங்குகள் என்று கருதி விடக்கூடாது. இவற்றிற்குப் பின்னால் பல அர்த்தங்கள், உண்மைகள் உண்டு. இவை வீணானவை என்றால் எப்பவோ மறைந்திருக்கும். இன்று வரை நிலைத்திருக்கின்றன. இவற்றால் மனிதர்கள் புத்துணர் வும், மகிழ்ச்சியும், புதுத் தென்பும் பெறுகிறார்கள். வாழ்க்கையில் பிடிப்பும், நம்பிக்கையும் திருப்தியும் அடைகின்றார்கள். இவையே போதுமல்லவா. புதுவருடத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களும், நல்லெண்ணங்களும் வாழ்வில் அமைதியையும், சாந்தியையும் தரும் என்பது திண்ணம். எல்லோரும் வாழ்வு பெற இப்புத்தாண்டில் இறைவனைப் பிரார்த்திப் போமாக.

# 24. வைகாசி விசாகம்

சைவமக்கள், தொன்றுதொட்டு, வாழுகின்ற இயற்கைச் சூழலோடு இணங்கியும் இசைந்தும் வாழ்ந்து வருபவர்கள். அவர்களின் வாழ்வியல் தேவைகளை முட்டின்றிப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அத்தகைய வாழ்க்கைமுறை பெரிதும் உதவி வருகின்றது. இந்த வாழ்க்கைமுறை, சூழலுக்கு இயைபாகவும்; சூழலில் ஏற்படுகின்ற பருவமாற்றங்கள், காலமாற்றங்கள், மற்றும் இயற்கை மாற்றங்கள் ஆகியவற்றிற் கேற்ப, இசைந்து கொடுக்கும் தன்மையையும் கொண்டு, விளங்கி வருகின்றது. மக்கள் இந்த வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதற்கும், அதன்படி நல்வாழ்க்கை வாழ்வதற்கும், அவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து, பின்னர் தெய்வீகநிலையை அடைவதற்கும், சைவசமயம் வழிகாட்டு கின்றது. அதனால் சைவசமயம், சமயம் ஆக மாத்திரம் நின்று விடாது அல்லது வெறும் தத்துவமாகவோ, கோட்பாடாகவோ அமைந்து விடாது; சைவ நெறியாகவும் விளங்குகின்றது. சைவ நெறி, மக்கள் வாழ்க்கையோடு தொடர்புபடுவதாலும், மக்கள் வாழக்கைக்கு உறுதுணையாக விளங்குவதாலும் சைவநெறி, வாழும் நெறியாக என்றும் காணப்படுகிறது.

சமய தத்துவங்களுக்குப் பயன் அறிவு அல்லது ஞானம். அறிவு, அறிவுநிலையுடன்தான் பணியை முடித்துக் கொண்டால், அவ்அறிவு பயனற்றதாகி விடுகிறது. பெற்ற அறிவு பயன்தருவதாக இருக்க வேண்டுமெனில், அந்த அறிவு செயலாக வேண்டும். அறிவு செயலாதல் என்பது, அந்த அறிவை, மனித வாழ்க்கையில் கடைப் பிடித்து ஒழுக வேண்டும். எனவே, அறிவுக்குப் பயன் ஒழுக்கம் என்று பெரியோர் கூறுகின்றனர்.

அறிவும் ஒழுக்கமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. இரண்டும் இருக்கும்போது தான், மதிப்பு பேணப் படுகிறது. ஒன்று இல்லாவிடினும் மதிப்புப் போய்விடுகிறது. எனவே சமய தத்துவமும், சமய ஒழுக்கமும் இணையவேண்டியது அவசியம். அவ்வாறு இணைவது எப்போதெனில், சமயம், மக்கள் வாழ்க்கை யோடு தொடர்புற்று விளங்கும் நிலையிலேயேயாகும். சைவசமயம் மிகத் தொன்மைவாய்ந்த சமயம். அது இன்னும் வாழுகின்றது என்றால் அதற்குரிய காரணம், சைவசமயம், அறிவையும் ஒழுக்கத்

தையும் வற்புறுத்துவதேயாகும்.

''கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தக''.

என்கிறது தமிழ் வேதம். எனவே, மனித வாழ்க்கையோடு தொடர்புபட்டு; அறிவு வேறு, ஒழுக்கம் வேறு என்று கொள்ளாது; இரண்டையும் இணைத்துக் கொண்டு, சைவம், ஒரு வாழ்க்கை நெறியாக விளங்குவதாலேயே, அது வாழும் நெறியாக மேன்மை பெற்று மிளிர்கின்றது.

சமய தத்துவம், சமய அறிவு, சமயக் கோட்பாடுகள் என்பன செயற்பாடுகள் ஆக வேண்டும் எனக் கூறினோம். அதற்கு முதற்படி அவற்றைக் கற்றல், அடுத்த படி கற்றாங்கு ஒழுகுதல். இவ்விரண்டு செயற்பாடுகளும் மனிதர்கள் சம்பந்தப்பட்டவை. இன்பமானவற்றை, இனியவற்றை, சுவையானவற்றை, விரும்புதல், தேடுதல், அடைதல் என்பன மனித இயல்பு. எனவே, மனிதர்கள் கற்க வேண்டிய அறிவுகளை, இன்பந்தருவனவாக ஆக்கிச் சுவைபட வழங்கினா லேயே அவற்றைக் கற்பார்கள். இவ்வாறு மனித இயல்போடு ஒட்டி யதாக சுவைபட வழங்குவதற்கும்; அவற்றில் ஆர்வமும், உற்சாகமும் ஏற்படச் செய்வதற்கும் உரிய வழிமுறைகள், உத்திகள், நுட்பங்கள் எவை என்பது பற்றி நம் முன்னோர்கள் சிந்தித்தனர். அறிவியற் கலைகளை, அழகியல் கலைகளாக்கினால் அங்கு சுவையும், இன்பமும் மிளிரும் என்பதை உணர்ந்தனர். எனவே, பண்டிகைகள், விழாக்கள், உற்சவங்கள், திருஉலாக்கள், சடங்குகள் என மாதங்கள் தோறும், ஆண்டுமுழுவதும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்தனர். அவையாவும் தெய்வங்களை முதலாகக் கொண்டே நிகழ்த்தப் படுகின்றன. மனிதர்கள் தாம் எவ்வெவற்றில் விருப்பங் கொள்கின் றார்களோ, எத்தகைய கொண்டாட்டங்களில் இன்பமும் திருப்தியும் எய்துகின்றார்களோடு அவற்றிலெல்லாம் தெய்வங்களும் விருப்பங் கொள்கின்றன, அவை மனிதர்களால் நிறைவேற்றப்படும்போது, தெய்வங்கள் மிக்க மகிழ்ந்து, மனிதர்கள் வேண்டுவனவற்றை யெல்லாம் வழங்குகின்றன என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படுகின்றன. இந்த நம்பிக்கைதான் மருத்துவ வசதிகள் இல்லாத காலங்களிலும்; இயற்கை இடையூறுகள், அனர்த்தங்கள் மனித ஆற்றலினால் கட்டுப்படுத்த முடியாமலிருந்த காலங்களிலும், மனித குலம் அழிந்து போகாமல், காப்பாற்றி வந்தது. இன்றும் நம்பிக்கை

யுள்ளவர்கள் பாதுகாக்கப் படுகின்றனர். இந்த வகையில், சைவ மக்களிடையே, சைவசமயம், சைவநெறியாக, அன்பு நெறியாக, பக்தி நெறியாக மலர்ந்துள்ளமையை அறியக் கூடியதாக உள்ளது. மனிதர்களை வாழ வைக்கின்ற தெய்வ நம்பிக்கைக்கு அடிப்படையாக உள்ளவை, தெய்வத்தின் மேல் அவர்கள் கொண்டுள்ள அன்பும், பக்தியுமே.

வைகாசி மாதம், வசந்த காலத்தில் வருகின்றது. கடுங்குளிரோ, கூடிய வெப்பமோ இல்லாத, மக்கள் விரும்பும் அளவான வெப்பதட்ப நிலையைக் கொண்டிருப்பது வசந்த காலம். வசந்தத்தில் தென்றல் வீசும் என்பர். நமக்குச் சோளகக் காற்றாகலாம். மரங்கள், செடிகளில் வைகாசி மாதத்தில், காய்கள், கனிகள் நிறைந்திருக்கும். எனவே, மக்கள் வாழ்க்கைக்கு இதமான காலம். சமயவிழாக்கள், கோயில் உற்சவங்கள், மற்றும் சமூக விழாக்கள் என்பன நடைபெறுவதற்கு ஏற்ற மாதம், வைகாசி. மக்கள் வாழ்க்கை மிகச் சுறுசுறுப்பாகவும்; சமய, சமூக வைபவங்களுடன் தொடர்பு பட்டும் இக்காலத்தில் இருப்பது ஒரு விசேட அம்சமாகும்.

வைகாசி மாதத்து விசாக நட்சத்திரத்தில் முருகப் பெருமான், இவ்வுலகிலுள்ளோர் யாவரினதும் உய்விற்காக உதித்தனன் என்பது புராணம் கூறும் செய்தி.

**"அருவமும் உருவுமாகி அநாதியாய்ப்**
**பலவா யொன்றாய்ப்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்**
**கருணைகூர் முகங்களாறும்**
**கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங்**
**குதித்தனன் உலகமுய்ய.**

இவ்வாறு முருகனின் தோற்றம் பற்றிக் கந்தபுராணம் கூறுகின்றது. சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்களின் கொடுங் கோன்மையாலும், நிட்டூரங்களினாலும் எண்ணில்லாத காலம் துன்பங்களுக்குள்ளாகி, அல்லற்பட்ட தேவர்கள் அவற்றைப் பொறுக்க முடியாத நிலையில் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானிடம் சென்று, தம்மை அசுரர்கள் இழைக்கும் துன்பங்களிலிருந்து விடுவித்தருளுமாறு வேண்டிநின்றனர். சிவபெருமானும் தேவர்களின்

விண்ணப்பத்தை ஏற்று, தனது நெற்றிக் கண்ணிலிருந்து, ஆறுதீப்பொறிகளை வெளிப்படுத்தினார். அந்த ஆறு பொறிகளும், விரைந்து சென்று சரவணப் பொய்கையுள் வீழ்ந்து, குளிர்ந்து, ஆறு அழகிய திருக்குழந்தைகளாகத் தோன்றின. அழகு என்பதற்கு மறுபெயர் முருகு. அழகு உள்ளவன் அழகன். அவ்வாறு, முருகு உள்ளவன் முருகன். அழகன் முருகன் தோன்றிய திருநாள் வைகாசி விசாகம். அதனால், முருகனை, விசாகன் என்றும் விசாகப் பெருமாள் என்றும் அழைக்கின்றனர்.

வைகாசி விசாகத்தினத்தை, முருகனின் பிறந்த தினமாக, முருகனின் அடியார்கள் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்வது வழக்கமாகி விட்டது.

பிறப்பும் இறப்பும் அற்ற இறைவனுக்கு, வருடத்தில் ஒருநாளைப் பிறந்த தினமாகக் கொண்டு, அந்நாளில் அவனை நீராட்டி, அழகுமிளிர அலங்காரங்கள் செய்து; ஆராதித்து; பட்சணங்கள், பழங்கள் படைத்து நிவேதித்து; தீப ஆராதனைகள் செய்து, மங்கள வாத்தியங்கள் ஒலிக்க; பூம்பல்லக்கில் அமர்த்தி; பக்தர்கள் புடைசூழ, திருஉலா நடத்தி, அவனின் அளப்பிலா அழகு கண்டு, உவப்பிலா ஆனந்தத்தில் அடியார்கள் திளைத்து நிற்கின்றனர். உலகியல் நிலையில், பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் பிறந்த நாட்களை, சுற்றம், உறவினர், நண்பர்கள் ஆகியோருடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். இதற்குக் காரணம் தம் குழந்தைகள், பிள்ளைகள் மீது பெற்றோரும், சுற்றத்தினரும் கொண்டுள்ள பாசமும் பற்றும்தான். இங்குதாம் வேறு, பிள்ளைகள் வேறு என்று எண்ணாத நிலையினைக் காண்கின்றோம். அவர்களிடையே உள்ள நெருங்கிய உறவுமுறைதான், ஒருமை யுணர்வினை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறே, அடியவர்களும், இறைவனை வேறாக அந்நியப் படுத்திப் பார்ப்பது கிடையாது. தமக்கும் இறைவனுக்குமிடையில் நெருக்கமான உறவுண்டு; வேறுபாடு இல்லை என்று கருதும்போது, அடியவர்கள், தாமும் இறைவனும் பிரிக்கமுடியாதபடி ஒன்றித்து விட்டவர்கள் என்ற ஒருமையுணர்வினை உடையவர்களாகத் திகழ்கின்றனர். எனவே, தம்முடைய மகிழ்ச்சிக்கும் திருப்திக்குமாகவே, பக்தர்கள் வைகாசி விசாகத்தினத்தன்று முருகனின் பிறந்ததினத்தைக் கொண்டாடுகின்றனர். பக்தர்களின் அன்புவலைக்குள் சிக்குண்டு விட்ட முருகப் பெருமானும்,

அவர்களின் நன்மையின் பொருட்டு, அவற்றை யெல்லாம் ஏற்றுக் கொண்டு அருள் புரிகின்றான். இலங்கையில் உள்ள முருகன் ஆலயங்கள் அனைத்திலும் வைகாசி விசாகத் திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நல்லூர், செல்வச் சந்நிதி, மாவிட்டபுரம், கதிர்காமம், மண்டூர், சித்தாண்டி, கொழும்பு ஜிந்துப்பிட்டி, கொம்பனித் தெரு ஆகிய இடங்களில் உள்ள முருகன் ஆலயங்கள் இந்த வகையில் குறிப்பிடத் தக்கவை.

முருகன் தோன்றும்போது அழகும் உடன் தோன்றியது. நாம் அழகாக இருக்கிறது என்று கூறும்போது, என்ன அளவுகோலைக் கொண்டு அழகினைத் தீர்மானிக்கிறோம். எது எது, என்ன ஒழுங்கு முறையில், எப்படி எப்படி எங்கெங்கே இருக்க வேண்டுமென்று கருதுகிறோமோ, அந்தவகையில் அவையெல்லாம சீராகக் காணப் பட்டால், அங்கு அழகினைக் காண்கின்றோம். எனவே அழகு என்றால் ஒழுங்கு, செம்மை, சீர்மை, நீதி, நன்மை என்ற கருத்தைத் தருகின்றது. எனவே, முருகனை வணங்குபவர்கள் அழகினை ஆராதிக்கின்றார்கள். அழகினை ஆராதிப்பவர்கள் ஒழுங்கினைப் பேணுபவர்கள்; செம்மையையும் சீர்மையையும் நேசிப்பவர்கள்; நீதியை உபாசிப்பவர்கள்; நன்மையைப் புரிபவர்கள். அமைதியை அனுசரிப்பவர்கள் ஆக விளங்குகின்றனர். முருகனை வணங்கு பவர்கள், வாழ்வில், நன்மையே சிந்தித்து, நன்மையே பேசி, நன்மை யையே புரிந்து, நீதியின் அடிப்படையில் வாழ வேண்டும். அவ்வாறு வாழாதவர்கள் முருகனை நிந்தனை செய்த குற்றத்திற்கு ஆளாவர்.

முருகனின் தோற்றத்தின் நோக்கமே, தீமைகளை அழித்தலும், நன்மைகளைக் காத்துப் பேணலும். ஆணவம், கர்வம், செருக்கு, மமதை, பொறாமை, செய்ந்நன்றி மறத்தல், அகங்காரம், மமகாரம் போன்ற தீயனவற்றின் திரட்சியாகச் சூரன் முதலிய அசுரர்கள் இருந்தனர். முருகன் சூரசம்ஹாரம் செய்தான் என்றால் தீமைகளை அழித்தான் என்பது பொருள். முருகனைப் புறத்தில் வணங்கிக் கொண்டு சூரனை உள்ளத்திலிருத்திப் பூசிப்பது மாபாதகச் செயலாகும். எனவே, வைகாசி விசாகத்தினத்தன்று, முருகனின் பிறந்த தினத்தை அனுசரிப் பவர்கள் யாவரும், முருகனின் தோற்றத்தின் நோக்கத்தையும், காரணத்தையும் பற்றிச் சிந்திப் பார்களேயானால், மக்களின் அமைதி வாழ்விற்கு அநுசரணை செய்தவர்கள் ஆவர். எங்கள் கலாசாரம், கந்தபுராணக் கலாசாரம் என்பதை மறந்துவிடலாகாது. அவ்வாறு மறந்து விடாது, மீண்டும்

கந்தபுராணக் கலாசாரம் மலரும் நாள் எந்நாளோ, அந்நந்நாளே, நம்மைப் பிடித்த தொல்லைகளும், துன்பங்களும் துயர்களும் நீங்கும் பெருநாளாகும்.

வைகாசிப் பூரணையுடன் இணைந்தே பெரும்பாலும், வைகாசி விசாகத்திருநாள் வருகிறது. பூரணை, முழுமதிநாள். பகலிலே, சூரியன் ஒளி கொடுக்க, அதனைத் தொடர்ந்து பூரணச் சந்திரன் ஒளி வீசி இருளகற்ற, முழுநாளுமே இரவில்லாத பகலாக விளங்கும் நாள் பூரணை முழுமதிநாள். இத்தகைய நந்நாளை மக்கள் தூக்கத்திலும் சோம்பலிலும் வெறிதே கழிக்கக் கூடாதென்று எண்ணியவர்கள் நம் முன்னோர்கள். அதனால், கடவுள் வழிபாடு கடவுட் சிந்தனை, நல்ல கருமங்களில் ஈடுபடுதல் ஆகியவற்றில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். அம்பாள் ஆலயங்களில் பொங்கல், மடை என்பன இப்புண்ணியத்தில் நடத்தப்படுகின்றன. வற்றாப்பழை கண்ணகி அம்மாள் பொங்கல் பெருவிழா சிறப்பு வாய்ந்தது. வைகாசிப் பூரணையை இறுதிநாளாகக் கொண்டு விநாயகர், முருகன், அம்பாள் கோயில்களில் மகோற்சவங்கள் நடை பெறுகின்றன. வருடாந்த குளிர்த்தி சடங்கு என்பன மட்டக்களப்புப் பிரதேசத்தில், கண்ணகி மற்றும் அம்பாள் ஆலயங்களில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு நிகழ்த்தப் படுகின்றன. இவ்வாறு, வைகாசி விசாகத் திருநாள் சைவமக்களுக்கு மிகமுக்கியத்துவம் வாய்ந்த புனித நாளாக விளங்குகின்றது. இப்புண்ணியதினத்தில் தெய்வ வழிபாட்டிலும், நற்கருமங்களைப் புரிவதிலும், தான தருமங்களைச் செய்வதிலும் எம்மை ஈடுபடுத்தி நல்வாழ்வு வாழ்வோமாக.

# 25. ஆடி அமாவாசை.

விரதம் என்பது தவம். தவத்திற்கு இலக்கணம் வகுத்த திருவள்ளுவர், உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை ஆகியவையே தவத்திற்கு வடிவமாகும் என்றார். தனக்கு வருகின்ற துன்பங்களைப் பொறுத்துக் கொள்வதாலும், பிற உயிர்களுக்குத் துன்பங்களைச் செய்யாதிருத்தலாலும் ஒருவர்க்கு அளப்பரிய ஆற்றல் கிடைக்கின்றது. இத்தகைய ஆற்றல் நிறையப் பெற்றவர்க்கு கூற்றம் குதித்தலும் கைகூடும் என்கிறது பொய்யாமொழி. விரதம் மேற்கொள் வதன் மூலம் விரும்பிய பயன்களை விரும்பியவாறே பெற்றுக் கொள்ளமுடியுமாகையில், யாவராலும் விரதம் நோற்கப்பட வேண்டியதாக உள்ளது. விரதத்தில், வழிபாடு செய்தல் ஒரு முக்கிய அம்சமாகும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்போர் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்குமுரியவர்கள். விரதம் என்பது பிரதிக்ஞையும் ஆகும். விரதகாலங்களில் விதிக்கப்பட்டதைச் செய்வதும், விலக்கப்பட்டதை செய்யாதிருத்தலும் என்பது தீர்மானமாக உள்ளது. எமது சமயத்திலும் பல விரதங்கள் விதித்துரைக்கப்பட்டுள்ளன. விநாயகர், சிவன், சக்தி, முருகன், விஷ்ணு முதலிய தெய்வங்களைக் குறித்து அநுட்டிக்கப்படும் விரதங்களென்றும்; தெய்வங்களாகிவிட்ட தந்தை, தாய் ஆகியோரை எண்ணி மேற்கொள்ளப்படும் விரதங்கள் என்றும் அவை பல வகைப்படும்.

அமாவாசை, பௌர்ணிமை ஆகிய இரண்டு விரதங்களும் முறையே, காலமான தந்தை, தாய் ஆகியோரைக் குறித்து, அவர்கள் நற்கதியடைய, அவர்களின் பிள்ளைகளால் அநுட்டிக்கப்படும் விரதங்கள் ஆகும். ஒவ்வொரு மாதத்திலும் இவ்விரதங்களுக்குரிய தினங்கள் வருகின்றன. இவ்விரதங்களை அனுட்டிப்பவர்கள் ஆசார சீலர்களாக, உபவாசம் இருந்தும், அவ்வாறு இருக்க இயலாதவர் ஒரு பொழுது உண்டும் அனுட்டிப்பர். இத்தினத்தில் புண்ணிய தீர்த்தங் களில் நீராடித், தூய்மையராய், பிதிர் தருப்பணம் செய்தும்; பிண்ட தானம், சிரார்த்தம் செய்தும்; இறைவனை வழிபட்டும்; அந்தணர் களுக்குத் தானமும், விருந்தினர், சுற்றத்தவர், ஏழைகள், ஆதரவற் றோர் ஆகியோருக்கு உணவும் அளித்தும்; அவர்களுடன் போசனம் செய்தும் விரதக் கொள்கை, தீர்மானங்களுடன் இருப்பர். இறந்த தந்தை தாயரின் பாவ வினைகளை நீக்குதற் பொருட்டும், அவர்கள்

முத்தியின்பத்தை அடைதற்பொருட்டும் அமாவாசை, பௌர்ணிமை நாட்களில் விரதங்களைப் பிள்ளைகள் அனுட்டிக்கின்றனர். அமாவாசை, பௌர்ணிமைத் தினங்கள் மாதந்தோறும் வருகின்றன. அவற்றைத் தவறாது அனுட்டிக்க வேண்டியது தந்தை, தாயார்களை இழந்த பிள்ளைகளின் கடமையாகும்.

சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமியும், ஆடி, தை மாதங்களில் வருகின்ற அமாவாசையும் சிறப்புப் பொருந்தியன என்று சைவ நூல்கள் கூறுகின்றன. அவரவர் தந்தை, தாயார் இறந்த திதிகளைத் தவற விட்டவர்கள், ஆடி அமாவாசைத் தினத்தில் தந்தையை நோக்கியும், சித்திரைப் பௌர்ணமித் தினத்தில் தாயின் பொருட்டும் சிரார்த்தம், தருப்பணம், பிண்டதானம் என்பற்றைச் செய்யும் வழக்கம் உள்ளது.

இனி ஆடி அமாவாசை விசேடத்துவம் பற்றி நோக்குவோம். இந்துக்கள் ஒரு வருடத்தை இரண்டு அயனங்களாகப் பிரித்துள்ளனர். தை மாதம் தொடக்கம் ஆனிமாதம் வரையும் உள்ள ஆறுமாதங்கள் உத்தராயன காலம் என்பர். புவியின் தெற்கு அகலக்கோடு 23/1/2 பாகையிலிருந்து அதாவது மகரக் கோட்டிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் சஞ்சரிக்கும் காலம் இதுவாகும். கோடை காலப் பகுதியும் இதுவாகும். உத்தராயனம் தேவர்களுக்குப் பகற்காலம் ஆகும். ஆடிமாதம் தொடக்கம் மார்கழி வரையுள்ள ஆறு மாதங்கள் தட்சணாயன காலம் என்பர். புவியின் வடக்கு அகலக் கோடு 23/1/2 பாகையிலிருந்து அதாவது கடகக் கோட்டிலிருந்து தெற்கு நோக்கி சூரியன் சஞ்சாரம் செய்யும் காலம் இதுவாகும். கார்காலம் தொடங்கி நடைபெறும் காலப்பகுதியுமாகும். தேவர்களுக்குத் தட்சணாயனம் இரவுக் காலம் என்பர்.

தட்சணாயனத் தொடக்க மாதம் ஆடி என்பதால், பிதுர் காரியங்களுக்கு ஆடிமாதம் சிறப்பானது எனக் கொள்ளப்படுகிறது. ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசைத் திதி பிதுர் வழிபாட்டிற்குப் புண்ணியமான தினம் எனச் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

வாரம், திதி, கரணம், நட்சத்திரம், யோகம் என்னும் ஐந்தும் பஞ்சாங்க உறுப்புக்கள் ஆகும். இவற்றில் திதி முப்பது என்பர். திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்ட தூரத்தை குறிப்பிடும் சொல். பூர்வ பக்கப் பிரதமை தொடக்கம் அபரபக்க அமாவாசை ஈறாக உள்ள 30 காலப் பகுப்புக்கள் ஆகும். பூர்வபக்கம்

என்பது அமாவாசையின் அடுத்த தினத்திலிருந்து பூரணை வரையு முள்ள 15 நாட்கள் இக்காலத்தை வளர்பிறைக் காலம் என்றும் சுக்ல பட்சம் என்றும் குறிப்பிடுவர். பூரணையின் அடுத்த தினத்திலிருந்து அமாவாசை வரையுமுள்ள 15 நாட்கள் அபரபக்கம் ஆகும். இதனைத் தேய்பிறைக் காலம் என்றும் கிருஷ்ண பட்சம் என்றும் கூறுவர்.

சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேராக வரும் பொழுது ஏற்படுவது அமாவாசைத் திதி. அன்றைய தினம் பூமியிலுள்ளவர்களுக்குச் சந்திரன் தென்படாது. சூரியனும் சந்திரனும் ஒரு இராசியில் நிற்கும் காலம் என்று சோதிட நூல் கூறும். ''அமா'' என்றால் ஓரிடத்தில் பொருந்தியது அல்லது சேர்ந்தது என்று பொருள் கொள்வர். 'வாசி' என்றால் சாதகமான அல்லது வாய்ப்பான என்னும் கருத்தில் வருகின்றது. எனவே ஓர் இராசியில் சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்ந்து அல்லது பொருந்தி உறவாகும் வாசியான நாள் அமாவாசி எனப்பட்டது. மாதத்தில் ஒரு முறை இந்நிலை உண்டா கின்றது. அதாவது மாதமொரு தடவை அமாவாசை நாள் வருகின்றது.

சூரியனின் ஒளியும் வெப்பமுமே சகல சீவராசிகளுக்கும் உயிர்ப் பையும் பல்வேறு ஆற்றல்களையுமம அளித்து வாழ்விக்கின்றன. மனிதப் பிறவிகளும் சூரியனிலிருந்துதான் சகல ஆற்றல்கள், வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்கின்றன. சந்திரன் மனிதர்களின் மனத்திற்கு அதிபதியாக நின்று ஆட்சி செலுத்து கின்றது. மனங்களில் ஏற்படுகின்ற பல்வேறு உணர்ச்சிகள், மற்றும் தெளிந்த அறிவு, உற்சாகம் என்பன சந்திரனின் செல்வாக்கிற்குட் பட்டவை ஆகின்றன. இந்நிலையில் சூரியனும் சந்திரனும் மக்கள் மீது எத்துணை பாதிப்பினை ஏற்படுத்துகின்றன என்பதை அறிந்து கொள் ளலாம். சூரியனும், சந்திரனும் நமக்கு பிரத்தியட்சமாகத் தோன்று கின்ற தெய்வங்கள் என இந்துசமயம் கூறுகின்றமை நோக்கற்பாலது.

இத்துணை சிறப்பு வாய்ந்த சூரிய சந்திரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியில் சஞ்சரிக்கும் புனிதமான நாள் அமாவாசையாகும். அத்துடன் தேவர்களும் அமாவாசையின் அதிபர்களாக உள்ளனர். பூமியிலுள்ளவர்களைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு அமாவாசை யும் பிதுர் கருமத்திற்கு அதாவது தென்புலத்தார் வழிபாட்டிற்கு மிக உவந்த நாள். சூரிய மண்டலத்திற்கு அப்பால் தென்மண்டலத்தில் பிதுர்கள் உறையும் பிதுர்லோகம் உள்ளது. பிதுர்களைத் தென்புலத் தார் என்று அழைப்பது தமிழர் மரபு. தென்புலத்தார் வழிபாடு,

எள்ளும் தண்ணீரும் இறைத்தல், பிண்டம் போடுதல் என்பவை பழந்தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை. அமாவாசையில் விரதம் இருந்து இக்கருமங்களை ஆற்ற வேண்டும். ஆடி அமாவாசை பிதுர் கருமங்களுக்கு மிகவும் உவந்தது என்றும் பிதுர் வழிபாடு செய்ய வேண்டியவர்கள் தவறாது ஆடி அமாவாசையில் செய்ய வேண்டும் என்றும் நூல்கள் எடுத்துரைக்கின்றன. பிதுர் தருப்பணத் திற்கு மிகவும் ஏற்றது ஆடி அமாவாசை என்பது இந்துக்களின் கொள்கை.

ஆடி அமாவாசைத் தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங் களில் நீராடினால் பழவினைகள் அறும் என்றும் பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின் அருள் செறிந்த நீராக நினைந்து முன்னோர்களான பிதுர்களை எண்ணி அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களுக்கு முத்தியளிக்கும்படி இறைவனை வேண்டி தீர்த்தமாடுதல் வேண்டும். அமாவாசை, பௌர்ணமி தினங்களில் கடல் பொங்கியெழும் நிலை உண்டு. இவ்வாறே இத்தினங்களில் மனித மன உணர்வுகளிலும் மாறுதல்கள் நிகழ்வதாகக் கூறப்படுகிறது. மானிடரின் ஆத்மீக வலுவும் குன்றும் காலமாக இத்தினங்கள் உள்ளன. எனவேதான் அமாவாசை போன்ற கனத்த நாட்கள் மிக அவதானமாகக் கழிக்கப்பட வேண்டும்என்றும், இந்நாட்களில் வேறு காரியங்களைச் செய்யாதும், மனங்களைப் புலன்கள் வழிச் செல்ல விடாதும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆன்றோர்கள் கூறிவைத்தனர். இத்தினங்களில் கடவுள் வழிபாடு, பிதுர்வழிபாடு என்பவற்றைச் செய்து நல்ல பயனைப் பெறுவதே முறையாகும்.

ஆடி அமாவாசையில் தீர்த்தமாடுதல்; பிதுர்வழிபாடுசெய்தல்; தருப்பணம், பிண்டதானம் நிறைவேற்றுதல் என்பவை ஆண்டுதோறும் கீரிமலை நகுலேஸ்வரத்திலும்; மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங் கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு, வேறும் பல சிவஸ்தலங்களிலும் இந்நிகழ்ச்சிகள் இடம் பெற்று வருகின்றன. நாங்கள் நோயின்றிச் சுகமான வாழவும், சகல செல்வங்களையும் பெற்று இனிதாக வாழவும் தெய்வங்களை ஆராதிக்கிறோம். இதற்குப் பிதுர்களையும் திருப்தி செய்து மகிழ்விக்க வேண்டும். இவற்றிற்குரிய விதிமுறைகளையெல்லாம் நமது முன்னோர்கள் எழுதி வைத்துள்ளனர். பராசரர், மனு, லிகிதர், சாதா தபர் போன்ற இருடிகள் எழுதி வைத்தவைகள் யாவும் சேர்த்து "தர்ம

சாஸ்திர நிபந்தனம்'' எனும் கிரந்தநூல் தொகுக்கப்பட்டுள்ளது. அதனை ஆதாரமாகக் கொண்டே இந்துக்களின் கர்மானுஷ்டானங்கள் நடக்கின்றன. ஆடி அமாவாசையில் இறந்த பெற்றோர்களுக்குச் செய்யும் தர்ப்பணம், சிரார்த்தம் மூலம் காணிக்கையை, அன்பினை அவர்களுக்குச் செலுத்துகிறோம். அவர்களின் ஆசீர்வாதங்களும், பாதுகாப்பும் நமது நல்வாழ்விற்குத் தேவை. எமது சமயத்தின் விதிமுறைப்படி தெய்வத்தை நேராக வழிபட்டு அநுக்கிரகம் பெறும் நிலை மிக உயர்ந்த நிலையில் பக்குவமடைந்த சந்நியாசிகள் போன்றோருக்கே உரித்தானது. ஏனையோர் தேவதைகளைப் பிரீதி செய்து தெய்வங்களின் அநுக்கிரகம் பெற்று நன்மையடைய வேண்டும். தேவதைகளைப் பிரீதி செய்வது யாகங்கள், வேள்விகள், ஹோமங்கள் மூலம் ஆகும். இவ்வாறே பிதுர்களைப் பிரீதி செய்ய சிரார்த்தம், தர்ப்பணம், பிண்டதானம் என்பவை செய்யப்படுகின்றன. இவற்றின் மூலமே நாம் நன்மையடைய வேண்டும். எனவே, அமாவாசை, பௌர்ணமி விரதங்கள் மற்றும் சிரார்த்தம் முதலியவற்றைத் தவறாது அனுட்டித்து வரவேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு இவற்றை அனுட்டிக்காதவர்களுக்கு பிதுர் சாபம் ஏற்படுகிறது என்றும், பிதுர்சாபம் வாழ்வில் இன்னல்களையும் தொல்லைகளையும் தருகின்றன என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளனர்.

மனிதர்கள் தம் வாழ்நாட்களில் குற்றங்களைத் தெரிந்தும் செய்கின்றனர்; தெரியாமலும் செய்கின்றனர். குற்றங்கள் எனத் தெரிந்து கொண்டு செய்யப்படுபவை புத்தி பூர்வமாகச் செய்யப்படுபவை. இவற்றை அனுபவித்தே ஆக வேண்டும். தெரியாமல் செய்யப்படும் குற்றங்களுக்குப் பிராயச்சித்தம் உண்டு. அபுத்தி பூர்வமாக செய்யப்பட்ட இத்தகையன இறந்த பின் இவர் களுக்குச் செய்யப்படுகின்ற தகனக்கிரியை, அந்தியேட்டி, சபிண்டீ கரணம், மாசிகம், சிரார்த்தம், மற்றும் அமாவாசை பூரணை விரதங்கள் ஆகியவற்றின் மூலம் அகற்றப்பட்டு விடுகின்றன. குறிப்பிட்ட அபரக் கிரியைகளைப் பிள்ளைகள் விதிப்படி செய்வதன் மூலமும்; அமாவாசை, பௌர்ணமி விரதங்களை மேற்கொள்வதன் மூலமும், இறந்த பெற்றோர்கள், அபுத்திபூர்வமாகத் தாம் வாழ்ந்த காலத்தில் இயற்றிய பாவ வினைகள் வேரோடு களையப்படுகின்றன. அவர்களின் உயிர்கள் ஆன்ம ஈடேற்றம் பெறுகின்றன. இதுவே, மகன் தன் தந்தை தாயாருக்கு ஆற்றும் மகத்தான உதவியாகும்.

அப்பொழுதுதான், ''இவன் தந்தை என்நோற்றான் கொல் எனுஞ் சொல்'' என்ற வள்ளுவர் வாக்கு மெய்ம்மை பெறுகின்றது.

''மைந்தனைப் பெறுகின்றது மாசிலாப்
புந்தியன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
வந்தமில் கடனாற்றுதற் கேயன்றோ''

மைந்தனைப் பெற்று, அன்போடு வளர்த்து, சிறந்த கல்வியளித்து, அவையில் முந்தியிருக்கச் செய்வதற்குத் தந்தை தாயார் எடுக்கும் இடையறா முயற்சிக்கு என்ன காரணம்? காரணம் உண்டு. ஆம், தந்தை தாயார் இறந்தபின் முறைப்படி செய்ய வேண்டிய கடன்களை நிறைவேற்றுவதற்கும், பின்னர் ஆண்டுதோறும் அவர்களை நோக்கி சிரார்த்தம் செய்வதற்கும், ஒவ்வோர் அமாவாசை, பௌர்ணிமைத் தினங்களில் விரதம் அனுட்டிப்பதற்கும் அவற்றின் வழி இறந்த உயிர்கள் பழவினைகள் நீங்கப் பெற்று சாந்தி, ஈடேற்றம், முத்தி ஆகியவற்றை அடைவதற்கும், இப்புத்திரர்களின் அறிவுபூர்வமான, சிரத்தை பூர்வமான உதவி தேவை என்பதற்காக வேயாகும். 'புத்' எனும் கொடிய நரகத்தில் வீழாது பெற்றோர்களைக் காப்பாற்றுபவனே புத்திரன் ஆவன். எனவே, ஆடி அமாவாசையின் மகத்துவத்தை உணர்ந்து, அத்தினத்தில் முறைப்படி தென்புலத்தார் வழிபாடு செய்து சைவ ஆசாரங்களைப் பேணி, இறந்த நம் முன்னோர்களின் நல்லாசிகளைப் பெற்று உய்வோமாக.

# 26. ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி

மகாவிஷ்ணு ஈரேழு புவனங்களையும் காப்பவர். காத்தற் கடவுள் அவர். அதற்காகப் பல அவதாரங்களை எடுத்துள்ளார். மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன் போன்ற அவதாரங்களை மகாவிஷ்ணு இப்பூமியில் எடுத்துள்ளார். மானிடர், மற்றும் உயிரினங்களுக்கு அநுக்கிரகம் செய்யும் பொருட்டே அவதாரங்களை எடுத்துப் பல திருவிளையாடல்களைப் பகவான் நடத்தினார். இந்த வகையில் கிருஷ்ணாவதாரம் பற்றி இன்று சற்றுச் சிந்திப்போம்.

ஆவணிமாதம், பூரணைக்குப் பின் வருகின்ற கிருஷ்ண பட்சத்து அட்டமித் திதியுடன் கூடிய ரோகிணி நடசத்திரத்தில் வசுதேவருக்குத் தேவகி வயிற்றில் திருவவதாரஞ்செய்தவர் கிருஷ்ணபரமாத்மா. கண்ணன் என்றும் இவரை அழைப்பதுண்டு. இந்தப் புண்ணிய தினத்தை ஆண்டுதோறும் கிருஷ்ண ஜயந்தி தினமாகக் கொண்டாடி வருகின்ற வழக்கம் இந்துக்களிடையே உண்டு. கோகுல அட்டமி என்றும் இத்தினத்தையே சிறப்பிக்கின்றோம்.

பாரத நாட்டின் வடக்கே, யதுவம்சத்து அரசனாக விளங்கியவன் உக்கிரசேனன். இவனுக்கு கம்சன் என்ற மகனும், தேவகி எனும் மகளும் இருந்தனர். வசுதேவர் உக்கிரசேனனுக்கு மந்திரி. வசுதேவருக்குத் தேவகியைத் திருமணம் செய்துவைத்தனர். தேவகியின் அண்ணன் கம்சன் ஒருநாள் தன் தங்கையையும் வசுதேவரையும் தேரில் ஏற்றிக் கொண்டு செல்லும் போது, எங்கிருந்தோ ஓர் அசரீரி கேட்டது. ''கம்சனே, உன் தங்கை தேவகி வயிற்றிற் பிறக்கும் எட்டாவது சிசு உன்னைக் கொல்லும்'' என்றது. அந்த அசரீரி. இதைக் கேட்டதும் கம்சன் வெகுண்டு தங்கை யென்றும் பாராது தேவகியை கொல்ல எத்தனித்தான். இதனை அறிந்த வசுதேவர், தமக்குப் பிறக்கும் குழந்தைகளைக் கம்சனிடமே கொடுத்து விடுவதாகவும், தேவகியைக் கொல்லாது விட்டுவிடும்படியும் கம்சனிடம் வேண்ட, அவனும் அதற்கு உடன்பட்டு, அவர்களிரு வரையும் விலங்கிட்டு சிறையில் வைத்தான். அவர்களிடம் பிறந்த ஏழு குழந்தைகளும் பிறந்த உடனேயே கம்சனிடம் ஒப்படைக்கப்பட்டுக் கொல்லப்பட்டன. எட்டாவது குழந்தையாகக் கண்ணன் பிறந்தான். தன் மாமனாகியகம்சனைக் கொல்ல வென்று பிறந்த கண்ணன், தமது

பஞ்சாயுதத்துடன் தாய்தந்தையர்க்குத் தரிசனம் காட்டி தன்னைக் கொண்டு சென்று யமுனை நதி தீரத்தின் மறுபக்கத்திலமைந்த கோகுலத்திலுள்ள யசோதை என்பாளிடம் விட்டுவிட்டு, யசோதை பெற்றெடுத்த மாயை என்ற பெண்குழந்தையை எடுத்த வந்து தேவகியிடம் சேர்க்குமாறு கூறவே, வசுதேவரும் அவ்வாறு அன்றிரவே செய்து முடித்தார். கம்சனுக்கு இந்த விடயம் தெரியாது. கம்சனும், தேவகியிடம் காணப்பட்ட மாயை, அவளின் எட்டாவது குழந்தையென்றெண்ணி, அதனைக் கொல்லும்பொருட்டு ஆகாயத்தில் எறிந்தான். அப்போது மாயை எனும் அக்குழந்தை கம்சனை விழித்து ''என்னைக் கொல்ல உன்னால் முடியாது. உன்னைக் கொல்வதற்கென்றே பிறந்த கண்ணன் கோகுலத்தில் நந்தகோபன், யசோதை வீட்டில் வளருகின்றான்'' என்று கூறிற்று.

ஆயர்பாடியில் வளர்ந்து வந்த கண்ணன் செய்த குறும்புகளும், லீலா வினோதங்களும் சொல்லியடங்காது. சிலவற்றை நோக்குவோம். கோகுலம் ஓர் இடைச்சேரியாகும். பசுக்களை வளர்ப்பதே பிரதான தொழில். பால், தயிர், வெண்ணெய் என்பனவற்றிற்குக் குறைவில்லை. கோபியர்களின் வீடுகளில் உயரத்தில் கட்டப்பட்ட உறிகளில், வெண்ணெய்ப் பானைகளை வைத்துப் பாதுகாப்பது வழக்கம். இவ்வாறு உயரத்தில் வைப்பதனால் சிறுவர்கள் வெண்ணெயைத் திருடி உண்ணமாட்டார்கள் என்று கோபியர் எண்ணினர். கண்ணனோ சாதாரண குழந்தையல்லவே. அவன் வெண்ணெயைத் திருடி உண்டு விடுவான். யசோதைக்கு முறைப்பாடுகள் வந்து கொண்டேயிருக்கும். இதைத் தாங்கமாட்டாது கண்ணன் வீடுவிட்டு அடுத்த வீடுகளுக்குத் தவழ்ந்து போவதைத் தடுக்க அவனை ஒரு கயிற்றினால் பிணைத்து உரலில் கட்டி வைப்பாள் யசோதை. மாயக் கண்ணன் அல்லவா? மாயங்காட்டி மறைந்து விடுவான். அன்புக் கயிற்றினால் மாத்திரம் கட்டுப்படக் கூடியவன் கண்ணன். ஒரு நாள் யசோதை கண்ணனைத் தன் மடியில் வைத்துப் பாலூட்டிக் கொண்டிருந்தாள். அப்பொழுது கண்ணன் கொட்டாவி விட வாய்திறந்தபோது, கண்ணனின் வாய்க்குள் அண்டங்கள் அனைத்தையும் தன்னையுங் கண்டு அசந்து போனாள் யசோதை. மற்றொருநாள் தெருவில் மற்றைய குழந்தைகள் போல் கண்ணன் மண் தின்ற போது, அதைக் கண்ட யசோதை பயமுறுத்த, அப்போது தான் மண் தின்னவில்லை என்று கூறித் தனது வாயை திறந்து காட்டியபோது, அதனுள் சகல அண்டங்களையும் காண்பித்து யசோதையை ஆச்சரியத்திற்குள்ளாக்கினான். உண்மையில்,

யசோதை கண்ணனை வளர்க்கும் பாக்கியம் பெற்றவள்.

கண்ணன் தன்னைக் கொல்வதற்கு ஏவப்பட்ட வற்சாசுரனைப் பிடித்து விளாமரத்தில் மோதிக் கொன்றான். மலைப்பாம்புருக் கொண்டு வந்த அசுரனின் வாயுட்புகுந்து அவனைக் கொன்றான். யமுனையில் உள்ள களிங்கமடுவின் நச்சுநீரைப் பருகியிறந்த கோபாலரைக் கண்ணன் உயிர்ப்பித்தான். கொடூரமாகப் பரவி வந்த காட்டுத்தீயை விழுங்கி மக்களையும் ஏனைய உயிரினங்களையும் காப்பாற்றினான். ஒரு முறை இந்திரன் கோபங் கொண்டு பெருமழையைப் பெய்வித்தபோது, கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து, பேரழிவிலிருந்து உயிர்களைக் காப்பாற்றி னான். இவ்வாறு குழந்தைப் பராயத்தில் கண்ணன் பல அற்புதத் திருவிளையாடல்களை நிகழ்த்திக் காட்டினான். ஒவ்வொரு செயலும் நல்லவர்களைப் பாதுகாப்பதாகவும், தீயவர்களை ஒழிப்பதாகவுமே அமைந்திருந்தன. இதனைத் துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனம் என நூல்கள் கூறம். தீய சக்திகளின் கோரப்பிடிகளிலிருந்து நல்லவர்களை விடுவித்து, அவர்களுக்கு வாழ்வளித்து, நீதியையும் நன்மையையும் இப் பூமியல் நிலைபெறச் செய்தலே கிருஷ்ணாவதாரத்தின் பிரதான நோக்கம் என்பது உணரற்பாலது.

''எல்லாம் நானே, எப்பொருளும் நானே, காரணமும் நானே, கர்மாவும் நானே.'' என்று கண்ணன் கீதையில்கூறிய வாசகங்களை நுணுகிப் பார்க்கும் போது அவற்றின் உட்பொருள் விளங்கும். ''எல்லாம் அவன், அவனே எல்லாம்'' என்பது இப்பூமியிலுள் ளோருக்கு விளங்கிவிட்டால், இவ்வுலகில் துன்பங்கள் தேய்ந்துவிடும், இன்பங்கள் பெருக்கெடுக்கும்; அல்லல்கள் தீர அறம் கொழிக்கும். உலகில் எங்கும் சாந்தி, சமாதானம், மகிழ்ச்சி, பல்வேறு வளங்கள் என்பன செழிக்கும். இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற உன்னத நிலையினை இவ்வுலகத்து மாந்தர் பெறும் பேறு கிட்டும். கீதையில் கண்ணன் காட்டிய வழி, மாந்தர்களின் உய்விற்கு மகத்தான அமிர்த சஞ்சீவி. இத்தகைய அரும்பெரும் அறிவுப் பெட்டகத்தை, வாழ்க்கைத் தத்துவத்தை, வாய்மை உபதேசங்களை, உலகமக்களுக்கு அவர்களின் மீதுள்ள அளப்பருங்கருணையினால், அவர்களை ஈடேற்றம் அடையச் செய்யும் பொருட்டுக் கீதை வடிவத்தில் திருவாய் மலர்ந்தருளுவதற்காகவும் கண்ணன் பிறந்தான். வெறுமனே ஒருவரின் நோயை மாற்றிவிட்டால் மாத்திரம் சிறந்த வைத்தியன் ஆகிவிட முடியாது. அந்நோய் வேறொரு நோயாக மாறி அவனை

வாட்டாமலும், அதே வேளை அதே நோய் சில காலங்களுக்குப் பின்னர் மறுதலிக்காமலும் அவனின் நோயைத் தீர்ப்பவனே மிகச் சிறந்த வைத்தியன் ஆவான். இந்த நிலையிலேதான், கிருஷ்ண பரமாத்மாவும் துட்டர்களை அழித்து அவர்களின் பிடியிலிருந்து நல்லவர்களைக் காக்கின்ற செயலுடன் தன் கடமையை முடித்து விடாமல், அதற்கு அப்பாலும் சென்று மாந்தர்களுக்குக் கீதையின் வாயிலாக நல்லறிவு புகட்டி, அறிவொளி ஏற்றி, அறியாமை இருளை அகற்றி, தீமைகள் மீண்டும் அணுகாமலும், நல்லவர்கள் தீமைகள் செய்யாமையை உறுதிப்படுத்துவதாகவும் செய்துள்ளார். கீதையின் வழியில் மக்கள் செல்லும் போது மீண்டும் தீமை தலையெடுக்கவோ, அசுரத்தனம் தலைகாட்டவோ முடியாது. பகவத் கீதை உக்கிரமான போர்ச்சூழலில், கிருஷ்ண பரமாத்மாவினால், சோர்ந்து போய் நின்ற அருச்சுனனுக்கு அருளப்பட்டது. பார்த்தனுக்கு மட்டும் சாரதியாகக் கண்ணன் அமையவில்லை; இந்த உலகிற்கே அவன் சாரதி. அவனே இந்த உலகினைச் சாரதியாக அமைந்து இயக்குகின்றான். அவனின்றி ஓரணுவும் அசையாது. அசையாது நின்ற அருச்சுனனை அசைத்து அவனைப் போர்க்களத்தில் சுறுசுறுப்பாக இயங்க வைத்தது கீதை. கீதோபதேசத்தின் பின்னரே துரியோதனன் முதலிய தீயோர் அழிக்கப்பட்டனர். கீதைக்கு அத்துணை சக்தி. கீதை இன்றும் தீயன வற்றை ஒழித்துக் கொண்டே இருக்கிறது. பகவான் அருளிய கீதை வேதத்தின் சாரம்; வேத விளக்கம். வாழ்விற்கு ஒளிதந்து நல்வழி காட்டும் கலங்கரைவிளக்கமாக கீதை நின்று நிலவுகிறது. கிருஷ்ணா வதாரம் நிகழ்ந்த படியினாலேயே கீதை உலகிற்குக் கிடைத்தது.

மனிதகுலத்தோடு மனோரம்மிய உறவுகளை உருவாக்கி மாயநாடகமாடுவதற்கென்றே எடுக்கப்பட்டது கண்ணன் அவதாரம். இந்த அவதாரம் மூலம் பல அரிய கருத்துக்களை அறிவுபூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும் உலகமாந்தருக்குக் கண்ணன் உணர்த்தி யுள்ளான். பக்தர்களின் பார்வைக்கேற்பக் குறும்புக் கண்ணனாகக் குழந்தை வடிவிலும்; காதல் நாயகனாக யௌவன வடிவிலும்; கீதை நாயகனாக ஆசான் வடிவிலும், இன்னும் மந்திரியாகவும், தோழனாகவும், சேவகனாகவும், இவ்வாறு பல்வேறு பாத்திரங்களில் அந்தப் பரம்பொருள் ஜீவன்களைத் தனக்குள் கட்டிப் பிணைக்க ஆடும் நாடகங்கள் தான் எத்தனை, எத்தனையோ. துவாபர யுகத்தில் மகாபாரதத்தை ஒரு மாபெரும் நாடகமாக நடத்திக் காட்டியவர் கிருஷ்ண பரமாத்மா. இதனால் பாவமாந்தர்களைக் கொன்று பூமிபாரதத்தைக் குறைப்பதையே இலக்காக் கொண்டு இந்த நாடகம்

நடத்தப்பட்டது. குருஷேத்திரத்தில் பதினெட்டு நாட்கள் மகாபாரதப் போரினை நடத்திய கிருஷ்ணன், ''பூமியில் நடைபெறுகின்ற எந்தக் காரியங்களுக்கும் மனிதன் எவனும் பொறுப்பல்ல. கடமையை மட்டும் செய்வ தற்காகவே பூமியில் மனிதன் ஜென்மம் எடுக்கின்றான்; பலன்களுக்கு நானே கர்த்தா'' என்ற உண்மையை அருச்சுனனுக்குக் கூறுமாப் போல உலகத்தவருக்கே எடுத்துரைத் தான். ''பணிபுரி, பலனை எதிர் பாராதே'' என்பதே இதன் சாரம்.

முன்னர் கூறப்பட்ட காரணங்களுக்காகப் பாரதப் போரை நடத்தியே ஆகவேண்டிய நிலைப்பாடு கிருஷ்ணருக்கு இருந்த போதிலும், கிருஷ்ணாவதாரம் இதற்கெனவே எடுக்கப்பட்டிருந்த போதிலும், அன்றொருநாள் பஞ்ச பாண்டவர்கள் ஐவரும் ஒருங்கிருந்த சமயம் அவர்களிடம் கபடமாக ஒரு கேள்வியைக் கிருஷ்ணன் விடுத்தான். ''இந்தப் பாரதப் போரை நிறுத்துவது எப்படி?'' என்பதே அக்கேள்வி. இதனைச் சரியாகப் புரிந்து கொள்ளாத தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், திரௌபதை யாவரும் உணர்ச்சி மேலீட்டால் பல்வேறு வழிவகைகளை எடுத்துக் கூறினர். உணர்ச்சி அறிவை மறைத்துவிடும் என்பது உண்மைதான். ஆனால் அவர்களுள் அறிஞர் திலகமான சகாதேவன் மட்டும் கண்ணனை நோக்கி, ''கபடக் கண்ணா, ஏன் இந்த மாய நாடகத்தை ஆடுகிறாய். கிருஷ்ணாவதாரத்தின் குறிக்கோள் பாரதப் பெரும் போரை நடத்திப் பூமிபாரம் குறைப்பதுதானே. போரை நிறுத்துவது என்பது நடவாத காரியம்... சரி அப்படி நிறுத்துவதாக விருந்தால் ஒரு வேலைசெய்ய வேண்டும். அது என்னவெனில், உன்னை ''நேராகக் கைப்பிடித்து, நின்னையும் நான் கட்டுவனேல், வாராமல் காக்கலாமே மாபாரதம்'' என்று சட்டெனக் கூறினான். இவ்வாறு சகாதேவன் கூறக்கேட்ட கிருஷ்ணன், சிரித்துக் கொண்டே, ''என்னை உன்னால் கட்டமுடியுமா? செய் பார்ப்போம்'' என்றான். மறுகணமே சகாதேவன் கண்ணனைக்கட்டிவிட்டான். எப்படி? அவன் அறிஞன் அல்லவா? அறிவை ஆற்றலாக்கித், தன் அன்பினால், பக்தியினால் கண்ணனைத் தன் உள்ளத்துள் அடக்கிக் கட்டிவிட்டான் சகாதேவன். என்னே அன்பின் மகத்துவம். இறைவன் தொண்டருள்ளத் தடக்கம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே. அண்டங்கள் அனைத்திலும் பரவியுள்ள பரம்பொருளை இப்பிண்டத்துள் மனிதன் கட்டியாள மகாபாரதம் சுட்டிக் காட்டிய வழி இதுவாகும். துவாபரயுகத்தில் இவ்வாறு நிகழக் கலியுகத்திலும் அதே மாதிரி

அன்பினால், ஆராக்காதலினால், அளவிறந்த பக்தியினால் கண்ணனைத் தம்முள் அடக்கி ஆண்டான். ஸ்ரீ வில்லிபுத்தூரில் தோன்றிய கோதை நாச்சியார், கண்ணனை தன்னுள் அடக்கி ஆண்டதால் 'ஆண்டாள்' எனும் சிறப்புப் பெயரையும் பெற்றாள். அவள் சூடிக் கொடுத்த மலர்மாலையை ஸ்ரீமந் நாராயணனுக்குச் சூட்டியதால் அபசாரம் நேர்ந்து விட்டதே எனப் புலம்பிய அவளின் தந்தை பெரியாழ்வாருக்கு கனவில் தோன்றி, ''உமது மகள் சூடிச் கொடுத்த மாலையே எமக்கு உவந்தது. இனிமேலும் அவ்வாறு சூடிக் தருகின்ற மாலைகளையே எமக்கு அணிவிக்க வேண்டும். அது அபசாரமல்ல உபசாரம் ஆகும்'' என்று கூறியருளினான். கிருஷ்ண ஜயந்தி தினத்தில், கிருஷ்ணபரமாத்மாவை வழிபட்டு உய்வு பெறுவோமாக.

# 27. ஆவணிச் சதுர்த்தி

சதுர்த்தி என்பது ஒரு திதி. ஒவ்வொரு மாதமும் அமாவாசைக்குப் பின்னர், நான்காம் நாள் வருகின்ற சதுர்த்தித்திதியன்று விநாயகப் பெருமானை நோக்கி விரதம் அனுட்டிப்பது, இந்துக்களிடையே வழக்கமாக இருந்து வருகின்றது. ஆவணிமாதப் பூர்வபக்கச் சதுர்த்தி, அவற்றுள் விசேடமாகக் கூறப்படுகிறது. மாதச் சதுர்த்தி, எல்லா வற்றிலும் விரதம் அனுட்டிக்க முடியா விட்டாலும், ஆவணிச் சதுர்த்தி யன்று ஆதல் விநாயகரை நோக்கி விரதமிருந்து அனுக்கிரகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தனக்கு மேலே வேறொருதலைவன் இல்லாதவன் விநாயகன். எனவே, விநாயகர் முழுமுதற் கடவுள் ஆவர். விநாயகனை உள்ளன் போடு வணங்குபவர்களின் வெம்மையான வினைகள், வேரோடு களையப்படுகின்றன. அவர்களுக்கு வருகின்ற விக்கினங்கள், வில்லங் கங்கள்; இடர்கள், இடையூறுகள் அனைத்தும் முற்றாகத் தீர்க்கப் படுகின்றன. விநாயகரை விரும்பி, இடைவிடாது வழிபாடு செய்து வருபவர்க்கு, மனத்தூய்மை, மொழித்தூய்மை, செயல்த்தூய்மை, என்னும் திரிகரணசுத்தி கிட்டுகின்றது. அதன் காரணமாக, எடுத்த காரியங்கள் அனைத்தும் சிரமமின்றிச் சித்திக்கின்றன. திருவும், கல்வியும், சீரான வாழ்வும் அவர்களுக்குத் தழைத்து ஓங்குகின்றன. நினைத்த காரியங்களோ, எடுத்த கருமங்களோ முட்டின்றி அடையப் பெறுதலுக்கு விநாயகரின் திருவருள் மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்தபடியினால்தான், எக்கருமத்தையும் எச்செயற்பாட் டையும் தொடங்கும்போது முதலில் விநாயகரை நினைந்து, வணங்கி, வழிபட்டு ஆரம்பிக்கும் மரபு இந்துக்களிடம் தொன்று தொட்டு இருந்து வருகிறது.

ஓம் எனும் பிரணவ மந்திரம், மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் மூலமாகவும், ஆதியாகவும் அமைந்துள்ளது. ஓம் எனும் வடிவமாக வும், பிரணவப் பொருளாகவும் விநாயகர் விளங்குகின்றார். ''பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்'' எனப் பழந்தமிழ் நீதிநூல் ஆன வெற்றிவேற்கை கூறுகிறது.

சிந்தூரன் என்பான் வரங்கள் பல பெற்று, அவற்றின் பலத் தினால், தேவர்களுக்கும் பூவுலகிலுள்ளவர்களுக்கும் இன்னல்

களையும் தொல்லைகளையும் கொடுத்து வந்தான். தேவர்களை அழித்தொழிக்க எண்ணினான் அத்தகைய கொடியவனான சிந்தூரனைச் சங்காரம் செய்து தேவர்களைக் காப்பாற்றுவதற்கு விநாயகர் அவதரித்த திருநாள் தான் ஆவணிச் சதுர்த்தி ஆகும்.

முன்பு ஒருமுறை, திருக்கயிலாயத்திற்குப் பிரமதேவர் சென்று, சிவபெருமானைத் தரிசித்த வேளை, நாரதரும் அங்கு ஒரு கனியுடன் வந்திருந்தார். அப்பொழுது பிரம்மதேவர், நாரதர் கொண்டு வந்த கனியை வாங்கி, முருகனுக்குக் கொடுக்கும்படி சிவபெருமானை வேண்ட, சிவனும் அப்பழத்தை முருகனிடம் வழங்கினார். இதனைக் கண்ணுற்ற மூத்த பிள்ளையான விநாயகர் சினங்கொண்டு பிரம தேவரை நோக்கினார். விநாயகரின் கோப நோக்கு, பிரமனைப் பயங்கொள்ளச் செய்தது. தன் பிழையைப் பொறுத்தருளும்படி, பிரமன், விநாயகரை பணிந்து நின்றான். இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரன் தன்னையுமறியாமல் ஏளனமாகச் சிரித்து விட்டான். சந்திரனின் இச்சிரிப்பு, பெரியோர்களை அவமதித்த குற்றமாகக் கொள்ளப்பட்டது. பெரியோர்கள் கூடியிருந்த அவையில் அடக்கம் பேணாது ஏளனச் சிரிப்புச் சிரித்த சந்திரன், விநாயகரால் சபிக்கப் பெற்றான். சந்திரன், அதன் பிரகாசத்தை இழக்கும்படி நேர்ந்தது அச்சாபத்தினால்.

தேவர்கள் சந்திரனுக்குச் சாபவிமோசனம் அளிக்குமாறு விநாய கரை மன்றாடினர். கருணை கொண்ட விநாயகர், ''வருடத்தில், ஆவணி மாதச் சதுர்த்தியன்று சந்திரனைப் பார்ப்பவர்கள் துன்பம் அடைவார்கள்'' என்று கூறிச் சந்திரனுக்குக் கொடுக்கப்பட்ட சாபத்தைக் குறைத்துவிட்டார். மேலும், ''சதுர்த்தி தோறும் விரதமிருந்து தம்மை வழிபடுவபவர்கள் புண்ணியப் பேறுகளை அடைவர்'' என்றும் விநாயகர் திருவருள் பாலித்தார்.

விகட சக்கரர் விநாயகன் ஆடிய நடனத்தை தேவர்கள் எல்லோ ரும் பார்த்துப் போற்றி மகிழ்ந்தனர். ஆனால் சந்திரனுக்கோ சிரிப்பு வந்து விட்டது; சிரித்தும் விட்டான். அதனால் சந்திரனுக்கு விநாயகர் சாபம் கொடுத்தார். சதுர்த்தி தினத்தில் சந்திரனைப் பார்ப்பவர், பாவம் செய்தவர் ஆவர், என்பதே அச்சாபம். இன்றும் சதுர்த்தியன்று தோன்றும் ஐந்தாம் பிறைச் சந்திரனைப் பார்ப்பதை மக்கள் தவிர்த்து வரும் வழக்கம் காணப்படுகிறது. சந்திரன் விநாயகரை வணங்கி வழிபட்டு அருள்பெற்ற தினமும் ஆவணிச் சதுர்த்திநாளே.

ஆவணிச் சதுர்த்தி விரதத்தை அனுட்டிப்பவர்கள் விநாயகரின் திருவருட் கடாட்சம் பெற்று இகபரசுகங்களைப் பெறுவர். வாழ்க்கையில் எத்துன்பமோ, இடரோ ஏற்படாது; அஞ்ஞான இருள் அகன்று மெய்ஞ்ஞானம் கைவரப் பெறும். வாழைப்பழம், மாம்பழம், பலாப் பழம் எனும் முக்கனிகள், கரும்பு, எள், கடலை, அவல், அப்பம், மோதகம், கொழுக்கட்டை, வடை, பொரி உருண்டை என்பவற்றை விநாயகருக்கு நிவேதித்து கணேச அஷ்டகம் கூறிப் பூசை செய்து அவரை வழிபடவேண்டும்.

விநாயக புராணம் படிப்பதாலும் நல்ல பயனைப் பெறமுடியும். விநாயகரை அறுகம்புல் கொண்டு அருச்சிப்பது உவந்த முறையாகும்.

விக்கினங்கள் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் விக்கினேஸ்வரனான விநாயகப் பெருமானைத் தொழுது வணங்கி வழிபாடு செய்தலே, விக்கினங்கள் நீங்கப் பெற்று நாம் உய்வு பெறுவதற்கு ஒரே வழி என்பதை உணர்வோமாக.

# 28. நவராத்திரி

சக்தி வழிபாடு மிகத் தொன்மையானது. சக்தியை நாயகியாகக் கொண்டு நடைபெறுவது நவராத்திரி விழா. துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி என்னும் முப்பெருந்தேவியர்களை நோக்கிப் பூசை, வழிபாடு, விரதம் அனுட்டித்தல், விழாவெடுத்தல் என்பன நவராத்திரி காலங்களில் நிகழ்த்தப்படுகின்றன. சகல உலகங்களையும் படைத்து, அவற்றையெல்லாம் இயக்கிக், காத்து வருகின்ற மாபெருஞ் சக்தியை, மகாசக்தி என்றும் ஆதிபராசக்தி என்றும் நம் முன்னோர்கள் கொண்டு அச் சக்தியைப் பயபக்தியோடு வழிபட்டு வரலாயினர். இது இந்துப் பண்பாடாக வளர்ந்து இன்றும் இந்து மக்களால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. சக்தி தத்துவத்தைச் சாக்தம் என்று அழைக்கின்றனர். சாக்தம் அறுவகைச் சமயங்களுள் ஒன்றாகவும் வகுக்கப்பட்டுள்ளது. சைவம், வைஷ்ணவம், காணாபத்யம், கௌமாரம், சௌரம் என்பன ஏனையவை. இந்துசமயம் கொண்டுள்ள ஆறு உட்பிரிவுகளாகவே அவற்றை ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார். சாக்தம் ஒரு காலத்தில் பாரத தேசம் முழுவதிலும் தனித்துத் தனிநெறியாக விளங்கியது. அதன்சுவடுகள் சிற்சில பகுதிகளில் இன்றும் காணப்படுகின்றன. ஆயினும் பின்னர், மற்றைய நெறிகளுடன் கலந்து, சமய வேறு பாடின்றி சத்தியையும் வழிபாடு செய்தல் முறை ஏற்பட்டு விட்டது. சிவனின் தேவியாகவும்; விஷ்ணுவின் சகோதரியாகவும்; விநாயகன், முருகன் ஆகியோரின் தாயாகவும் பராசக்தி விளங்கும்போது வைதீக சமயங்களுக்கிடையே பேதம் இருக்கவேண்டிய அவசியம் இல்லாமற் போய்விட்டது. தற்காலத்தில் புறச் சமயிகளும் கலந்து கொள்ளுமளவிற்கு நவராத்திரி விழா தேசியவிழாவாகி வருகிறது. கோயில்கள், வீடுகள், பொதுமன்றங்கள், பாடசாலைகள், அலுவலங்கள், வேலைத் தலங்கள், கலாநிலையங்கள் போன்ற பல்வேறு இடங்களிலும் இன, மத, மொழி வேறுபாடின்றி நவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. நாட்டின் பல்லின, பலமொழி, பல்சமய மக்களிடையே ஐக்கியத்தையும், தேசிய ஒருமைப்பாட்டி னையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தக்கூடிய சிறந்த ஊடகமாக, நம் நாட்டில் நவராத்திரி விழா அமைவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

சக்தி என்றாலே ஆற்றல், வல்லமை, வலு, உந்துவிசை என்று தான் பொருள் கொள்கின்றோம். இந்த வகையில் நோக்கும்போது, சக்தி யின்றேல் எவருக்குமே வாழ்வில்லை. இயக்கமில்லை என்ற

நிலை வந்துவிடுகிறது. சக்தியை வேண்டி நிற்பவர்கள் இவர்கள்; சக்தியை வேண்டி நில்லாதவர் மற்றையோர் என்று குறிப்பிடுவதற்கில்லை. எல்லோருக்கும் சக்தி வேண்டியதே என்பதே உண்மைநிலை. இந்துமக்கள், எல்லா வகைத் தோற்றத்திற்கும், இயக்கத்திற்கும், அவற்றின் வாழ்விற்கும் ஆதாரமாகவும், அடிப்படையாகவும் அமைந்துள்ள மகாசக்திக்கு, தெய்வ வடிவம் கொடுத்து, மிக உயர்ந்த நிலையினை வழங்கி, விழாவெடுத்து, வழிபாடு செய்வதில் மனத்திருப்தி பெற்று வருகின்றனர். நவராத்திரி விழாவும் மகாசக்தி யைப் பல்வேறு தெய்வ வடிவங்களில் கண்டு களித்து, வணங்கி வழிபட்டு, அழகு அலங்காரங்கள் செய்து, பக்தி செலுத்தி, கலைகளைச் சமர்ப்பித்து ஆராதிப்பதாகவே அமைகின்றது. இத் தெய்வீக விழாக்களையும், சடங்கு சம்பிரதாயங்களையும், பக்தியும் அழகும் சொட்டும் வண்ணம், பெருஞ்செலவு செய்து உலகியல் கண்ணோட்டத்தில் செய்து பார்ப்பதில் எத்துணை ஆனந்தமும் மனநிறைவும் அடைகின்றார்கள் என்பது அதில் ஈடுபாடு கொண்டு திளைத்தவர்களுக்குத்தான் புரியும். அகிலாண்ட நாயகியாகிய அம்பிகை விருப்பு வெறுப்பு அற்றவள்; அளவிட முடியாதவள்; ஆத்மாவாக இருப்பவள்; முதற் காரணமான சக்தி; சகல பிருமாண்டங்களையும் ஈன்ற தாய்; கருணைக்கடல்; ஞான உறவினள், பிரும்மானந்த வடிவினள், அத்தகைய சிறப்புக்களை உடைய அன்னையை, மூவுலகங்காப்பவளை, அபிராமவல்லியை, அண்டமெலாம் பூத்தாளை, பரமாஸ்வரியை புவன ஈஸ்வரியை, தாங்கள் பணிந்து வழிபடுவதும், விழாக்கள் எடுப்பதும் நமது மகிழ்ச்சிக்காவும் உய்விற்காகவுமே ஆகும்.

உலக மாதாவாகிய அம்பிகையின் கண்களின் அசைவில் தான் காலங்கள் தோன்றி இயங்குகின்றன, என்கிறார் ஆதிசங்கரர். ஈரேழு புவனங்களையும், எண்ணற்ற உயிரினங்களையும், நான்கு மறைகளையும், சகல கலைகளையும் தன்னுள் அடக்கி வைத்திருப்பவன் சிவன். அத்தகைய அரன், தேவி பாகத்தினுள் அடக்கம் அப்படியாயின் அம்பிகையின் அருமை பெருமைகளை வார்த்தைகளில் வடிக்கவும் முடியுமா?

மனிதர்களுக்கு இயல்பாகவே ஒரு வேட்கை இருந்து வருகிறது. அது என்னவெனில், சகல வல்லமைகளும் பொருந்திய கடவுளர்களை, உலகியல் கண்ணோட்டத்தில் வைத்து, அவர்களுக்குப் பிறந்த தினம், பூப்பு நீராட்டல், திருமணம், மற்றும் பல்வேறு சடங்குகள்,

விழாக்கள் ஆகியவற்றை மனிதர்களுக்குச் செய்யுமாப்போல, நிகழ்த்திப் பார்க்க வேண்டும் என்பதேயாகும். மேலும், உலகியல் விடயங்கள் ஒவ்வொன்றிற்கும் பொறுப்பாகவும்; அதிபதிகளாகவும், தெய்வங்களை நியமிக்கும் பாங்கும் மக்களிடையே இருந்து வந்துள்ளது. இந்த வகையிலேயே வீரத்திற்குத் துர்க்கையையும், செல்வத்திற்கு இலக்குமியையும், கல்விக்குச் சரஸ்வதியையும் பொறுப்பாளர்களாகவும் அதிபதிகளாகவும் கொள்கின்றனர். இம்மூவரும் ஆதிபராசக்தியின் அம்சங்களாகவே போற்றப் படுகின்றனர். நவராத்திரி விழாவின் போது, துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களுக்கு, முறையே முதல் மூன்று நாட்களும், நடு மூன்று நாட்களும் இறுதி மூன்று நாட்களும் விழா எடுக்கின்றனர். பக்தியுடன், அழகு அலங்காரங்கள் கொலுவைத்தல், கலைநிகழ்ச்சிகள், சுவையான உணவுகள் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. இவற்றிற்காகப் பணம், பொருள், காலம், சக்தி என்பன செலவு செய்யப்படுகின்றன. இவற்றை வீண் செயல்கள் என்றோ, கேளிக்கைகள், களியாட்டங்கள் என்றோ கூறுவதற்கில்லை. விளங்கிக் கொள்ள முடியாத இறைவனின் தத்துவங்களுக்கு, மனிதர்கள் தம்மால் இயன்ற வரைக்கும், அவற்றை உருவகப்படுத்தி தமது அறிவிற் கெட்டிய வகையில், உலகியல் பார்வையில் விளக்கங்களை காண முயலும் கருமங்களாகவே அவை உள்ளன. மேலும் இவற்றிற்குரிய பிரதிபலன்களை இவற்றை நடத்துபவர்கள் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். அம்பிகையின் கடைக்கண் பார்வை மட்டும் கிடைத்து விட்டாலே சகல ஐசுவரியங்களும் பெறப்பட்டு விடும் எனும் அசையாத நம்பிக்கையும் மக்களிடம் நன்கு வேரூன்றியுள்ளது. மக்கள் ஒருவித இனம் புரியாத சுகத்தையும், மனநிறைவையும் அடைகிறார்கள் என்பதில் ஐயமில்லை. சிற்றின்ப சுகமாக இருப்பினும், மனிதன் ஈற்றில் அடைய விரும்பும் பேரின்ப சுகத்திற்கு அவை வழி வகுக்கின்றன. எனவே நவராத்திரி விழாக்கள், மக்கள் மனங்களைப் பண்படுத்தி, வாழ்க்கையை நம்பிக்கையோடு எதிர் கொள்ளச் செய்வதற்கும், ''மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே'' என்ற நிலைக்கு அவர்களை இட்டுச் செல்வதற்கும்; மண்ணில் தெய்வங்களின் அருள் பெற்று நல்ல வண்ணம் வாழ முடியும் என்ற நம்பிக்கை ஒளியை மக்கள் பெற்றுக் கொள்ளச் செய்வதற்கும் பெரிதும் உதவுகின்றன. இந்த முறையில் இந்துப் பண்பாடு, இந்து கலாசாரம் என்பன பன்னெடுங்காலமாக வளர்ச்சி பெற்றும், மக்களை வாழ்வித்தும் வந்துள்ளமை

நோக்கற்பாலது. எமது காலத்திலும், இத்தகைய இந்துப் பண்பாடு போற்றி வளர்க்கப்பட வேண்டியதும், பேணப்பட்டு அடுத்த சந்ததியினருக்கு வழங்கப்பட வேண்டியதும் நமது கடமையாகும். பாடசாலைகளில் நவராத்திரி விழாவினைக் கொண்டாடுவதன் மூலம் இக்குறிக்கோளை நன்கு அடைய முடியும். இந்துப் பண்பாடு, இந்து சமய விழுமியங்கள் ஆகியவற்றை இளவயதிலிருந்தே மாணவர்களிடம் வளர்க்கும் பொறுப்பினைப் பாட சாலைகள் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம். இன்றைய அவசர உலகில், குடும்பமோ ஏனைய சமூக நிறுவனங்களோ இப் பொறுப்பினை ஏற்கக்கூடிய நிலையில் இருப்பதாகப் பெரும்பாலும் தோன்றவில்லை.

ஆண்டு தோறும் புரட்டாதி மாதத்தில் வருகின்ற அமாவாசையை அடுத்து முதலாவது நாள் பிரதமை தொடக்கம் நவமி ஈறாக உள்ள ஒன்பது நாட்கள் நவராத்திரி காலம் ஆகும். பத்தாம் நாள் தசமித்திதி, விஜய தசமி எனப்படும். விரதம் அனுட்டிப்பவர்கள் நவராத்திரி தொடங்குவதற்கு முதல் நாள் அமாவாசையன்று ஒரு நேரம் மட்டும் உணவுண்டு. தொடங்கிய நாளிலிருந்து எட்டு நாட்கள், பழம் அல்லது இளநீர் அல்லது பால் இரவில் அருந்தி மகா நவமியன்று முழுநாளும் உபவாசம் இருந்து பத்தம் நாள் விஜயதசமியிலன்று உணவு உட்கொண்டு பாராயணம் செய்வர். இவ்வாறு மேற்கொள்ள இயலாதவர் கள் ஒவ்வொரு நாளும் ஒரு நேர உணவுண்டு, நவமியில் உபவாசம் இருந்து மறுநாள் தசமியில் உணவுட்கொண்டு விரதத்தை நிறைவு செய்வர். குறிப்பாகக் கல்வி கற்கின்ற மாணவர்கள் இவ்விரதத்தை அனுட்டிப்பதால் நல்ல பயனை அடைவர். விரத நாட்களில் அகந் தூய்மை, புறத்தூய்மையுடையவராய், கடவுள் சிந்தையுடன் வாழப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். தூய எண்ணங்கள், பண்பான பேச்சு, நற்செய்கைகள் மூலம் தம்மை ஒரு சிறந்த மானுடன் ஆக்கிக் கொள்வது விரதத்தின் நோக்கம்.

வீடுகளிலும் நவராத்திரி விழாக் கொண்டாடப்படுகிறது. ஒன்பது கன்னிப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு நாளுக்கு ஒருவராக அவர்களை நீராட்டி, புத்தாடை புனைந்து, மாலை அணிந்து; வாசனைப் பொருட்கள், மற்றும் கண்ணாடி, குங்குமம், மஞ்சள், சந்தனம் முதலிய மங்கலப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கி வழிபாடு செய்யும் வழக்கமும் உண்டு. இவர்கள் இரண்டுக்கும் பத்துக்கும் இடைப்பட்ட வயதினராக இருப்பர்.

இன்னொரு முக்கியமான அம்சம் நவராத்திரிக் கொலு வைத்தல் ஆகும். இது ஓர் அழகு அம்சம். நவராத்திரி விழாவில் அழகு ஆராதிக்கப்படுகிறது. எல்லாமே ஒழுங்காக இருக்கும்போது, அங்கு அழகு மிளிர்கிறது. பேரழகும் பேரெழிலுமாக காட்சி தருகின்ற அம்பிக்கையைக் கொலுபீடத்தின் நடுவில்வைத்து, சூழவும் அழகுப் பொம்மைகளையும், தெய்வச் சிலைகளையும மற்றும பொருட் களையும் ஒழுங்காக அடுக்கி வைத்து, அழகு செய்து, வழிபாடு செய்வர். மாலை வேளையில் அண்டை அயலவர்களையும் அழைத்து; அவல், கடலை, பலகாரங்கள், சுவை உணவுகள், பழங்கள் ஆகியவற்றை அம்பாளுக்கு நிவேதித்து; ஆடல் பாடல் நிகழ்த்தி வழிபடுவர்.

கிருஷ்ணன், நவராத்திரியின் முதல் நாள், கைடவன், மது என்னும் இரு அசுரர்களைக் கொன்றான். அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டி வைத்தமையைக் குறிப்பதாக நவராத்திரி நோன்பும், அதன் நினைவாகக் கொலுவில் பொம்மைகளை வைத்து அழகு செய்வதும் நடைபெறுவதாகக் கூறுவர்.

நவராத்திரி என்றும், தேவி பூசை என்றும், வாணி விழா என்றும், ஆயுத பூசை என்றும், மகா நவமி நோன்பு என்றும் பற்பல பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. நவராத்திரி இறுதி நாளன்று புத்தகங்கள், பென்சில் பேனாக்கள், வீணை முதலிய இசைக்கருவிகள், மற்றும் கலையோடு தொடர்பான பொருட்கள் யாவற்றையும் பூசையில் வைத்து சரஸ்வதியை வழிபடுவர். அடுத்த நாள், தசமியன்று காலையில் இவற்றை எடுத்துப் படித்தும், எழுதியும், இசைக்கருவிகளை மீட்டியும் நாள் வேலையைத் தொடங்கும் வழக்கமும் இருந்து வருகிறது. விஜயதசமியிலன்று பிள்ளைகளுக்கு ஏடு எழுதுதல் அல்லது வித்தியாரம்பரம் செய்து வைக்கப்படுகிறது. இதை ஒரு சடங்காகவே அன்று நிறைவேற்றுவர். நவராத்திரி காலங்களில் அம்பாளைக் கும்பத்தில் பூஜிப்பர். பத்தாம் நாள் தசமியில் அன்று கும்பத்தை எடுத்து அதனுள் உள்ள நீரை ஓர் புனித இடத்தில் சேர்ப்பர். இதனைக் கும்பச் சரிவு என்பர். நவதானியங்கள் விதைக்கப்பட்டு, அதன் மேலேயே கும்பத்தை வைப்பது வழக்கம். நவதானியங்கள் பத்தாம் நாட்காலையில் நன்கு முளைவிட்ட நிலையில் இருக்கும். இம் முளைகள் சூடுவதற்காக வழிபடுபவர் களுக்கு வழங்கப்படும்.

பத்தாம் நாள் மகா நோன்பு முடிவடைகின்றது. இதனை மானம்பு என்று திரித்துக் கூறுவர். கோயில்களில் வன்னி, வாழை வெட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அம்பாள் எழுந்தருளி வீதி வலம் வந்து, வாழை மரம் வெட்டும் வழக்கம் இருந்து வருகிறது. விஜயதசமியில் அம்பு போடுதல் என்று இதனைக் கூறுகின்றனர். மடமையின் உருவான மகிஷாசுரனை அம்பாள் அழித்த, வெற்றித் திருநாளாக விஜயதசமி கொண்டாடப்படுகிறது. அறியாமையை அகற்றிய இந்த நன்நாளில், அறிவை நாடிச் செல்லும் முதல் நிலையாக வித்தியாரம்பம் செய்தல் எத்துணை பொருத்தமான செயல் என்பதும் உணர்த்தற் பாலது.

அன்னையின் துர்க்கை வடிவம் எம்மிடமுள்ள அசுரக் குணங் களையும், விலங்கு மனத்தினையும், அரக்கத் தன்மைகளையும் அகற்றி எம்மைச் சாத்வீகம் நிறைந்த மனிதர்களாக்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்விக்கிறது. துர்க்கை தரும் வீரம், பாவங்களை விலக்கு வதற்கு எமக்கு வேண்டிய துணிவினைத் தருகிறது. மகாலட்சுமி வடிவம் மனித வாழ்வில் ஒழிக்கப்பட வேண்டிய வறுமையை அழிப்பதற்கு செல்வத்தை நமக்கு வழங்கி எம்மை வாழ்விக்கிறது. ஈதல் அறம் என்பதை உணர்ந்து செல்வத்தைப் பெற்று பிறரின் வறுமையையும் போக்கும் போதுதான் அன்னை மகாலெட்சுமி மனம் மகிழ்கிறாள். சரஸ்வதி வடிவம், மனித வாழ்வில் இடம் பெறக்கூடாத அறியாமையை அகற்றி அறிவொளி ஏற்றி மக்களை வாழ்வாங்கு வாழ வழிவகுக்கிறது.

வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் மனித வாழ்க்கைக்கு முக்கியமானவை. வாழ்க்கையில் இம்மூன்றையும் அடைவது அதன் குறிக்கோள். இம்மூன்றினதும் ஒருங்கிணைந்த வளர்ச்சி, மனிதனில் நிகழும் போதுதான் அவன் பூரணத்துவம் பெற்ற முழு மனிதனாக, நிறை மனிதனாக, இன்னும் சொல்லப்போனால் ஆளுமை நிறைந்த மனிதனாக ஆக்கம் பெறுகின்றான். வீரம், செல்வம், கல்வி ஆகிய வற்றின் முழுமையான வளர்ச்சி மாத்திரம் ஒருவனைச் செம்மையான நிறைமனிதன் ஆக்கிவிட மாட்டா என்பது இந்து சமயக் கொள்கை. வீரத்தின் பெருவளர்ச்சியும், செல்வத்தின் பெரு விருத்தியும், கல்வியின் மிகைப் பெருக்கமும் விலங்கு இயல்பு கொண்ட மனிதன் ஒருவனில் ஏற்படுமாக இருந்தால், விளைவு நன்மையாக இருக்கமாட்டாது; மாறாக மனித குல நாசத்திற்கே வழி வகுப்பதாக அமையும். எனவேதான், இந்துசமயம், தெய்வங்களோ வீரம்,

செல்வம், கல்வி ஆகிய மூன்றையும் பொருத்திக் காட்டுகிறது. வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றின் வளர்ச்சியும், பெருக்கமும், தெய்வத் திருவருளினால் கிடைக்கப் பெற்றமையை மனிதர்கள் உணர்வதாலும், அதற்காகத் தெய்வங்களுக்கு நன்றி தெரிவிப்பதாலும் ஏற்படுகின்ற நன்மை யாதெனில் வீரத்தையும், செல்வத்தையும், கல்வியையும் பிரயோகிக்கும் போதும் பயன்படுத்தும்போதும், இறை சிந்தனை யுடன் அவர்கள் செய்வதேயாகும். இறைவனை நினைத்து ஆற்றப் படும் கருமங்கள் நிச்சயம் கை கூடுவதோடு, நல்ல விளைவுகளையும் தருகின்றன. எனவேதான், வீரம், செல்வம், கல்வி என்பவற்றின் வளர்ச்சி, இறைசிந்தனையின் அடிப்படையில், திருவருட் பேறாக, தூய்மையின் வடிவமாக மனிதர்களில் ஏற்பட வேண்டுமென்று இந்து சமயம் வலியுறுத்துகிறது. இந்த வகையில் எழுந்தது தான் நவராத்திரி வழிபாடும், விரதமும், விழாவும் ஆகும்.

# 29. தீபாவளிப் பண்டிகை

இந்துசமயத்தவர் பல பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். பண்டிகைகள் கொண்டாடப் படுவதினால், வாழ்க்கையில் ஒரு வகை மகிழ்ச்சியும், தெம்பும் உற்சாகமும் ஏற்படுகின்றன. ஓய்வும் கிடைக்கின்றது. ஓய்வு காலத்தை நற்சிந்தனை, நற்செயல்களில் கழிக்கவும் உதவுகின்றன. வாழ்க்கையில் சில மணி நேரங்களுக்காவது, துன்பங்கள் துயரங்களை மறந்து குதூகலிக்கப் பண்டிகைகள் வாய்ப்பளிக்கின்றன. ஆன்மிகச் சிந்தனைகள், பண்புகள் மனிதரில் மலர்ச்சி பெறுவதற்கு பண்டிகைகள் தளம் அமைக்கின்றன.

இந்துப் பண்டிகைகள், ஆன்மிக தத்துவ அடிப்படைகளில் எழுவன. ஆன்மிக தத்துவத்தை ஆதாரமாகக் கொண்டு, புராணங்கள் புனையப்படுகின்றன. புராணக் கதைகள், தேவர்கள் அசுரர்கள் ஆகியோருக் கிடையிலான போராட்டங்களை மையமாகக் கொண்டவை. இவை முறையே நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டங்களேயாகும். எத்துணை கஷ்டங்கள் நேரினும் இறுதியில், தீமைகள் அழியும், நன்மைகள் வெல்லும் எனும் உண்மை நிலைநாட்டப் பெறும். ஒவ்வொரு பண்டிகையும் தோன்றுவதற்குக் காரணமான அடிப்படை உண்மையும் அதனை எளிதில் விளக்குவதற்குத் தோற்றுவிக்கப்பட்ட புராண வரலாறும் நம்முன்னோரினால் நமக்குத் தரப்பட்டுள்ளன.

தீபாவளிப் பண்டிகை- புராணக் கதைகள்

தீவாவளிப் பண்டிகை, இந்து மக்களினால் கொண்டாடப்படுகின்ற குடும்ப ஆன்மிக விழாவாகும். சமூக விழாவாகவும் கொள்ளலாம். இந்தியா முழுவதிலும் வாழுகின்ற இந்துமக்கள், ஏன் இலங்கை போன்ற கடல்கடந்த நாடுகளில் வாழுகின்ற இந்துமக்களும் சமய, சமூக, கலாசார ஒருமைப்பாட்டினை உணர்த்தும் முறையில் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

தீபாவளி என்பதற்குத் தீபங்களின் வரிசை என்று பொருள் கொள்வர். தீபங்களை ஏற்றி ஓர் ஒழுங்கு வரிசையில் வைத்து, அவற்றைச் சூழ்ந்து குடும்பத்தினர் சுற்றத்தினர், நண்பர்கள் அமர்ந்து தொல்லைகள் நீங்க சூழ்கலி அகல தெய்வவழிபாடு செய்தலைத் தீபாவளி குறிக்கின்றது. தீபம், ஒளியைத் தருவது, இருளை நீக்குவது;

அதனால் தீபஒளி வழிபாட்டிற்குரியதாயிற்று. ஒளிவளர் விளக்கு செல்வத்தைத் தருதலால் விளக்கு, மகாலட்சுமி எனக் கொள்ளப்படுகிறது.

அக்கினியில் இறைவனைக் கண்ட மக்கள் விளக்கிலும் கண்டனர். திருவிளக்குப் பூசை வழிபாடு தற்காலத்தில் பிரபல்யம் பெற்று வருதலை நாம் அறிவோம்.

''உள்ளொளி''யும் ஏற்றப்படுதல் வேண்டும். அப்போதுதான் ''அளப்பிலா ஆனந்தம்'' கிட்டும். ''உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகில் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்கிறார் பாரதியார். வாழ்வில் முழுமையான ஒளி புலர்வதற்கு உள்ளத்திலும் வாக்கிலும் ஒளியேற்றப்படுதல் அவசியம். தீபாவளி இதனை உணர்த்துகின்றது.

வட இந்திய மக்கள் தீபாவளி தொடர்பாகக் கூறும் கதை பின்வருமாறு அமைகின்றது.

இராமபிரான் வனவாசத்தை முடித்து, அதன்பின் இராவண சங்காரத்தையும் நிகழ்த்தி வெற்றித் திருமகனாக சீதாபிராட்டியுடன் அயோத்திக்குத் திரும்பிய திருநாளில், மக்கள் தத்தம் இல்லங்கள் தோறும் தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அதன் பின், ஆண்டுதோறும் அத்திருநாளை நினைவு கூர்ந்து தீபாவளியைக் கொண்டாடி வருகின்றனர். வட இந்தியமக்கள் இவ்வாறு தீபாவளியின் தோற்றத்தைக் குறிப்பிடுகின்றனர்.

தென்னிந்திய மக்கள் தீபாவளி தொடர்பாக நரகாசுரன் கதையைக் கூறுகின்றனர். மகாவிஷ்ணுவின் அவதாரங்களுள் வராக (பன்றி) அவதாரமும் ஒன்று. அப்போது பூமாதேவியை மணந்து பெற்ற பிள்ளை நரகாசுரன் ஆகும்.

நரகாசுரன் இறைவனை நோக்கித் தவஞ்செய்து வரங்கள் பலவற்றைப் பெற்றான். வரங்கள் அவனுக்கு வல்லமைகளை வழங்கின. வல்லமைகள் அகங்காரத்தையும் ஆணவத்தையும வாரி இறைத்தன. நல்லவர்கள் சிறைப்படுத்தப்பட்டனர். வரங்கள் தந்த இறைவனையும மறந்தான். செய்நன்றிமறத்தல் அசுரக்குணம். ஆலயங்களில் பூசைகள் ஆராதனைகள், விழாக்கள் நடைபெறுவதற்குத் தடைவிதித்தான். ஏன், விளக்குகள் தன்னிலும் ஏற்றப்படக்கூடாது என்று கட்டளை பிறப்பித்தான். எங்கும் ஒரே இருள்மயம். மக்கள்

படும் துயர்கள் சொல்லுந்தரமல்ல.

நரகாசுரன் கொடுமையின் வடிவமாக-தீமையின் ஒட்டு மொத்தமாக இருந்தான். உலகத்தவருக்குத் துன்பங்களை இழைத்து வந்தான்.

மகாவிஷ்ணு கிருஷ்ணாவதாரம் எடுத்தபோது, நரகாசுரனின் அட்டகாசம் அளவைக் கடந்துவிட்டது. மக்கள் துவாரகைக்குச் சென்று பகவானிடம் முறையிட்டனர். மக்களைப் பாதுகாக்கக் கண்ணபிரான் திருவுளங்கொண்டார்

நரகாசுரனைப் பகற்பொழுதிலோ, இரவுவேளையிலோ கொல்ல முடியாது. அவன் பெற்ற வரம் அத்தகையது. அவன் மாயவித்தை களிலும் சிறந்தவன். இம்மாயங்கள், மாயக் கண்ணனிடம் பலிக்குமா, என்ன? கிருஷ்ணபகவான், இரவும் பகலுமற்ற ஒரு குறிப்பிட்ட வேளையில், சத்தியபாமா தேரைச் செலுத்த, போருக்கு புறப்பட்டுச் சென்று நரகாசுரனைச் சங்காரம் செய்தார்.

நரகாசுரன் இறக்கும் தருணத்தில், ஞானோதயம் ஏற்பட்டது. அதுவும் பகவானின் மறக்கருணையே. நரகாசுரன், தான் மக்களுக்கு இழைத்த கொடுமைகளையும், அநீதிகளையும் எண்ணி மனம் வருந்தினான். தனது தவறுகளை உணர்ந்து கொண்டான்.

கடைசி நேரத்தில் கண்ணபிரானை வணங்கி, பலவாறாகத் துதித்து, பகவானிடம் ஒரு வரம் கேட்டான்.

''தந்தையே, என் வாழ்நாளில் நான் செய்த குற்றங்களுக்கு இந்தத் தண்டனை சரியானதே என்பதை உணர்ந்து கொண்டேன். மரணத்தை ஏற்கச் சித்தமாயுள்ளேன். இந்த நேரத்தில் எனது ஒரேயொரு வேண்டுதலைத் தந்து அருள வேண்டும்'' என்று இரந்து நின்றான்.

நரகாசுரனுடைய கோரிக்கை என்ன என்று கிருஷ்ணபகவான் கேட்டார்.

''நான், தவறுகளை உணர்ந்து மரணத்தைத் தழுவிய இந்த நாளில், உலகத்ததவர் என்னை நினைவு கொள்ளும் வகையில் வரமொன்று அருள வேண்டும்'' என நரகாசுரன் வேண்டினான்

கிருஷ்ண பகவானும் நரகாசுரனை நோக்கி, ''நீ இறக்கும் சதுர்த்தசி நாள், ஆண்டு தோறும் நரக சதுர்த்தசி என்று அழைக்கப் பெறும். அதனால் உன் நினைவு நிலைபெறும். இத்தினத்தில் அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்பவர் களுக்குக் கங்கையில் ஸ்நானஞ் செய்தால் கிடைக்கக் கூடிய புண்ணிய பலனை அளிக்கிறேன். இவ்வாறு எண்ணெய் ஸ்நானம் செய்தபின் புத்தாடை அணிந்து என்னை வழிபாடு செய்பவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்க அருள்புரிவேன். இந்த வகையில், உன் நினைவினை ஆண்டுக் கொருதரம் மக்கள் கொண்டாடுவர்'' என்று கூறி, அவன் வேண்டிய வரத்தை வழங்கினார்.

நரகாசுரனும் திருப்தியுடன் உயிர்நீத்தான்.

அதே வேளை, நரகாசுரனின் தாயாகிய பூமாதேவியும் கிருஷ்ண பகவானிடம் ஒரு வரம் வேண்டினாள். தனது மகன் இறந்த இத் தினத்தில், ஆண்டுதோறும் மக்கள் ஆயிரம் விளக்குகள் ஏற்ற வேண்டும் என்பதே அந்த வரம். அதனையும் பகவான் வழங்கினார்.

நரகாசுரன் பகவானுடன் இணைந்து விட்டான். அவனின் அசுரக் குணங்களும் அரக்கப் பண்புகளும் அழிக்கப்பட்டன. தேவர்கள் மகிழ்ச்சி யடைந்தனர். மனிதர்கள் சிறைமீண்டனர். வெற்றிக் களிப்பினை விளக்குகள் ஏற்றி, பகவானை வணங்கி, இனசன பந்துக்களுடன் கொண்டாடினர். அன்று தொடங்கிய தீபாவளி இன்றும் பண்டிகையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**தீபாவளியின் மகத்துவம்:**

அறியாமை இருள் அகன்றநாள்; அறிவொளி பரந்தநாள்; அசுரத்தன்மைகள் விலகியநாள்; தெய்வீகம் பொங்கியெழுந்த நாள்; அகந்தை ஒழிந்த நாள்; அன்பு மலர்ந்த நாள்; அச்சம் கழிந்தநாள்; அமைதி பிறந்த நாள்; தீயனவெல்லாம் தொலைந்த நாள்; நல்லனயாவும பொலிந்த நாள்- அந்தநாள் தான் தீபாவளித் திருநாள்.

தீபாவளித்தினத்தன்று வைகறையில் துயிலெழுந்து, நல்லெண்ணெய் தலையில் தேய்த்து சிரசு ஸ்நானம் செய்ய வேண்டும். அதன் பின் புத்தாடை அணிந்து இஷ்டதெய்வங்களை வணங்குதல் வேண்டும். தாய், தந்தையர், குரு, மற்றும் பெரியோர்களை வணங்கி அவர்களிடம் நல்லாசிகள் பெறுதல் வேண்டும். இயன்றதான

தருமங்களைச் செய்தல் அடுத்து இடம் பெறும். பின்னர் உற்றார், உறவினர், நண்பர்களுடன் விருந்துண்டு மகிழ்வர்.

புறத்தூய்மையை நீராடிப் பெற்றுக் கொள்ளுதல் போன்று, தீபாவளித் தினத்தில் அகத்தூய்மையையும் பெற்றுக் கொள்ளுதல் இன்றியமையாதது. நல்ல எண்ணங்கள், சிந்தனைகள், உணர்வுகள் என்பனவற்றை நல்லெண்ணெய் ஆகவும், அரப்பாகவும் கொண்டு அழுக்காறு, அவா, கோபம், அகந்தை, செருக்கு, மோகம், மமதை, பொறாமை, சுயநலம் ஆகிய மன அழுக்குகளைத் தேய்த்துக் கழுவி நீக்குதல் வேண்டும்.

புறத்தே ஏற்றப்படும் விளக்குகள் கரிய இருளை அகற்றுகின்றன. அஞ்ஞானம் என்னும் அகஇருளையும் போக்குதல் அவசியம். அதற்கு உண்மையென்ற ஒளியை உள்ளத்தில் ஏற்றுதல் வேண்டும். எமது உள்ளங்களில் அமர்ந்து எம்மை ஆட்டிப் படைக்கும் கொடிய நரகாசுரனை நாம் வெற்றிகொள்ளும் தினம் தீபாவளித் திருநாள். நரகாசுரன் வேறுயாருமன்று; எம்மிடம் உள்ள தீய குணங்கள், கொடிய தன்மைகள் தான் என்பதையும் உணர்வோமாக.

தீபாவளியின் பொருளை அறிந்து கொண்டாடுவதன் மூலம் மனிதர்கள் ஆவோம்.

# 30. கேதார கௌரி விரதம்

சக்தி விரதங்களுள் கேதார கௌரி விரதமும் சிறப்பாகக் கொள்ளப்படுகின்றது. இவ்விரதம் புரட்டாதி மாதப் பூர்வபக்க அட்டமியில் ஆரம்பித்து ஐப்பசி மாதத்து அபரபக்கச் சதுர்த்தசியில் நிறைவு பெறுகின்றது. இருபத்தொரு நாட்கள் நீடிக்கும் மகத்தான விரதம் இதுவாகும். இருபத்தொரு நாட்களும் இவ்விரதத்தை அனுட்டிக்க இயலாதவர்கள் சதுர்த்தசித்தினத்தில் அன்று ஆகிலும் கேதாரநாதரைக் குறித்து இவ்விரதத்தை மேற்கொள்ளலாம். உலக மாதா, சிவபெருமானை நோக்கிச் சிவபூசை செய்து இவ்விரதத்தை நோற்றுப் பெரும்பேறு பெற்றாள் என்றால் கேதார கௌரி விரதம் எத்துணை மகிமை வாய்ந்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

விரதம் தொடங்கும் முதல் நாளன்று விரதிகள் கோயிலுக்குச் சென்று வெற்றிலை, பாக்கு, பழம் அதிரசம் என்பவற்றில் ஒவ்வொன்றைப் படைத்து நைவேதனம் செய்து சுவாமி வழிபாடு செய்வர். முதலாம் நாள் கேதார கௌரி நோன்புக் கயிற்றில் ஒரு முடிச்சுப் போடப்படும். தொடர்ந்து வரும் ஒவ்வொரு நாளும் குறித்த நைவேத்திய வகை, ஒவ்வொன்றாக அதிகரிக்கப்படும். நோன்பு நூலில் போடப்படும் முடிச்சுக்களும் தினசரி ஒவ்வொன்றாகக் கூட்டப்படும். நிறைவுநாளான இருபத்தோராம் நாள், பழம் பாக்கு, வெற்றிலை, மஞ்சள், அதிரசம் ஒவ்வொன்றிலும் இருபத்தொன்று வீதம் வைத்து நைவேதனம் செய்வர். நோன்பு நூலிலும் இருபத்தொரு முடிச்சுக்கள் காணப்படும். ஆடவர் வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் நோன்பு நூலைத் தரித்துக் கொள்வர்.

இருபத்தொரு நாட்களும் விரதம் அனுட்டிப்பவர்கள், முதல் இருபது நாட்களும் சூரிய அஸ்தமனத்தின் பின்னர் ஒரு நேர உணவு உட்கொண்டு, இறுதிநாளாகிய சதுர்த்தசியில் உபவாசம் இருந்து, மறுநாள் உதயத்தில் பாராயணம் பண்ணல் வேண்டும். உபவாசம் என்பது உணவு உண்ணாமல்,ஐம்புலன்களையும் அடக்கி இறை சிந்தனையோடு பொழுதைக் கழித்தல் ஆகும்.

விரத நாட்களில் ஆலயங்களுக்குச் சென்று, சிவாச்சாரியார்கள் இலிங்கபூசை தேவிபூசை, வசந்த பாராயணம், திருமுறை பாராயணம், ஓதி தூப தீபம் காட்டுவதை விரதம் அனுட்டிப்பவர்கள் நேரில்

தரிசிப்பதே அதிசிறப்பாகும். தத்தம் வீடுகளில் இருந்து அனுட்டிப்பவர்கள் புனிதமாகச் சுவாமி அறையில் சிவன் சக்தி தோத்திரங்களை இசைத்து, பூவும் நீரும் கொண்டு பக்தி பூர்வமாக அர்ச்சித்து வழிபடலாம். அம்மியையும் குழவியையும் நீரினால் கழுவி, அலங்கரித்து, மலர்கள் சாத்தி, ஆவாகனம் செய்து தூபதீபம் காட்டி வழிபடுகின்ற வழக்கமும் உண்டு. அர்ச்சனையை வில்வ இலைகளால் செய்வது உத்தமம்.

சர்வமும் சிவம் என்னும் கொள்கையுடையவர் பிருங்கி என்னும் நாமத்தையுடைய முனிவர். அம்முனிவர் திருக்கயிலாயத்திலே சிவ பிரானை வணங்கச் சென்றிருந்தவேளை சிவன் தனித்திருக்காது; பார்வதி பரமேசுவரராகச் சேர்ந்திருக்கக் காணப்பட்டார். சிவனை யன்றி, வேறெவரையும் வணங்கியறியாத பிருங்கி முனிவர் வண்டுரு எடுத்து, பரமேஸ்வரரை மாத்திரம் வலம் வந்து பிரதட்சணம் செய்தார். அம்மையைத் தவிர்த்து விட்டு விட்டார். முப்பத்துமுக்கோடி தேவர் களும் அம்மை அப்பர் இருவரையும் வலம் வந்து வணங்கி நிற்க, பிருங்கிமுனிவர் சிவனை மாத்திரம் வலம் வந்து வணங்கி நின்றமையும், உலகமாதாவாகிய பார்வதி தேவியைப் புறக்கணித் தமையும், அம்மையை ஆத்திரங்கொள்ளச் செய்தன. அதனால் பார்வதி தேவி பிருங்கு முனிவரின் சக்தியை அகற்றி, அவரை ஆற்றல் அற்றவர் ஆக்கி விட்டார். சத்தியை இழந்த முனிவர் மூர்ச்சையானார். இறைவன் ஊன்றுகோல்கொடுத்து, முனிவர் மூர்ச்சை தெளிந்ததும், அவரை இருப்பிடம் சேர்த்தார்.

பார்வதி தேவியார் இவற்றையெல்லாம் கண்ணுற்று, தாம் வேறு வேறாக அன்றி இறைவனின் இடப்பாகத்தில் ஒரே வடிவில் இருந்தால் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை உணர்ந்து பூலோகம் சென்று, சிவபெருமானின் உடலில் வாமபாகத்தை வேண்டி தவம் இயற்றினார். கௌதம முனிவரின் ஆலோசனைப்படி, உமையம் மையார் சிறந்த விரதமாகிய கேதாரீஸ்வரர் விரதத்தை முறையாக அனுட்டித்தார். பரமசிவன் எழுந்தருளி உமையம்மையைத் தமது வாமபாகத்தில் அமர்த்திக்கொண்டார். இறைவன் அர்த்த நாரீஸ்வரர் ஆயினர். பாதி ஆண், பாதி பெண் ஆக உள்ள சிவமூர்த்தமே, அர்த்த நாரீஸ்வரர் வடிவம் ஆகும். அப்பொழுது இறைவி, இறைவனை நோக்கி ''இவ்விரதத்தை முறைப்படி அனுட்டிப்பவர் நீண்ட ஆயுளையும், சற்புத்திரப் பேற்றையும், சகல செல்வங்களையும், குடும்ப சுகங்களையும் இம்மையில் பெற்று, இறுதியில் தேவரீர்

திருவடித் தாமரைகளையும் அடைவதற்குத் திருவருள் புரிய வேண்டும்'', என வேண்டினார். இறைவனும் அவ்வாறு அனுக்கிரகம் செய்து, தேவியொடு அர்த்தநாரீஸ்வரராகத் திருக்கயிலாயத்திற்கு எழுந்தருளினார்.

பிருங்கி முனிவரும் சிவனும் சக்தியும் ஒன்றென உணர்ந்து, பழைய உருவைப் பெற்றார். சிவமும் சக்தியும் ஒன்றென, உலகத்தவர்க்குக் காட்டவே இத்திருவிளையாடல் நடந்தது. ஆண், பெண் சமத்துவத்திற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. கணவனும் மனைவியும் கருத்தொருமித்து நல்வாழ்வு வாழவேண்டியே கேதார கௌரி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. குடும்பம் சீரோடும், சிறப்போடும்; செழிப்போடும் சுகத்தோடும்; அமைதியுடனும் வாழ, சிவசக்தி வழிபாடு இன்றியமையாதது என்பதை உணர்வோமாக.

# கார்த்திகைத் தீபத்திருநாள்

சப்தரிஷிகளில் மிகச் சிறந்தவராகத் திகழ விரும்பிய நாரத முனிவர், விநாயகப் பெருமானிடம் சென்று அதற்குரிய வழியைக் கூறும்படி விண்ணப்பித்தார். விநாயகப் பெருமான் கார்த்திகை விரதம் அனுட்டித்து முருகக் கடவுளை வழிபட்டு வந்தால் நாரதரின் விருப்பம் நிறைவேறும் என்றார். நாரதமுனிவர் அந்த ஆலோசனையைக் கேட்டு கார்த்திகை விரதமிருந்து முருகவேளை வழிபட்டு, வேண்டும் வரத்தைப் பெற்றார்.

மாதந்தோறும் கார்த்திகை விரத நாள் வருகிறது. கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளைத் திருக்கார்த்திகை என்பர். முதல் நாள், ரோகிணி நட்சத்திரத்தன்று பகல் மட்டும் ஒரு பொழுதுஉணவு உண்டு, கார்த்திகையன்று அதிகாலையில் நீராடி, தூயவராய், தூயசிந்தனை யோடு இறைவழிபாடுகள் செய்து, இறைவன் புராணம் படித்துவிட்டு, நீர் மாத்திரம் அருந்தி, அன்றிரவு முழுவதும் தியானம் புரிந்து கொண்டிருந்து, மறுநாள் காலை வழிபாடுகளை முடித்துவிட்டு இறைவன் அடியார்களுடன் சேர்ந்து பஜனை செய்தல், மூலம் கார்த்திகை விரதம் நிறைவேற்றப்படுகிறது. இப்படிப் பன்னிரண்டு ஆண்டுகள் விரதமிருந்து முருகனைப் பிரார்த்தனை செய்வதால் வேண்டும் வரங்களைப் பெறலாம். திருக்கார்த்திகைத் தினத்தன்று முருகன் ஆலயங்களில் தீப விழா இடம் பெறுகின்றது. குமாராலய தீபம் என்று இதனை அழைப்பர்.

திருக்கார்த்திகைத் தினத்தன்று, ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் ஜோதி வடிவமாகப் பிரமா, விஷ்ணு ஆகிய இருவருக்கும் சிவபெருமான் காட்சி கொடுத்தருளினார். பிரம்மா, படைத்தல் தொழில் செய்பவர். மண்ணையும் விண்ணையும்; மனிதர்களையும் தேவர்களையும் மற்றும் விலங்குகள், தாவரங்களையும் படைத்தவர் தாம் என்ற முறையில், தானே மேலான பரம்பொருள் என்று கூறிப் பிரம்மா செருக்குற்றார். சகலவற்றையும் காத்து வருவதால், காத்தல் புரிபவராகிய விஷ்ணு, தான்தான் பரம்பொருள் என்று அகந்தை கொண்டார். மேலும் பிரம்மாவை நோக்கி, ''உன்னைப் பெற்ற தாயும் தந்தையும் நானே; என் உந்திக் கமலத்திலிருந்து உதித்தவன் நீ. உன் குருவும் நானே, கடவுளும் நானே. அப்படியிருக்க நீ எப்படி என்னிலும் பெரியவன் என்று சொல்ல முடியும்'' என்று விஷ்ணு

வெகுண்டெழுந்தார். பிரம்மா, விஷ்ணு இருவருக்குமிடையில், யார் பெரியவன் என்று எழுந்த வாக்குவாதம், பின்னர் போருக்கு இட்டுச் சென்றது. போர், பல ஆண்டுகள் தொடர்ந்து நடந்தன. அதனால் உலகத்தவர்களும், விண்ணவர்களும், பெரிதும் துன்புற்றனர். போர் ஒழிந்தபாடில்லை. ஈற்றில் சிவப் பரம்பொருள் ஒரு பெரும் ஜோதிப் பிழம்பாக அவர்கள்முன் தோன்றியது. ''உங்கள் போரை நிறுத்துங்கள். இச் ஜோதியின் அடி, முடியைத் தேடுங்கள்'' என்றொரு பேரொலி வானில் கேட்டது. போரை நிறுத்தினார்கள். அடியையோ, முடியையோ யார் முதலில். காண்கிறாரோ, அவரே பெரியர் என்று முடிவு செய்தனர். பிரம்மா, முடிகாண, அன்னமாகி விண்ணில் மேலே பறந்து சென்றார். விஷ்ணு பன்றி வடிவங்கொண்டு, அடி காண வேண்டி, கொம்பால் நிலத்தைக் கிண்டிக் கொண்டு கீழே சென்றார். திருமால் ஆயிரம் ஆண்டுகள் அடியைத் தேடினார். காண முடியவில்லை. பிரம்மாவும் முடியைத் தேடிக் காணமுடியவில்லை. இருவரும் களைத்துச் சோர்ந்து மீண்டார்கள். தம் இருவருக்கும் மேலே ஒருவன் இருக்கிறான். அவனே சிவன்; முழுமுதற்கடவுள்; எல்லோரிலும் பெரியன் என்று பிரம்மாவும் விட்டுணுவும் ஏற்றுக் கொண்டு சிவனைப் போற்றித் துதித்தனர். தாம் கண்ட, காண்டற்கரிய இச்ஜோதிக் காட்சியை, எல்லோரும் கண்டுகளிக்கும்படி காட்டி அருளவேண்டுமென்று சிவபெருமானுக்கு விண்ணப்பிக்க, ''கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தன்று காட்டுவோம்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். திருவண்ணாமலையில் திருப்பெருஞ்சோதியை அத்தினத்தில் தரிசிக்கலாம்.

நாமும் இல்லங்களில், கார்த்திகைப் பௌர்ணமியில் தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்கின்றோம். இதைக் கார்த்திகை விளக்கீடு என்றும் சர்வாலயதீபம் என்றும் அழைக்கின்றோம். ''இல்லக விளக்கது இருள் கெடுப்பது'' என்பது தேவாரம். தீபம் இருளை நீக்கிப் பொருளை விளக்கம் பெறச் செய்கிறது. திருக்கோயில்களிலும் திருவிளக்குகள் ஏற்றிப் பூசைகள் நடைபெறுகின்றன. தீபம் பிரகாசமாக இருக்குமிடத்தில் இலட்சுமி கடாட்சம் உண்டாகும். உள்ளத்திலும் ஒளி ஏற்ற வேண்டும். அப்பொழுதுதான் அறியாமை இருள் அகன்று அறிவு பிரகாசிக்கும். மகாபலிச் சக்கரவர்த்தி முத்தியடைந்த தினத்தைக் குறிப்பதாகவும் கார்த்திகைத் தீபவிழா அமைகின்றது. திருவண்ணாமலையை அக்கினித்தலம் என்று குறிப்பிடுகின்றனர். இங்குள்ளது ஜோதிலிங்கம். ''அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வ்ண்ணம் அறுமே'' என்பது தேவாரம்.

கார்த்திகை மாதம் முழுவதும் மாலையில் விளக்கேற்றி வீட்டு வாயிலில் வைக்கின்ற வழக்கமும் உண்டு. சில இடங்களில் தீபாவளி தொடக்கம், திருக்கார்த்திகைத் தீபவிழா வரை இவ்வாறு மாலையில் அகல்விளக்கு ஏற்றிவைப்பர்.

திருக்கார்த்திகையன்று முருகன் ஆலயங்களில் மாவிளக்கு போட்டு வழிபாடு செய்வர். ஆலயத்தின் முற்புறத்தில், காய்ந்த ஓலை, மட்டை, இலைகளால் பனை வடிவில் கட்டப்பட்ட சொக்கப் பானைக்கு சிவாக்கினி ஏற்றிச் சோதி வடிவாகக் காட்சியளிக்கச் செய்து, சிவபெருமான் சோதிப் பிழம்பாகத் தோன்றிய காட்சியை நினைவு கூர்ந்து தரிசனம் செய்வர்.

சர்வாலய தீபத்தன்று, வீடுகளிலும்; முருகன், விஷ்ணு ஆலயங் களைத் தவிர்ந்த மற்றெல்லா ஆலயங்களிலும் தீபங்கள் ஏற்றி, விழாக் கள் நடைபெறும். குமாராலய தீபத்தன்று முருகன் கோயில்களிலும்; விஷ்ணுவாலய தினத்தன்று முருகன் கோயில்களிலும் தீபத்திருவிழா நிகழும்.

இத் திருக்கார்த்திகைத் தீபத் திருநாளில், எம் எல்லோரது வாழ்விலும் ஒளி ஏற்பட வேண்டும்; சர்வமங்களமும் பொலிய வேண்டும் என்று சோதிவடிவான இறைவனைப் பிரார்த்திப்போமாக.

# 32. மார்கழி நோன்பும் திருவெம்பாவையும்

மார்கழி மாதம் மாதங்கள் பன்னிரண்டினுள்ளும் மிகச் சிறந்தது என நூல்கள் கூறுகின்றன.

தை மாதம் முதல் ஆனி மாதம் வரை ஆறுமாதங்கள் தேவர்களுக்குப் பகற்காலம் என்றும் ஆடி மாதம் முதல்மார்கழி வரையிலான ஆறுமாதங்கள் அவர்களுக்கு இராக்காலம் என்றும் கூறப்படுகிறது. மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறை யாமம் ஆகும். அதிகாலை நேரம் என்றும் கூறலாம். மார்கழி சிறப்புப் பெறுவதற்கு இதுவும் காரணமாகின்றது.

இப்பூவுலகிலுள்ள மக்களாகிய நமக்கு சூரியன் உதிப்பதற்கு முன் ஐந்து நாழிகை காலம் மிகச் சிறப்பான காலப் பிரிவு ஆகும். இதனை வைகறை அல்லது அதிகாலை என்கின்றோம். பிரம்ம முகூர்த்தம் என இவ்வேளை குறிப்பிடப்படுகிறது. பகல் முழுவதும் ஓயாது உழைத்த மக்கள், இரவில் துயின்று அதன் விளைவாக மனம் முதலிய அந்தக் கரணங்களும், புலன்களும் அமைதி பெற்று, அவர்கள் புதுத் தென்புடனும், தெளிவுடனும் தோன்றும் நேரம். மனதை ஒரு வழிப்படுத்துவதற்கும், சிந்திப்பதற்கும், தியானிப்பதற்கும், உண்மை தெளிவதற்கும் உவந்த நேரம். இந்த அதிகாலை நோன்பு இறைவழிபாட்டிற்கு இந்நேரம் மிக மிக ஏற்றது.

மார்கழி, தேவர்களுக்கு விடியற்காலம். எனவே இவ்வுலக மக்களுக்கு மார்கழி மாதத்து விடியற்காலங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்து விளங்குகின்றன. மார்கழி மாதத்தில் அதிகாலையில் துயிலெழுந்து, ஏனையோரையும் துயிலெழுப்பி, கூட்டாகச் சென்று ஆற்றிலும் ஏனைய நீர் நிலைகளிலும் நீராடி, நோன்பு நோற்று, இறைவனை வழிபாடு செய்து உய்வு பெறும் வழக்கம், சைவ மக்களிடையே மிகப் பண்டைய காலந்தொட்டு இருந்து வருகிறது. இதன் காரணமாக மக்களின் வினைமாசுகள் நீங்கப் பெற்றன; அந்தக் கரணங்கள் தூய்மை பெற்றிலங்கின. மார்கழி நோன்பு என்றும் பாவை நோன்பு என்றும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. மார்கழி மாதம் முழுவதும் இந்நோன்பினை அனுட்டிக்க முடியாதவர், மார்கழி மாதத்துப் பூரணை நாளை இறுதியாகக் கொண்டு முன் பத்துநாட்கள்

இதனை அனுட்டிப்பர். இப்பத்து நாட்களையும் திருவெம்பாவைக் காலம் என்பர். பத்தாம் நாள் திருவாதிரை நட்சத்திரத்துடன் கூடிய முழுமதி நாள் ஆகும். இந்நாட்களில் திருக்கோயில்களிலே அதிகாலையில் திருப்பள்ளி யெழுச்சி பாடப்படும்.

அதனைத் தொடர்ந்து திருவெம்பாவை பாடப்படும். விசேட பூசைகள், ஆராதனைகளுடன் திருவிழாக்களும் நடைபெறும். சிவன் கோயில்களிலே சிறப்பாக நடைபெற்றாலும், ஊர்கள் தோறும் உள்ள எல்லா ஆலயங்களிலும் பக்தி பூர்வமாகத் திருவெம்பாவை உற்சவங் கள் நடைபெறுகின்றன. சுவாமியுடன், அவரை நேர்முகமாக நோக்கியபடி மணிவாசகப் பெருமானும் வலம் வருவது சில கோயில் களில் காணக்கூடியதாக உள்ளது. மாணிக்க வாசகர் காலத்தின் பின்னரே திருவெம்பாவை உற்சவங்கள் இடம் பெற்று வந்திருப் பினும், இதனுடன் தொடர்பான மார்கழி நோன்பு, பாவை நோன்பு என்பன இந்து மக்களிடையே அதற்கு முன்னரும் பல காலமாக இடம் பெற்று வந்துள்ளன. மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவை; ஸ்ரீ ஆண்டாள் அருளிய திருப்பாவை என்பவற்றி லிருந்தும் இது அறியக் கிடக்கின்றது. நாட்டில்வரட்சி மிகுந்து வளம் குன்றும் போது, மழை வேண்டியும்; சிறந்த உத்தம கணவர்களை பெற்றுக் கொள்ள வேண்டியும், கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் பார்வதி தேவியைக் குறித்து மார்கழி நீராடி விரதம் மேற்கொள்வது பண்டைய வழக்கம்.

மாணிக்க வாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் சிவனைத் தரிசனம் செய்ய வந்த போது, மார்கழி மாதத்தில், கன்னிப் பெண்கள் வழக்கப்படி, பொழுது புலர்வதற்கு முன்னர், வைகறையாமத்தில் துயிலெழுந்து, வீடு வீடாகச் சென்று, தம் தோழியர்களையும் கூவி எழுப்பி அவர்களையும் அழைத்துக் கொண்டு, ஆடியும் பாடியும் கொண்டு, ஆற்றுக்குச் சென்று நீராடிவிட்டு, பார்வதி தேவியின் பிரதி மையை ஈரமணலினால் செய்து வைத்துத் தத்தம் வேண்டுதல்கள் நிறைவேற வழிபாடு செய்யும் பக்திப் பரவசக் காட்சியைக் கண்ணுற்றார் போலும். தாமும் இறைவனைத் துதிக்க விரும்பி தன்னையும் ஒரு பெண்ணாகப் பாவித்து, கண்ணுற்ற நிகழ்ச்சிகளுடன் தன்னையும் இணைத்துக் கொண்டு, நாயகன் நாயகி பாவத்தில் பாவைப் பாட்டுக்களைப் பாடித் தன் நிலையினை வெளிப்படுத்த எண்ணினர் போலும். திருவெம்பாவைப் பாடல்கள் தோன்றின. இவ்வாறு மாணிக்க வாசகரால் திருவண்ணாமலையில் அருளப்பட்ட

திருவெம்பாவைப் பாடல்களை இன்றும் சைவக் கோயில்களில் மார்கழி மாதத்துப் பூர்வ பட்ச ஆறாம் நாள் தொடங்கிப் பூரணை ஈறாகவுள்ள பத்து நாட்களிலும் அதிகாலையில் உள்ளம் உருகப் பாடிப் பரவுவதைச் சைவமக்கள் நியமமாகக் கொண்டுவருகின்றனர்.

திருவெம்பாவைக் காலம் என அழைக்கப்படுகின்ற இப் புண்ணிய நாட்களில், ஆலயங்களில் அதிகாலையில் மாணிக்க வாசக சுவாமிகளால் திருப்பெருந்துறையில் அருளப்பட்ட திருப்பள்ளி யெழுச்சிப் பாடல்கள் முதலில் பாடப்படுகின்றன. இறைவனைத் துயிலெழுப்பும் பாங்கில் இது நடைபெறுகின்றது. ஒவ்வொரு பாடலின் இறுதி அடியிலும், ''எம்பெருமான், பள்ளியெழுந் தருளாயே'' என உள்ளது. அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்துக் காத்து, இயக்கி வருகின்ற இறைவனுக்கு உறக்கம் ஏது? விழிப்பு ஏது? ஓய்வுதான் ஏது? ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாக உள்ள இறைவன் அவன். தில்லையில் ஓயாது, உறங்காது எஞ்ஞான்றும் நடராஜப் பெருமான் திருநடனம் செய்து கொண்டிருப்பதாலேயே இவ்வுலகும் ஏனைய படைப்புக்களும் இயங்கிக் கொண்டிருப்பதாலேயே இவ்வுலகும் ஏனைய படைப்புக்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. துயிலாத இறைவனைத் துயிலுணர்த்து முகத்தால் பாடப்படும் திருப்பள்ளி யெழுச்சி மூலம், மக்களாகிய நாம் நம்மையே துயிலுணர்த்திக் கொள்கின்றோம் என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இவ்வுலகில் யாவும் இறைவன் ஆணைப்படியே நிகழ்கின்றன. எம் செயல்கள் என்று எதுவுமே இல்லை. அவனை வணங்குவதற் குமே அவன் அருள் வேண்டும். எனவே, இறைவன் இட்ட பணியை நிறைவேற்றுவதே எமது கடன். இந்த வகையில் அதிகாலையில் இறைவன் சந்நிதிக்குச் சென்று, வணங்கி எழுந்து, இன்று நமக்கு இடப்பட்ட பணி என்ன என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அவனின் சித்தத்தை அறிந்து, அவன் சித்தப்படியே நாம் செயலாற்ற வேண்டும். எனவே தான் ''பள்ளியெழுச்சியின் உட்பொருள், இறைவன் இடத்திற் சென்று பணிவிடை என்ன என்று கேட்டு, ஆர்வமுடன் செய்தலாகும்'' என்று கொள்ளப்படுகின்றது.

திருப்பள்ளியெழுச்சி பாடிய பின்னர், திருவெம்பாவை இருபது பாடல்களும் முறைப்படி ஓதுவர். ஒவ்வொரு பாடலும் ஓதி முடிந்ததும், சங்கு, சேமக்கலம், மணி ஒலிகள் உடன் மேளம், முரசு

மற்றும் வாத்தியங்கள் ஒலிக்க சுவாமிக்கு தீப ஆராதனை நடைபெறும். பூசையைத் தொடர்ந்து சுவாமி திருஉலா வருதலும் இடம் பெறும்.

பண்டைத் தமிழ் மக்களிடையே, தைந்நீராடுதல் இடம் பெற்றிருந் தமை பழந்தமிழ்ப் பாடல்களிலிருந்து அறியக் கிடக்கின்றது. கன்னியர் தாம் விரும்பும் கணவர்களை அடையும் பொருட்டுத் தைந்நீர் ஆடினர் எனப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இதன் தொன்மை விளங்குகின்றது. வைதீக சமயங்களின் எழுச்சிக்குப் பின்னர், மார்கழி நீராடலாக இது மாற்றம் பெற்றிருக்க வேண்டும். பாவைப் பாடல்பற்றிய இலக்கண விதி தொல்காப்பியத்தில் இடம் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

இதே போன்று பள்ளியெழுச்சி பாடும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகின்றது என்பதைத் தொல்காப்பியம் கூறுகின்றது. பள்ளியெழுச்சி பாவை எனும் இலக்கிய வடிவங்கள் ஏற்கனவே இருந்தபோதிலும், மாணிக்க வாசகர் பாடிய திருப்பள்ளி யெழுச்சியும், திருவெம்பாவையும் முதன்முதலில் எழுந்த ஆன்மீகம் சார்ந்த பாசுரங்கள் எனலாம். மாணிக்க வாசகர் தமது அருளியல் அனுபவங்களை வெளியிடுவதற்கு இவற்றைப் பயன்படுத்திக் கொண்டார். அகப் பொருட் தன்மை வாய்ந்த காதல் நிலைக் குறியீடுகளைக் கையாண்டு தமது நுண்ணிய ஆன்மீக அருளியல் உணர்வுகளை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளார். பிற்கால அருளியற் கவிஞர்கட்கும் மாணிக்க வாசகர் வழிகாட்டியாக அமைந் துள்ளார். சைவ சித்தாந்தத்தை உண்மைகளுக்கு ஓர் இலக்கிய வடிவம் கொடுக்கப்பட்டிருப்பதையும் உணரக் கூடியதாக உள்ளது.

திருவெம்பாவைக் காலங்களில் சிவனடியார்கள் பொழுது புலர்வதன்முன், நீராடி, இறைசிந்தனையுடன், வீதி வீதியாகச் சென்று திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவைப் பாடல்களை இசைத்து, வீடுகளின் வாயில்களில் வெண்சங்கம் முழுங்கும் வழக்கம் நம் ஊர் களில் இருந்து வருகிறது. திருக்கோயில் இல்லாத ஊர்; திருவெண்ணீறு வழங்காத ஊர்; வெண்சங்கு முழங்காத ஊர், என்பவை ஊர்களல்ல அவை அடவி காடுகளே என்று ஆன்றோர் கொண்டனர். நமது முன்னோர்கள் இவற்றையெல்லாம் ஊக்குவித்தனர். ஆனால் தற்காலத்தில் இவை அருகி வருவதை விசனத்துடன் குறிப்பிட வேண்டும். இவை எமது கலாசாரம் என்பதை மறந்துவிடலாகாது.

திருவெம்பாவையின் நிறைவு தினமாகிய திருவாதிரைத் திருநாளில், அதிகாலையில் சிதம்பரத்தில் நடேசர் அபிடேகமும் ஆருத்திரா தரிசனமும் இடம் பெறுகின்றன. ஈழத்துச் சிதம்பரம் எனும் சிறப்புப் பெற்ற காரைநகர்ச் சிவன் கோயிலிலும் திருவாதிரைத் தரிசனம் பக்தி பூர்வமாக நிகழ்கின்றது. ஏனைய கோயில்களிலும் நடராஜப் பெருமானுக்குத் திருவெம்பாவை உற்சவம் அர்ப்பணிக் கப்படுவதைப் பெரும்பாலும் காணக்கூடியதாக உள்ளது. இவ்வுலகில் எத்துணை அல்லல்களும் தொல்லைகளும் நிறைந்திருப்பினும், ''மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்று கூறத் தூண்டியது தில்லை நடராசப் பெருமானின் திருநடனத் தோற்றத்தைக் கண்குளிரக் கண்டு களித்ததன் பின் விளைவேயாகும். ''குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும்; பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்; இனித்த முடனே எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்; மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'' என்பது அப்பர் அருள்வாக்கு. காரைக்காலம்மையார் தொடக்கம் சமய குரவர்கள், அருளாளர்கள் அனைவரும் இந்தத் திருநடனத் தோற்றத்தைக் காண்பதற்கே அவாவி நின்றனர். ''மார்கழி மாதத் திருவாதிரை நாள் வரப்போகுது ஐயே'', என்ற நந்தனின் சிதம்பர தரிசன வேட்கை எத்துணை பெரியது என்பது நந்தன் சரித்திரத்திலிருந்து உணர்ந்து கொள்கின்றோம். மார்கழித் திருவாதிரையின் மகிமையை நோக்கியே, திருஞானசம்பந்த சுவாமிகளும், ''ஆதிரை நாள் காணாது போதியோ பூம்பாவாய்'', என்று விடமேறிய பூம்பாவையை உயிர்ப்பிக்கப் பாடிய பதிகத்தில் குறிப்பிடுகிறார். சைவமக்கள் இத்திருநாளிலே உபவாசமிருந்து பக்தி சிரத்தையுடன் விரதம் அனுட்டிப்பர். சிதம்பரம் சென்று இத்தினத்தில் நடராச தரிசனம் செய்தல் அதி உத்தமமானது. அவ்வாறு செய்ய இயலாதவர்கள் தத்தம் ஊர்களிலுள்ள கோயில்களுக்குச் சென்று நடராச தரிசனம் செய்தல் இன்றியமையாததாகும். திருவெம்பாவைக் காலங்களில் திருக்கோயில்களிலே திருவெம்பாவைப் பாடல்களும் திருவாசகப் பதிகங்களும் தவிர்ந்த ஏனைய திருமுறைப் பாடல்கள் ஓதப்படுவதில்லை. இப்படியான வழக்கம் இருந்து வருகின்றது. திருவாதிரை நட்சத்திரம் பித்தனார் பிறந்த நாள் என்ற வகையிலும் சிறப்புப் பெறுகிறது. பிறப்பு, இறப்பு; தொடக்கம், முடிவு; ஆதி, அந்தம் என்பன இல்லாதவன் இறைவன். ஓர் ஊரும், ஒரு நாமம் இல்லாத அந்தப் பரம்பொருளுக்கு பல உருவங்களைக் கொடுத்து, பல நாமங்களைக் கூறி வழிபடும் சுதந்திரம் அடியவர்களுக்கு உண்டு

என்பதையும் நாம் மறத்தலாகாது. இந்த நிலையில் சிவனுக்குத் திருவாதிரை பிறந்த நட்சத்திரமாகக் கொள்ளப்படுவதும் அடியவர்களின் அன்பையும், சுதந்திர உணர்வையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது எனலாம். மாதந்தோறும் வருகின்ற திருவாதிரை நாட்களும் சிவ வழிபாடிற்கு உவந்தவை. இவற்றுள் மார்கழித் திருவாதிரை மிகுந்த சிறப்பைப் பெற்றுள்ளது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும் சித்திரை மாதத்துத் திருவாதிரை நாளிலேயே திருவவதாரஞ் செய்தார் என்பதும் நினைவிற் கொள்ளற்பாலது. சேக்கிழார் சுவாமிகளும் அறுபத்து மூன்று திருத்தொண்டர்களின் வரலாற்றினைக் கூறும் பெரிய புராணத்தைப் பாடத் தொடங்கியதும் ஒரு சித்திரை மாசத்துத் திருவாதிரை நாளிலேயேயாகும்.

இனிச் சற்றுத் திருவெம்பாவைப் பாடல்களுள் புகுந்து பார்ப்போம். இந்த உலகியல் வாழ்க்கையில் முற்றுமுழுதாகப் பற்றுக் கொண்டு உலக இன்பங்களை அனுபவிப்பதற்கென்றே உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்களே இவ்வுலகில் காணப்படுகின்றனர். இனியவை, அழகானவை, இதமானவை, இன்பமானவை, சுகமானவை, சொகுசானவை என்று எண்ணப்படுபவற்றையே இவ்வுலகில் தேடி, நாடி அடைந்து, அளவற்ற பற்று வைத்து வாழவே அல்லும் பகலும் மக்கள் ஓயாது உழல்கின்றனர். மனமும், புலன்களும் இவற்றிற்குத் துணையாக நிற்கின்றன. மனம் புலன்கள் காட்டும் வழிகளில் சென்று அலைகின்றது. புலன்களைத் திருப்திப்படுத்தி மகிழ்விப்பதே நோக்கம். பஞ்சப்புலன்களும் வஞ்சனையே செய்கின்றன என்பதை உணர்ந்தார்களில்லை. மனித மனம், விலங்கு மனமாகி விடுகின்றதே என்பதைத் தெளிந்தார்களில்லை. சுருங்கக் கூறின் உலகப் பற்றுக்களிலிருந்து விடுபட முடியாதவர்களாக மக்கள் உள்ளனர். இதுவே அவர்களின் ஆற்றாமை நிலையாகும். அறியாமையே இந்த ஆற்றாமைக்குக் காரணம். கல்வி, கேள்வி அனுபவம், உள்ளுணர்வு மூலம் அறிவு பெற்று அறியாமையை அகற்ற முடியுமோ வெனில், அப்படி அறிவு பெற்றவர்களால் கூட நிரந்தரமாக அறியாமையை விலக்க முடியாதிருப்பதைக் காண முடிகிறது. மாணிக்கவாசகர் போன்ற அருளாளர்களும் அகப் போராட்டங்களுக்குட்பட்டுத் தவித்துள்ளமை அவர்களின் பாடல்களிலிருந்து தெரிய வருகின்றது. ஈற்றில் திருவருட சக்தியின் துணையுடனேயே அறியாமையை அழித்து, உலகப் பற்றுகளை நீக்கி, பேரறிவும் பேரொளியும்

பேரின்பமும் ஆகவுள்ள இறைவனுடன் சார்ந்து கொள்ளமுடியும் என்பதை அருளாளர்கள் தெளிந்தனர். மனங்களைப் புலன்வழி செல்லாது தடுத்து, இறைவழிச் செல்ல ஆற்றுப்படுத்துவது திருவருட் சக்தி. இதனை, மாணிக்கவாசகப் பெருமான் திருவெம்பாவைப் பாடற்தொடரில், ''பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன், பாதத்திறம்பாடி ஆடேலோரெம்பாவாய்'' எனத் திருவருட்சத்தியை ஏற்றிப் போற்றுவதாக அமைத்துள்ளார்.

திருவெம்பாவையில் வருகின்ற தலைவி, முதல்நாள் தம் தோழியர்களை அதிகாலையில் தாமே வந்து துயிலெழுப்புவதாகக் கூறியவள்; மறுநாள் அவ்வாறு செய்யாதது மட்டுமல்ல, தம் தோழியர் வந்து எழுப்பியும், மலர்ப்படுக்கையைவிட்டு எழ மனமில்லாதவளாக மெய்மறந்து விம்மி விம்மித் தவிக்கின்றாள். ''வன்செவியோ நின் செவிதான்'' என்றும் ''இரவும் பகலும் எம்மோடு அளவளாவும் போதெல்லாம், நீ உன்னுடைய பற்று, அன்பு எல்லாம் உண்மைப் பொருளான ஒப்பற்ற இறைவனுக்கே என்று கூறுவாய்; ஆனால், இப்போது மெய்யாகிய தலைவனை மறந்து, இம் மலர்ப் படுக்கைக்கும் அது தரும் அற்ப சுகத்திற்குமே நேசமும் வைத்த னையோ, நேரிழையாய்.'' என்றும் இன்னும் துயிலெழாத தலைவி யைக் கேட்கின்றனர். மனித இயல்பும், பொய்யுக்கும் மெய்யுக்கு மிடையிலான மன ஊசலாட்டமும் இங்கு உணர்த்தப் படுகின்றது.

திருவெம்பாவையில் துயிலுணர்த்தல் என்பது ஆன்மாக்களை உலகப் பற்றுக்களினின்றும் விடுவித்தல் ஆகும். திருவருட்சக்தியின் துணையினால் ஆன்மாக்கள் பொய் கெட்டு, மெய்யாகின்றன. அதாவது சிவமயமாகின்றன. திருவெம்பாவைப் பாடல்கள் உணர்த்தும் உட்பொருளை தெளிந்து உய்வு பெறுவோமாக.

# 33. கிராமியத் தெய்வ வழிபாடு

சைவமக்களிடையே காணப்படுகின்ற வழிபாட்டு முறைகள், பண்டிகைகள், விரதங்கள், சமய அநுட்டானங்கள், பாரம்பரியங்கள், நம்பிக்கைகள் என்பன மக்கள் சமய, சமூக, கலாசார, விழுமிய உணர்வு பெற்று, மனிதப் பண்புகளுடன் செம்மையான வாழ்க்கையை இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குப் பெரிதும் உறுதுணையாக அமைந்து வந்துள்ளன. மனித வாழ்க்கைக்குச் சுவையும், உறுதியும், வளமும், வனப்பும் அளித்து வந்துள்ளன. இவற்றில் பற்றுவைப்பதும், பங்கு கொள்வதும் அறிவுடைமையாகும். இவற்றைத் தளர்த்தி விடுவதும், தள்ளி வைப்பதும்தான் அறிவீனமாகும். மூடநம்பிக்கைகள் என்று இவற்றைக் கொள்வதன் மூலம் நம் முன்னோர்கள் அளித்த அரும்பெரும் சமய, பண்பாட்டுக், கலாசாரச் செல்வங்களை உதறித்தள்ளி உதாசீனம் செய்தவர்கள் ஆவோம். நாம் நாமாக வாழமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். இப்பண்டிகைகள், பாரம்பரியங்கள், வழிபாடுகள் அனைத்தும் மக்கள் வாழுகின்ற பிரதேசச் சூழல், பருவகாலங்கள், செய்யுந்தொழில்கள், சமூக பொருளாதார நிலைமைகள் ஆகியவற்றுடன் இணைந்தும், இசைந்தும், பொருத்தப்பாடு உடையவனவாகவே வளர்ந்து வருகின்றன. அவற்றின் நீண்ட காலத் தொடர்ச்சிக்கும், நிலை பேற்றிற்கும், மக்களை அவை ஈர்த்துக் கொண்டமைக்கும், மக்களின் வாழ்க்கையோடு இவ்வாறு கலந்து விட்டமையே காரணமாகின்றது எனலாம். மக்களின் கலாசார தனித்துவத்தினை இனங்காட்டுவதும் இச்செல்வங்களே. எனவே இவற்றை அறிந்து கொள்வதும் பேணி வளர்ப்பதும், பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்கு அளிப்பதும் நமது கடமையாகும்.

சைவாலயங்கள் அமைத்து, தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து, முறைப்படி நித்திய, நைமித்திகப் பூசைகள், கிரியைகள் செய்வித்து, வழிபாடு செய்யும் முறை தொன்று தொட்டு இருந்து வருகிறது. வேத சிவாகமங்கள் இவற்றின் விதிமுறைகள் பற்றிக் கூறுகின்றன. புராண இதிகாசங்கள் இவற்றை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவான விளக்கங்களைத் தருகின்றன. தேவாரத் திருமுறைகள் இவற்றை வளம்படுத்தியுள்ளன. இத்தகைய வழிபாட்டு முறையினை வைதிக மரபுவழி முறையெனக் கூறலாம். இம்முறை வேத சிவாகம விதிகளை அநுசரித்து வருவதால் சைவ உலகனைத்திலும்

வேறுபாடின்றிக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.

நியமமான வைதிக மரபு உலகளாவிய நிலையில் இருக்கப் பிரதேச நிலைகளில் அப்பிரதேசங்களுக்கே உரிய பாரம்பரிய வழிபாட்டு முறைகளையும் காணக்கூடியதாக உள்ளன. வைதிக மரபு போன்று, இப்பிரதேச முறைகளில்ஆகமவிதிகள் முற்று முழுதாகப் பின்பற்றப் படுவதில்லை. திருக்கோயில் அமைப்பிலும் சரி, பூசை வழிபாடுகளிலும் சரி, ஆகம விதிகள் அவ்வளவு இடம் பெறுவதில்லை. ஆங்கு பக்தி, பரவசம், ஆவேசம், நம்பிக்கை என்பன முக்கிய இடம் பெறுகின்றன. பெரும் கட்டட அமைப்பு, கோபுரங்களுடன் கூடிய கோயில்களாகப் பெரும்பாலும் இருப்பதில்லை. இங்கு வணங்கப்படும் தெய்வங்கள் பெருங்கோயில்களில் குடியிருக்க விரும்புவதில்லை என்ற ஐதீகமும் மக்களிடையே பரவியுள்ளது. சிறிய கோயில்கள், குடில்கள், மரநிழல், ஆற்றங்கரை, வீதியோரம் ஆகியவற்றில் அமர்ந்து அருள் பாலிப்பதையே இத் தெய்வங்கள் விரும்புகின்றன. மூர்த்தி தலம் சிறிதாக இருப்பினும் கீர்த்தி, அருள் பெரிதாகவே உள்ளன என்பது மக்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையிலேயே இயற்கையின் சீற்றங்களிலிருந்தும்; கொடிய விலங்குகள், நச்சரவங்கள், மனித எதிரிகள் ஆகியோரின் தாக்குதல் களிலிருந்தும்; இயற்கைக்கு அப்பாற்பட்டதும் மனித அறிவிற்குள் அகப்படாததுமான பல்வேறு சக்திகளின் தாக்கங்களிலிருந்தும்; நோய்கள், மூப்பு, இறப்பு ஆகியவற்றின் துன்பங்களிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொண்டு மக்கள் உறுதியோடு வாழ்ந்து வந்துள்ளனர். தெய்வ பக்தியும், அசையாத நம்பிக்கையும், வழிபாடும், மன உறுதியுமே, விஞ்ஞான தொழில் நுட்பமும் மருத்துவ வசதிகளும் அற்ற காலங்களில் மக்களை வாழ்வித்து வந்துள்ளன; இன்றும் வாழ்வித்து வருகின்றன.

ஊர்கள் தோறும், ஆகம நெறிப்படி பூசைகள் வழிபாடுகள் நடைபெறாத, ஆனால், பயபக்தியோடு மக்கள் நேரடியாகப் பொங்கல், படையல், மடை என்பவற்றினைச் செய்து அன்புள்ளத் தோடும் அசைக்க முடியாத நம்பிக்கையோடும் வழிபாடு செய்யும் கோயில்கள் நிறைய உள்ளன. இந்தக் கிராமியக் கடவுளர் வரிசையில் வைரவர், வீரபத்திரர், நாகதம்பிரான், ஐயனார், பெரியதம்பிரான், அண்ணமார் ஆகிய ஆண் தெய்வங்களும்; காளி, கண்ணகி, திரௌபதி, பத்தினி, நாச்சிமார், வராகி, துர்க்கை ஆகிய பெண் தெய்வங்களும்இடம் பெறுகின்றன. இவற்றுட் சில இன்று

கும்பாபிஷேகவும் நடாத்தப் பெற்று ஆகம நெறிப்படி அமைக்கப்பெற்ற கோயில்களில், ஆகம விதிப்படி சிவாச்சாரியார்களால் நித்திய நைமித்திகப் பூசைகள் நடாத்தப் பெறும் கோயில்களாகப் புனருத் தாரணம் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு செய்யப்படும்போது கிராமியத் தெய்வப் பெயர்கள் நீக்கப் பெற்று, வேத சிவாகம நெறியில் கூறப்பட்ட கடவுளர்களாக மாற்றப்பட்டு பிரதிஷ்டை செய்து கும்பா பிஷேகம் நிகழ்த்தப்படுகிறது. இதனால் வைதிக மரபு நிலைநாட்டப் படுகிறது. பிரதேச மரபு வழிபாட்டு முறைகள் மறைந்து போக இந்நிலைமை வழி வகுக்கின்றது.

பிரதேச மரபு வழிபாட்டு முறைகளை அநுசரித்துப் பங்குனி மாதத்தில் அம்பாள் கோவில்களில் பொதுவாகவும் கண்ணகி அம்மன் கோவில்களில் சிறப்பாகவும் நடைபெறும் பங்குனித் திங்கள் உற்சவம், பூசை வழிபாடுகள், குளிர்த்தி என்பவை பற்றிச் சிறிது சிந்திப்போம்.

பங்குனி மாதத்தில் வருகின்ற திங்கட்கிழமைகள் அம்மன் வழிபாட்டிற்குச் சிறந்த நாட்கள். பங்குனி மாதம் வெயில் வெப்பம் நிறைந்த வேனிற்காலமாதம். ''பங்குனி மாதம் பகல் வழி நடப்பவனைப் பார்த்திருப்பவனும் பாவி'' என்ற கூற்றிலிருந்து பங்குனி வெப்பத்தின் கடுமையை உணர்ந்து கொள்ளலாம். வெப்பம், வியர்வை, புழுக்கம் காரணமாக உடல் நோய்களும், தொற்று நோய்களும் பரவுகின்றன. அம்பாளுக்குக் குளிர்த்தி செய்து வழிபடுவதன் மூலமே கொடிய நோய்களின் கோரப்பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பது மக்களின் நம்பிக்கையாக இருந்துவருகிறது. பங்குனித் திங்கள் வழிபாடு குளிர்த்தி வேண்டி நிகழ்த்தப்படுகிறது.

பொங்கல், மடை, படை, ஆகியவற்றிலும் குளிர்ச்சியான வையும், இனிப்பானவையும் இடம்பெறுகின்றன. காரம், உப்பு என்பன தவிர்க் கப்படும் வழக்கமும் காணப்படுகின்றது. தயிர்ச்சாதம், பாற்பொங்கல், சர்க்கரை, அமுது, நீர்ச்சோறு, பழங்கள், வெற்றிலை, பாக்கு என்பனவே படைத்து நிவேதிக்கப்படுகின்றன. கறிவகை களுக்கு உப்பும், உறைப்பும் அறவே சேர்க்கப்படுவதில்லை. குளுமையான மலர்கள், இலைகள் என்பவற்றால் அர்ச்சிக்கப் படுகின்றாள். குளிர்ந்த நீர், பால், தயிர், தேன், சந்தனம், குங்குமம், பழங்கள் ஆகியவற்றினால் அம்பாளுக்கு அபிடேகம் நிகழ்த்தப்படுகிறது. அம்மனுக்கு ஆராதிக்கப்படும் வேப்பிலை

குளுமை நிறைந்தது.

நோய்களைத் தடுப்பதற்கும் வெம்மையைத் தணிப்பதற்கும் அன்னையின் அருள் வேண்டி நிற்பதோடு, அந்த ஆண்டின் நெல் அறுவடை பூர்த்தி செய்யப்பட்ட பங்குனி மாதத்தில் நன்றிக் கடனாகப் புதிய அரிசியில் பொங்கல் செய்து படைக்கின்றார்கள் விவசாயப் பெருங்குடியினர். பட்டி பெருக வேண்டியும், நெல் பொலிய வேண்டியும், கால் நடைகளுக்கும் நெற்பயிர்களுக்கும் ஏற்படும் நோய்களும் பீடைகளும் நீங்க வேண்டியும் அம்பாளுக்குச் செய்த நேர்த்திக் கடன்கள் யாவும் இந்துக்களின் ஆண்டு இறுதிமாதமான பங்குனியில் பொங்கல், மடை, பூசைகளால் நிவிர்த்தி செய்யப்படுகின்றன. பொங்கல் பிரசாதங்களும், அன்னதானங்களும் கிராமத்து மக்களுக்கு வழங்கப்பட்டு அவர்களின் பசிப்பிணி போக்க வழி செய்யப்படுகிறது.

பங்குனித் திங்கள் அம்பாள் வழிபாடு சிறப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள கண்ணகி அம்மன், முத்துமாரி அம்மன் ஆலயங்களிலேயே சிறப்பாக அனுட்டிக்கப்படும் வழக்கம் இருந்து வருகிறது. மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோயிலில் நாட்டின் நாலா பக்கங்களிலிருந்து வந்து பங்குனித் திங்கட்கிழமைகளில் பொங்கல் செய்து வழிபாடு செய்யும் காட்சி பக்திப் பரவசம் நிறைந்தது. சுட்டிபுரம், மண்டுவில், கச்சாய் ஆகிய தென்மராட்சியைச் சேர்ந்த இடங்களிலும் வடமராட்சியில் சில இடங்களிலும் கண்ணகி வழிபாடு நடைபெற்று வருகின்றது. கரைச்சிப்பிரிவில் பொறிக்கடலை, முல்லைத்தீவில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில்களும் பிரசித்தி பெற்றவை. வற்றாபளை கண்ணகி அம்மனுக்கு வைகாசி விசாகத்தை அண்டிய திங்கட்கிழமையிலேயே பொங்கற் பெருவிழா நடைபெறுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் கோவில்களிலும் வைகாசி விசாகப் பௌர்ணமியை அண்டிய காலத்திலேயே பொங்கல் விழாவும், சடங்கும் நடத்தப்படுகின்றன. தென்னிலங்கையிலும் பத்தினித் தெய்வம் என்ற பெயரில் கண்ணகி வழிபாடு இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் கண்ணகி வழிபாடு அல்லது பத்தினி வழிபாட்டு மரபு முதலாம் கஜபாகு மன்னன் காலத்திலிருந்து இடம் பெற்று வருவதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். சேரமன்னன் செங்குட்டுவன், கண்ணகி தெய்வத்திற்குச் சிலைநிறுவி விழா எடுத்தபோது ஆங்கு வருகை தந்த மன்னர்களுள் இலங்கை மன்னன் கஜபாகுவும் ஒருவன். அம்மன்னனே இலங்கையிலும் கண்ணகி வழிபாட்டிற்கு வழிகோலிய

தாக அறியக் கிடக்கின்றது.

பங்குனித்திங்கள் வழிபாட்டு முறையில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் முறை அற்புதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. நோய்களை நீக்குதல், திருமணம் ஒப்பேறல், செய்யுந் தொழில்களில் சித்திபெறல், பிள்ளைக்கலி தீர்த்தல், அவமிருத்துக் களைத் தவிர்த்தல், கால்நடைகளுக்கு ஏற்படும் பீடைகளை அகற்றுதல், பேய்களின் இலக்குகளிலிருந்து விடுபடல், வழக்குகளில் வெற்றி பெறல், சோரபயம் நீங்குதல் என்பனவற்றிற்காக மக்கள் அம்பாளுக்கு நேர்த்தி வைக்கின்றார்கள். கைமேற் பலன்களும் கிட்டுகின்றன. வேண்டுகோள்கள் நிறைவேறும் பட்சத்தில் அவர்கள் நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றப்படுகின்றன. தெய்வத்திற்கு பின்வருவனவற்றை நிவேதனம் செய்கின்றனர். பொங்கல், மடை, காவடி, கரகம், முள்ளுமிதி யடியில் நடத்தல், மங்களப் பிரதிட்டை செய்தல், தீ மிதித்தல், அடியளித்தல் என்பன இவற்றுட் சில. நாணயங்களை உண்டியலில் இடுதல், அள்ளுகாசும் தென்னம் பிள்ளையும் வழங்கல்; தங்கம் வெள்ளி உலோகங்களினால் பிள்ளைத் தொட்டில், கண்மடல், பாதங்கள் செய்து காணிக்கை வழங்குதல்; அரிசி, நெல், தேங்காய், பசு, என்பன பொருள் நிவேதனங்களாக வழங்கப் படுகின்றன. காணிகள், வயல்கள் கூட ஒரு காலத்தில் காணிக்கையாக வழங்கப்பட்டன. ஆடல், பாடல், கூத்து ஆகிய கலைகளும் நிவேதனம் செய்யப்படும் வழக்கம் காணப்படுகிறது. காத்தவராயன் கூத்து, கண்ணகி வழக்குரை காதை, மாரியம்மன் தாலாட்டு, என்பன நிகழ்த்தப்படுகின்றன. இவை கலையுணர்வுகளை மக்களிடையே ஏற்படுத்துவனவாக விளங்குகின்றன.

சமூக ஒழுக்கத்திற்கும், கட்டுப்பாட்டை வளர்ப்பதற்கும், நீதி வழங்குவதற்கும் கிராமிய தெய்வசந்நிதிகள் பெரிதும் உதவின. பெண்தெய்வங்களான கண்ணகி, துர்க்கை, காளி ஆகியவை துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்பவை. தீமையையும், தீயவர் களையும் அழிக்க இப்பெண் தெய்வங்கள் தயக்கம் காட்டமாட்டா என்ற நம்பிக்கையும், அதேவேளை நன்மையையும், நல்லவர்களை யும் காப்பாற்ற இத் தெய்வங்கள் முன்னிற்பவை என்ற திடசித்தமும் மக்கள் மனதில் நிறைய இருந்தன. இதனால் மக்கள் பழி பாவங்களைப் புரிய அஞ்சினார்கள்; தெய்வம் நிண்டறுக்கும் என்ற பயத்தினால் பொய் கூறவும், களவெடுக்கவும், சமூக நிறுவனங்களின் தீர்ப்பு பிணக்கைத் தீர்ப்பதில் ஓரவஞ்சகமாக இருந்தால் தெய்வத்தின்.

தீர்ப்புக்கு விடப்பட்டது. சத்தியம் செய்தல் மிகக் கவனமாகச் செய்யப் பட்டது. பொய்யுரைத்துத் தெய்வத்தின் சீற்றத்திற்கு ஆளாக எவரும் விரும்பமாட்டார்.

ஆன்மீக வாழ்விற்கும், சமூக நீதிக்கும், பொருளாதார சுபீட்சத்திற்கும், சமூக நலம் பேணுவதற்கும், சகலவித கலைகளின் வளர்ச்சிக்கும், கிராமியப் பண்பாட்டு உயர்விற்கும், கிராமியக் கோயில் வழிபாட்டு முறை மக்களுக்குப் பெரிதும் உதவிவந்துள்ளன.

சங்க நூல்களில் கொற்றவை என்ற பெண் தெய்வ வழிபாடு பற்றிக் கூறப்படுகின்றது. தமிழ் மக்களிடையே அன்னை வழிபாடு தொடங்கியது. ஆவேசம் கொள்ளுதல், பக்தி பரவசத்திற்குள்ளாதல், ஆடுதல், கட்டளை சொல்லுதல், பார்வை பார்த்தல், திருட்டிகழித்தல், நூல்கட்டுதல் முதலானவை தெய்வ சந்நிதிகளில் நடைபெற்று வந்தன. தலைமுறைகள் தோறும் மரபு முறைகள் கையளிக்கப்பட்டு வந்தன. உடுக்கு, பறை, சங்கு, மத்தளம், முரசு, குழல் போன்ற வாத்தியங்கள் முழங்கப்பட்டு மக்களின் பக்தி பரவசம் பெருக்கப்பட்டது. கூத்துக்களும், நாடகங்களும், நடனங்களும், இசையும் கோவில் உற்சவங்களின் போது இரவு முழுவதும் நடைபெற்றன. இவை எல்லாம் கிராமிய வாழ்வினைப் புனிதப்படுத்த உதவின. கிராமியக் கோயில்கள் கிராமியப் பண்பு வளர்ச்சிக்கு நிலக்களனாக விளங்கியது. கிராம மக்கள் ஒற்றுமையாக, வாழ்வாங்கு வாழ பேருதவியாக இருந்தன. பிறந்த குழந்தையை நாற்பத்தோராம் நாள் கோவிலுக்கு எடுக்குதல் தொடக்கம் முடியிறக்குதல், சோறு தீர்த்துதல் அல்லது அன்னப் பிராசனம் செய்தல், காது குத்துதல், ஏடு தொடக்குதல், திருமணம் போன்ற மனித வாழ்க்கையில் இடம் பெறுகின்ற சகல நிகழ்ச்சிகளும் தெய்வ ஆசியுடன் தெய்வ சந்நிதானத்தில் நடத்தப் பெற்று வந்தன. காலகதியில் இவை மக்களின் கலாசாரமாக வளர்ந்து வந்தன. கிராமங்கள் செழுமையும் பொலிவும் பெற்று விளங்கி வந்தன. அண்மைக் காலங்களில் வெளியார் செல்வாக்கினாலும்; பகுத்தறிவு, மனச்சாட்சி, என்ற காரணங் களினாலும், விஞ்ஞானப் பண்பாட்டினாலும் கிராமியப் பண்புகளும், தெய்வ நம்பிக்கையும், வழிபாட்டு மரபுகளும் அருகிவருகின்றன. இதனால் கிராமங்கள் பொலிவிழந்துள்ளன. இழந்துவிட்ட பண்புகளுக்கு ஈடாக வந்த பகுத்தறிவு, மனச்சாட்சி, விஞ்ஞானம் ஆகியவற்றினால் மக்களின் அத்தியாவசிய தேவையான சாந்தி, சமாதானம், நிம்மதி, ஐக்கியம், அமைதி வாழ்வு ஆகியவற்றை

ஏற்படுத்த முடியவில்லை. காலங்காலமாக மக்களை நல்ல வண்ணம் வாழ்வித்து வந்த மரபு முறைகளுக்கு மாற்றீடாக இக்கால முறைகள் அமையவில்லை. நாடளாவிய முறையில் இருந்து வந்த கிராமியப் பண்புகள், தெய்வ நம்பிக்கை, சமூகக் கட்டுக்கோப்பு என்பன தளர்ச்சியடைய விடாது, பேணப்பட வேண்டும். இவற்றிற்குப் புத்துயிர்ப்பு அளித்து மறுமலர்ச்சி காணவேண்டும். அப்பொழுது தான் மக்களிடையே அன்பு, வாய்மை, பணிவு, மனிதாபிமானம், ஒப்புரவு, சமூகநீதி என்பன காணப்பட்டு வாழ்க்கையில் அமைதி, சாந்தி, சமாதானம் தோன்றும். மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கும் நலமாக வாழ்வதற்கும் இவை பெருந் துணையாக அமையும்.

# சைவ விழுமியங்கள் –
# விரதங்களும் விழாக்களும்

மனித வாழ்க்கையில் சமயம் உயிர்ப்புடன் வாழவேண்டும் சமயமே வாழ்க்கை; வாழ்க்கையே சமயம்.

இந்நிலை எய்தப்படும் போதே, சமயம் வாழ்கிறது எனலாம். சமயம் சமூகத்தோடு இணையவேண்டும்.

சைவம் ஒரு தத்துவம்; ஒரு சமயம்; ஒரு வாழ்வியல் நெறி. இம் மூன்றினதும் ஒருங்கிணைந்த, சம நிலையான வளர்ச்சியிலேயே சைவ சமயம் முழுமைத்துவம் அடைகின்றது. தத்துவம் செயலாக வேண்டும்.

சமயம் மனித ஒழுக்கமாக வேண்டும். வாழ்வியல் நெறியில் வாழ்வு மலர வேண்டும். சமயம், ஆன்மீகம் வாழ்க்கையோடு செறியும் போது, வன்மம் மறைந்துவிடும். உண்மை, நீதி, அன்பு, அறம், சாந்தி, சமாதானம், அமைதி முதலியனவெல்லாம் உலகில் மலர்ந்துவிடும்.

விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள் என்பன சைவ சமய வாழ்வின் இன்றியமையாத அங்கங்கள்.

*ஆசிரியரின் முன்னுரையிலிருந்து*